ஆரம்பக் கல்வி

பாகம், 1

1934

T15m 211, N33
N34.1.9
190334

1226 6


# ஆரம்பக்கல்வி

# ELEMENTARY EDUCATION

10 JUN 19
MADRAS

## பொருளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 331 |
| சேம்பியன் ஸ்கீம் | 332 |
| ஸ்கீமை ஏன் எதிர்க்கவேண்டும் | 339 |
| கோஹினூரின் வரலாறு | 342 |
| யார் ஆசிரியர்? | 344 |
| பெற்ஷேூர் விரும்பும் கல்வி | 347 |
| தன்னடக்கம் | 351 |
| உதய குமாரன் | 355 |
| கௌமார குருகுலம் | 359 |
| ஆரம்பக்கல்வியில் சீர்திருத்தம் | 363 |
| சைவ சமயம் | 371 |
| நமது பத்திரிகை | 372 |
| இந்தியாவின் ஜாதி முறை | 374 |
| சாக்கிரட்டீஸும் சங்கராலிங்கமும் | 383 |

190334

உள் நாடு விலை அணா 1½ மலர் 9, 10. வெளி நாடு விலை அணா 3

# "ஆரம்பக் கல்வி"

## சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட | | | |
| இந்தியா, பர்மா, சிலோன், | 1 | 0 | 0 |
| வெளி நாடுகளுக்கு .... .... | 2 | 0 | 0 |

குறைந்த சந்தாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கெனவே உழைத்து வரும் சஞ்சிகை. ஆரம்பக் கல்வியில் உழைத்துவரும், ஆசிரிய மானேஜர்கள், தாலூக்காபோர்டு, முனிசிபாலிடி ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மிஷன் பாடசாலை, பஞ்சாயத்து பாடசாலை ஒருவித உபகாரமும் பெறாத பாடசாலைகள், ஆண் பாடசாலை பெண் பாடசாலை, ஆகிய எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று படுத்தும் "ஆரம்பக் கல்வி" என்னும் இந்த சஞ்சிகையின் மூலமாய் தத்தம் குறைகள் நீங்கி, ஆரம்பக்கல்வி யாசிரியர்களும், காலச் சக்கரத்தின் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதே நமது நோக்கம். ஆகையால் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களை நிருவகிக்கும் ஸ்தாபனங்களும் நமது சஞ்சிகையை ஆதரித்து பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி ஆசிரியர் பகுதி, கல்வி வளர்ச்சி, என்ற பகுதியின் கீழ் விஷயதானமும், பொருளுதவியும் செய்து வளர்த்த வேணுமாய்க் கோருகிறேன்.

இங்ஙனம்:
பத்திரிகை, ஆசிரியர்.

## விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| முழுபக்கம் ஒரு தடவைக்கு ரூ. | | 10 | 0 | 0 |
| அரை பக்கம் ,, | ,, | 5 | 0 | 0 |
| கால் பக்கம் ,, | ,, | 3 | 0 | 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்

10 JUN 1935

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள், அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர்:- பி. வீரராகவன்
(ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்)

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர், 1. | ஸ்ரீமுகவருஷ மாசிமீ 1934வருஷ பிப்ரவரி | இதழ், 9.

## கடவுள் வணக்கம்.

கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குணமொன்று மொன்றிலேன்பால்
கோரமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடியபாழ்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை
கதிக்கென் றமைத்த வருளில்
செல்லாமை யெத்தனை விர்தாகோஷ்டி யென்னிலோ
செல்வதெத் தனைமுயற்சி
சிந்தையெத் தனைசலன மிந்த்ரஜா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சை முதலா
அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
யானே னிவைக்குமாளோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

# சேம்பியன் ஸ்கீமும், கனம் கல்வி மந்திரியவர்களும்

## துப்பாக்கி முனையில் அமுலுக்கு கொண்டுவரப் போவதில்லையாம்.

---

கடந்த நான்கு மாதங்களாக ஆரம்பக் கல்வி யுலகில் சேம்பியன் ஸ்கீமைப்பற்றி ஓர் பெரும் குழப்பம் உண்டாகி இருக்கின்றது. சிலர் ஸ்கீமையே தலையெடுக்க வொட்டாமல் அடிக்கவேண்டுமென்கிறார்கள். சிலர் ஓரே நொடியில் புதைத்துவிடவேண்டாம், அனுகூலமுள்ள சில இடங்களில் அதை அமுலுக்குக் கொண்டுவந்து அதன் சாதகபாதகங்களை கண்டுபிடித்து பிறகு அதை முடிவுகட்டலாமென்கிறார்கள். அனுபவ மில்லாத சில பெரிய மனிதர்கள் இந்த ஸ்கீம் வெகு அழகாக அதிக சிரமத்துடன் சேம்பியன் துரையவர்கள் எழுதி இருக்கின்றார் அதில் நம்து நாட்டிற்கு ஒரு சமயம் அதிக பயன் கொடுத்தாலும் கொடுக்குமென்கிறார்கள். சில தேசீய வாதிகள் ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஒருவர் எழுதிய ஒரு திட்டம் நமது இந்திய நாட்டிற்கு எவ்விதத்திலும் ஒத்துவராதென்கிறார்கள். இது ஒரு சமயம் தப்பித்தவறி அமுலுக்குவரின் அதை நடத்தப் போகின்ற ஆரம்பாசிரியர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்றால், இந்த திட்டம் அமுலுக்கு வந்தாலும் சேம்பியன் துரை எழுதிய காகிதத்தின் அளவில் நிற்குமே யொழிய காரியத்தில் நடத்தவே முடியாது, அரசாங்கம், நினைக்கின்ற அவ்வளவு பணச்சிக்கனமும் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியும், அடையாதென்கிறார்கள். இந்த ஆரம்பாசிரியர்கள் சொல்கின்ற உண்மைக் கருத்தைத்தான், கல்வி மந்திரியாக விருந்த திரு ஸர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் கடந்த சட்ட சபையில் தெளிவாக எடுத்துக் கூறினார். ஆனால் தற்போதுள்ள கனம் கல்வி மந்திரியவர்கள் என்ன சொல்கின்றார் என்று சற்று கவனிப்போம். 1929ஆம் நாங்கள் சேம்பியன் துரையவர்கள் செய்த திட்டத்தை லோகல் போர்ட், முனிசிபாலிடி முதலிய ஸ்தலஸ்தாபனங்களுக்கு அனுப்பிவைத்து தங்கள் தங்கள் தாலூக்காக்களில் அமுலுக்கு கொண்டுவரும்படி உத்திரவிட்டோம். அதற்கு ஒரு போர்டாவது, முனிசிபாலிடியாவது சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. ஆதலின் எங்கள் ஏஜெண்டுகளாகிய கல்வி யதிகாரிகளைக் கொண்டு இத் திட்டத்தை அமுலுக்கு கொண்டுவர பல ஏற்பாடு செய்யும்படி அறிக்கை செய்திருக்கின்றோம். அவ்வித அறிக்கையில் எந்த எய்டட் பாடசாலையையும் இந்த திட்டத்தில் சேரும்படி தொந்திரவு செய்யக்கூடா

190334



தென்றும், இஷ்டமானால் யாதொரு நிபந்தனையில்லாமல் இத் திட்டத்தில் சேரலாம், இல்லையேல் தனிப்பட நின்று விடலாமென்று வற்புறுத்தியிருக்கின்றோம். ஆதலின் கேதலிக் சபையோர்களோ, மற்ற எந்த எய்டட் ஏஜென்ஸிகளோ இதைப்பற்றி அதிக கவலைப்பட வேண்டியதில்லை. இந்த திட்டத்தை 144 செக்ஷனைப்போல் துப்பாக்கி முனையில் அமுலுக்கு கொண்டு வரப்போவதில்லை அவ்விதம் அரசாங்கம் செய்யுமாகில் ஆரம்பக் கல்வியாகிய கடிகாரச் சக்கரத்தின் பற்கள் உடைந்து கடிகாரமே போகாமல் நின்றுவிடுமென்பதை அரசாங்கம் நன்கு அறியும், ஆதலின் இத் திட்டத்தைப்பற்றி எந்த ஏஜென்ஸிகளுக்கும் விசாரம் வேண்டாம். இந்திய நாட்டுக் கல்வி அபிவிருத்திக்கு இந்த கிருஸ்தவ மிஷனரிகள் செய்துவரும் ஒவ்வொரு வேலையும், தியாகமும், எனக்கு நன்றாகத்தெரியும், ஆதலின் இந்த திட்டத்தை எங்கெங்கு சாதகமாயிருக்கின்றதோ அந்தந்த இடங்களில்தான் திட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக அமுலுக்குக் கொண்டுவந்து பரிட்சிக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் அபிப்பிராய மென்பதாக ஓர் அருமையான சொற்பொழிவை சட்ட சபையில் (22-3-34)ல் நிகழ்த்தினார்.

இப் பிரசங்கத்தை கவனிக்கும்பொழுது நமது ஆரம்பக் கல்வி யுலகில் வாழும் மக்களுக்கு சற்று மன நிம்மதியடையுமென்று நம்புகின்றோம். ஒரு சமயம் கனம் மந்திரியவர்கள் நமது இராஜதானியில் உண்டான எதிர்பாராத கண்டனக் கூட்டங்களையும், கிளர்ச்சியையும் கண்டு ஒரு சமயம் அவ்விதம் கூறினாரோ, அல்லது உண்மையில் அவ்விதம் தாம் நடந்துக் கொள்வாரோ என்பதை இனி சேம்பியன் ஸ்கீம் அமுலுக்கு வரும்பொழுது இவர் பேசியதின் உண்மை விளங்கும்.

## புதுமாதிரியான 3-வது வகுப்பு ஸ்கீம்

26-3-34-ல் ஹிந்து எடுகேஷனில் சப்ளிமெண்டில் ஒருவர் சேம்பியன் ஸ்கீமைக் காட்டிலும் புதுமையான குறுக்கு வழியில் ஒரு ஸ்கீமைக் கண்டு பிடித்திருக்கின்றார் வெகு வேடிக்கையான ஸ்கீம் எல்லா எலிமெண்டரி பாடசாலையும் 3-வது வகுப்பு வரையில் தான் இருக்கவேண்டுமாம். உயர்தர பாடசாலைகளில் 4 வது வகுப்பிலிருந்து சேர்த்துக்கொள்ள வேண்டுமாம். ஏன் அவ்வளவு கஷ்டம் முதலாவது வகுப்பிலிருந்தே சேர்த்துவிட்டு ஆரம்பப் பாடசாலைகளையெல்லாம் மூடிவிட்டால் கவர்ன்மெண்டிற்கும் பணச்சிக்கனமாகும். ஆரம்பக் கல்வியும் வெகு சீக்கிரத்தில் விருத்தியடைந்து விடுமே?

இவர் யோசனையே யோசனை. சேம்பியன் ஸ்கீமை அமுலுக்கு கொண்டுவர திரு டைரக்டர் துரையவர்கள் ஒருஸ்பெஷல்ஆபீஸரை தேடிக் கொண்டிருப்பதாக வதந்தி. அந்த வேலைக்கு இம்மகானை நியமித்துவிட்டால் இந்த ஸ்கீமை வெகுவிமரிசையாக நடத்திக்காட்டுவாரென்று நம்புகின்றோம் இவர் விலாசம் தான் நமக்கு தெரியவில்லை. தெரிந்தால் நாமே டைரெக்டர் துரையவர்கட்கு இவரை சிபார்சு செய்யலாம்.

ஆரம்பக் கல்வி திறமையுடன் தற்காலத்தில் இல்லாததற்கு 2-வது காரணம், உயர்தர பாடசாலைகளில் 6-வது வகுப்பிற்கு பிள்ளைகளை சேர்ப்பதற்காக கங்காணிகளைப்போல் 4-வது 5-வது வகுப்புகளை திறந்து வைத்துக்கொண்டு அருகிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள மேல் வகுப்புக்களில் பிள்ளைகள் அதிகம் சேராமல் குறைந்துவிட நேருகிறது. இதுவுமன்றி இதர ஆரம்பப் பாடசாலைகளில் 3-வது 4-வதுவகுப்பில் வாசிக்கும் பிள்ளைகளையெல்லாம் 5-வது வகுப்பிலும் 6-வது வகுப்பிலும் பணம் வந்தால் போதுமென்று யாதொரு சர்ட்டிபிகேட்டு மில்லாமல் (பிரைவேட் ஸ்டடி) யென்பதாக கையொப்பம் வாங்கிக்கொண்டு ஆட்டு மந்தைகளைப்போல் உயர்தரப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளுகின்றனர். 5-வது வகுப்பிற்கென ஒரு பொதுப் பரீட்சை யிருக்கும் பட்க்ஷத்தில் இவ்விதம் கூட்டம் உயர்தர பாடசாலையில் ஏற்படாது. ஆரம்பப் பாடசாலைகளில் மேல் வகுப்புக்களில் போதுமான பிள்ளைகளிருப்பார்கள். இந்த சேம்பியன் திட்டம் தலை காட்டவே இடம் கிடைத்திராது. ஆரம்பக் கல்வி திறமையுடன் நடைபெற வேண்டுமானால் உயர்தர பாட்சாலைகளில் 6-வது வகுப்பிலிருந்து வைத்துக்கொள்ள வேண்டுமேயொழிய ஆரம்பப் பாடசாலைகளுடன் போட்டா போட்டி உயர்தர பாடசாலைகள் போடக்கூடாது. இதைப்பற்றி ஒவ்வொரு ஆசிரியர் சங்கமும், ஆசிரிய மானேஜர்கள் சங்கமும் தீர்மானங்கள் செய்து அரசாங்கத்திற்கும் கல்வி யதிகாரிகளுக்கும் அனுப்புவார்களானால் இதற்கு ஒரு வழி ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை.

## ஆண் பெண் பாடசாலைகளுக்கு கிராண்டு பிரிவினை

இவ் வருடம் அரசாங்கத்தார் கிராண்டுத் தொகையை ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஆண் பாடசாலைகளுக்கும் பெண் பாடசாலைகளுக்கும் பிரித்துக் கொடுத்திருக்கின்றனர். இதில் ஆண் பாடசாலைகளுக்கு 100-க்கு 15 குறை வென்றால் பெண் பாடசாலைகளுக்கு 100-க்கு 30 விகிதம் குறைவதாக தெரிகிறது. காரணம் என்ன? என்னத்தான்



குட்டிக்கரணங்கள் போட்டு பாடசாலையை திறமையுடன் நடத்திக் காட்டினாலும் 100-க்கு 10 அல்லது 15க்கு மேல் சாதாரணமாக நமது டிப்டி இன்ஸ்பெக்டர் சகோதரர்கள் ஆண் பாடசாலைகளுக்கு கொடுப்பது கிடையாது. ஆனால் இன்ஸ்பெக்டிரஸ் சகோதரிகளோ தாங்கள் பார்வையிடும் பெண்பாடசாலைகளுக்கு 100க்கு 25 முதல் 50 வரையில் சாதாரணமாக கொடுக்கின்றனர். இதில் ஆண் பாடசாலைகளை பார்வையிடும் டிப்டி இன்ஸ்பெக்டர் சகோதரர்கள் ஏன் இவ்வாறு தாராளமாக தாங்கள் பார்வையிடும் பாடசாலைகளுக்கு கொடுக்கக் கூடாதென்பது எமது கேள்வி? டைரக்டர் துரையவர்கள் சட்டம் ஒன்று தானே. பெண் பாடசாலைக்கென்று வேறு ஏதாவது சட்டம் புதுமையாக இருக்கின்றனவா? கிடையவே கிடையாது. இதில் ஆண் மக்கள் மனதையும், பெண் மக்கள் மனதையும் பரிசோதிப்பின் ஆண்கள் சாதாரணமாக கல்நெஞ்சம் படைத்தவர்கள் என்பது தெற்றென விளங்கும். பெண் மக்களின் தயாளச் சிந்தையும், மேன்மையான மனதையும் ஆண்கள் கண்டு வெட்கிக்க வேண்டியதே. இனியாவது நமது ஆண் டிப்டி இன்ஸ்பெக்டர்கள் தங்கள் சமூகத்தைச் சேர்ந்த ஆண் பாடசாலைகளிடத்து இன்ஸ்பெக்டிரஸ் பெண் பாடசாலைகளிடத்து காட்டுவதைப்போல், தயாளச் சிந்தையுடன், இன்கிரிமென்ட் விஷயத்தில் தாராளமாக நடந்து கொள்வார்களென நம்புகின்றோம்.

## பிரைமரி பரீட்சை திரும்பவும் வேண்டும்?

24-3-34-ல் கூடிய சென்னை ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சேர்ந்து நடத்திய பொதுக் கூட்டத்தில் திரு சிவமுத்து குமாரசாமி முதலியார் தமிழ் பண்டிதர் அவர்கள் ஆரம்பக் கல்வியின் தற்கால நிலைமையைப்பற்றி ஓர் அருமையான சொற்பொழிவை நிகழ்த்தினார் அதில் ஆரம்பக் கல்வி கடந்த 30 வருடங்களாக அதிக மதிப்பற்று சீர்கேடடைந்து வருவதற்கு பல காரணங்களில் முக்கிய காரணம் அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டு வந்த பழைய பிரைமரி பரீட்சை 1905-ல் எடுபட்டுவிட்டது ஒரு முக்கிய காரணமென்பதாகக் கூறினார். இதில் அதிக உண்மையுண்டு. 1900ஹல் பிரைமரி பரீட்சையில் பாஸ் செய்தவர்கள் வாசித்த கல்வியையும், அவர்களடைந்த பொது அறிவும், தாய் பாஷையில் பாண்டித்தியமும், தற்போது வாசித்துவரும் 8 வது வகுப்பு மாணவர்களுக்குங்கூட கிடையாதென்னலாம், பழைய காலத்து பிரைமெரி பரீட்சையில் பாஸ்செய்து அரசாங்க உத்தியோகத்தில் உழைத்துவரும் சிலர், ரெவின்யூ இன்ஸ

பெக்டர்களாகவும், தாசில்தார்களும், ஒரு டிபார்ட்மெண்ட் அதிகாரிகளாகவும், ஒழுங்குபட வேலை செய்து வருவது கண்கூடு. இது பாட்டிக்கதையல்ல, விசாரிப்பின் உண்மை வெளிப்படும். இப்பொழுதும் பல பெற்றோர்கள் நாங்கள் அந்த காலத்தில் வாசித்ததில் 3-ல் 1 பங்கு தற்காலத்தில் கிடையாதென்பார்கள். எமக்கு தெரிந்த மட்டில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேர்ந்த பல மாணவர்களுக்கு எழுவாய், பயனிலை என்பதே சரிவர தெரியாது. அது அவர்கள் குற்றமன்று. தற்காலக்கல்வித் திட்டத்திலுள்ள சீர்கேடு. தற்போது வாசிக்கும் ஒவ்வொரு மாணவனும் உத்தியோகம் வகித்து அடிமைத் தொண்டு புரியவேண்டுமென்ற நோக்கங்கொண்டு வாசிக்கின்றானேயொழிய, நான் சுயேச்சையாக வியாபாரமோ, கைத்தொழிலோ, விவசாயமோ, செய்து என் வாழ்நாளில் ஜீவிக்கப்போகின்றேன் என்று சொல்லும் மாணவர்கள் 100-க்கு ஒன்றிரண்டு இருப்பதும் சந்தேகம். ஒரு மாணவன் 5-வது வகுப்பு வரையில் படித்துவிடுவானானால் அவனுக்குத் தன் தாய் பாஷையில் கிடைக்கும் சில நூல்களின் பொருளை எளிதில் பிறர் உதவியின்று அறிந்துக்கொள்ள சக்தியும், நமது நாட்டு தேச பரிபாலனம், சுகாதாரம், வாணிபம், கைத்தொழில், வியவசாயம்; கணித சாஸ்திரம், இவைகளில் ஒரு அளவு அறிவும், ஆங்கிலத்தில் ஒரு சிறு அளவு ஞானமும், அவசியம் இருத்தல் வேண்டும். உண்மைக் கூறுமிடத்து உலகத்தில் ஒரு முழுமனிதனாக அம்மாணவன் தன் பிற்கால வாழ்க்கையில் உலகில் பல வழிகளை சற்று அறிந்தவனாக இருத்தல் வேண்டும். இத்தகைய குறைபாடுகளை ஒருவாறு 35 வருடங்களுக்கு முன் ஏற்பட்டிருந்த பிரைமெரி பரிட்சை நிவர்த்திசெய்தது. அக்காலத்து பிரைமெரி பரீட்சையில் தேரியவர்கள் தற்காலத்தில் எல்லாத் துறைகளில் முன்னேற்ற மடைந்து அறிஞர்களாகவும், செல்வாக்குடைய பெரிய மனிதர்களாகவும், சுகஜீவிகளாகவும் வாழ்ந்து வருகின்றனர். அக்காலத்தில் ஆரம்பப் பாடசாலைகளுக்கும் ஒரு மதிப்பும் செல்வாக்கும், கௌரவமும், ஆரம்பாசிரியர்களென்றால் தன்னையறியாத மாணவர்களுக்கு ஒருவித குரு பக்தியும்மேலிட்டிருந்தது அக்காலத்தில் உயர்தர கலாசாலை ஆசிரியர்களைக் காட்டிலும் ஆரம்பாசிரியர்களுக்குத்தான் அதிகம் கௌரவமும், செல்வாக்கு மிகுந்தது, தற்காலத்திலோ ஆரம்பாசிரியர்களுடைய நிலையும், உயர்தர பாடசாலை ஆசிரியர்கள் நிலையும் சம்பளம் ஒன்று தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் ஒன்றுதான். ஆதலின் பழைய மாதிரியாக



5-வது வகுப்பிற்கு லோயர் பிரைமரி பரீட்சையும் 8-வது வகுப்பிற்கு லோயர் செகண்டரி பரீட்சையும் ஏற்படுத்தி அதில் பாஸ் செய்தவர்களை மாத்திரம் எஸ். எஸ். எல். ஸி. பரிட்சைக்கும் போகும்படி அனுமதிக்கவேண்டும். அவ்விதம் அரசாங்கம் செய்வார்களானால் ஆட்டு மந்தைகளைப்போல் உயர்தர பாடசாலையிலும், சர்வகலாசாலைகளிலும் மாணவர்போய் அடையமாட்டார்கள். கும்பல்கும்பலாக பாஸ் செய்துவிட்டு வெருங் காகிதத்தை கையில் வைத்துக்கொண்டு உத்தியோகத்திற்கு திண்டாடமாட்டார்கள். சர்வ கலாசாலைகளும் உயர்தர பாடசாலைகளும் ஒரு அளவு குறைந்து தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாயுள்ள ஆரம்பக் கல்வி அபிவிருத்தியாகும் நமது தாய்நாடும் க்ஷேம மடைவதல்லாமல், பாமர நோயும் சீக்கிரம் நீங்கும். இதைவிட்டு சேம்பியன் ஸ்கீமையும், கன்ஸாலிடேஷன் ஸ்கீமையும் கொண்டு வந்து ஆரம்பக் கல்வியை நசுக்கவேண்டியதில்லை. பூசனிக்காய் போகுமிடம் தெரியாமல் கடுகு போகுமிடத்தில் காதை அறுத்துக் கொண்டானும், என்ற பழமொழிப்படி பயனற்ற சர்வ கலாசாலையையும் உயர்தரப்பாடசாலையையும் ஒரு அளவு குறைத்து சிக்கனம் பிடிப்பதைவிட்டு ஆரம்பப் பாடசாலைகளை குறைத்து சிக்கனம் கண்டுபிடிக்க வேண்டுமென்பது மலையைத் தள்ளி எலியைக் கண்டு பிடிப்பதைப்போலாகும். ஆதலின் அரசாங்கத்தாரும், பொது ஜன ஊழியர்களும், அறிவாளிகளும், பாடசாலைச் சங்கங்களும் பழையபடி பிரைமரி பரீட்சைகளை ஏற்படுத்தமுன் வருவார்களாக.

### எய்டட் பாடசாலையும் கிராண்டுத் துகையும்

| | | ரூபாய்கள் |
|---|---|---|
| 1929-30 | — | 56,01,000 |
| 1930-31 | — | 55,85,385 |
| 1931-32 | — | 48,71,317 |
| 1932-33 | — | 49,76,593 |
| 1933-34 | — | 51,84,100 |

மேற் குறித்த கணக்கிலிருந்து ஜில்லாக் கல்விச் சபைகளுக்கு எவ்வாறு அரசாங்கத்தார் வருடா வருடம் கிராண்டுத் துகைகளை குறைத்துக் கொண்டே வந்து விட்டனரென்பது நன்றாக விளங்கும். 1921 வருஷம் ஆரம்பக் கல்விச் சட்டத்தை ஏற்படுத்தி ஜில்லாக் கல்விச் சபைகளை உண்டு செய்து ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு இச் சபைகளை பொருப்பாகச் செய்து சுமார் 30000 எய்டட் பாட

சாலைகளை மாத்திரம் இச் சபைகளுக்கு ஒப்படைத்தனர். மற்ற 20000 போர்ட் முனிசிபல் அதிகாரிகளின் பொருப்பில்விட்டு பேருக்கு மாத்திரம் கல்விச் சபையை பொருப்பாளிகளாகச் செய்தனர். 1921ஆம் வருஷத்தில் 24 லக்ஷத்திலிருந்து 1930ஆம் வருஷத்தில் 56 லக்ஷம் வரையில் எய்டட் பாடசாலைகளுக்கென கிராண்டுத் தொகையை உயர்த்திக் கொடுத்தனர். பாடசாலைகளும், ஒரு அளவு வருடா வருடம் விருத்தியாகிக்கொண்டே வந்தன. பிள்ளைகளும் அதிகப்படியாக கல்விபயின்று வந்தனர். ஆனால் 1930 வருடத்திலிருந்து கிராண்டுத் தொகையை பணமில்லையென்ற சாக்குபோக்குகளால் குறைத்துக் கொண்டே வந்துவிட்டனர். ஆதலின் ஆரம்பக் கல்வி பலவகையிலும் தற்போது சீர்கேடடைந்ததில் ஆச்சரியமல்ல. ஸ்டோக்ஸ் துரையவர்கள் சட்ட சபையில் அரசாங்க குமாஸ்தாக்களுக்கும், அதிகாரிகளுக்கும் சம்பளம் குறைவு ஏற்படுமானல் அரசாங்க விவகாரங்கள் ஒழுங்குபட நடைபெறுதென்றார். ஆனல் ஆரம்பப் பாடசாலைகளுக்கு கிராண்டுகளை குறைத்து ஆசிரியர்களின் சம்பளங்கள் குறைத்துவிட்டால் எவ்வாறு ஆசிரியர்கள் உற்சாகமாக வேலைசெய்ய முடியும்? ஆரம்பக் கல்வி எவ்வாறு விருத்தியடையும்? இதைக் கேட்பார் சட்ட சபையில் ஒருவரும் இல்லைபோலும். இனியாவது டைரெக்டர் துரையவர்களும், அரசாங்கத்தாரும் கவனிப்பார்களா ?

---

## புத்திமதிப்பாக்கள்

அரசனாணையை அறிவோடு நடத்திடு
ஆற்றுநீரெனினும் ஆராய்ந்து பருகு
இச்சைகடிவோர் இன்பமடைவர்
ஈன்றாளைவிட ஈறிலி இல்லை (தெய்வம்)
உன்மத்தர் தம் உறவைத்தான் களை
ஊனிலாவூணே உத்தமமானது
எருக்குவியல்களை எட்டத்திருத்து
ஏட்டுக்கல்வி மேட்டைத் தரா
ஐம்புலன்தன்னை அறிவோடு இணை
ஒழுக்கமில்லார் உறவை நாடேல்
ஓங்காரத்தின் உண்மையை நீயறி
ஔவை சொல்லியதெல்லாம் கல்வு.

# சேம்பியன் ஸ்கீம்

## ஏன் எதிர்க்கப்பட வேண்டும்?

1. நமது இராஜதானியில், சுமார் 50000 பாடசாலைகளில் முனிசிபல், தாலுக்கா போர்ட்டு நீங்கலாக, முஹம்மதியர், கேதலிக் கிறிஸ்தவர்கள், பிராடஸ்டன்ட் கிறிஸ்தவர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள், பல ஜாதி ஹிந்துக்கள் முதலியோர் பல சங்கங்களின் மூல்யமாயும், கமிட்டிகளின் மூல்யமாயும், தனிப்பட்ட ஹோதாவிலும், பெரும்பான்மையான சுமார் 30000 ஆரம்பப் பாடசாலைகளை பரிபாலித்து வருகின்றனர். ஒவ்வொரு சங்கமும், மத உணர்ச்சி, ஜாதி உணர்ச்சி சமூக உணர்ச்சி முதலியன போன்ற ஒரு நோக்கத்தை கைக்கொண்டு பாடசாலைகளை நடத்திவருகின்றன. உதாரணமாக கிருஸ்தவ பாடசாலைகள் பைபில் மூலமாக கிருஸ்து மதத்தை பரவும் நோக்கத்திலேயே பாடசாலைகளை நடத்திவருகின்றனர். கிருஸ்தவ தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை சைவத்தை போதிக்கும் ஒரு பாடசாலைக்கு அனுப்ப சம்மதியார், அம்மாதிரியே ஹிந்து தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை குரான் சொல்லித்தரும் முஹம்மதிய பாடசாலையில் வாசிக்கவிட அனுமதியார். இவ்வாறு ஜாதி பேதங்களும், மத பேதங்களும் நிறைந்த நமது நாட்டில் ஒரு பாடசாலையிலிருந்து மற்றொரு பாடசாலைக்கு பிள்ளைகளை போகும்படிச் செய்வதென்பது அநுபவத்தில் நடவாத காரியம். ஒரு சமயம் மானேஜ்மெண்டுகள் ஒத்துக்கொண்டாலும் தாய் தந்தையர் சம்மதிக்கமாட்டார்கள். கல்வியதிகாரிகள் தங்கள் பாணங்களை ஏழை ஆரம்பாசிரியர்கள் மீது தொடுத்து மிரட்டலாமேயொழிய தாய் தந்தையரிடத்து ஒரு அடியும் அணுக முடியாது. உதாரணமாக ஆரம்பக் கல்வி சட்டத்தில் கட்டாய இலவசப் படிப்பு அமுலிலுருக்குமிடத்தில் பாடசாலை வயதுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாத தாய் தந்தையரை பிராஸிகியூஷன் செய்யும்படி சட்டமிருக்கிறது. தற்போது சென்னையில் எத்தனை தாய் தந்தையர்கள் மீது கல்வியதிகாரிகள் வழக்கு தொடுத்திருக்கின்றனர்? இந்த புதுமாதிரியான ஸ்கீமில் 30-க்கு குறைந்த வகுப்பிலுள்ள மிஷன் பாடசாலைப் பிள்ளைகளை முனிசிபல் அல்லது போர்டு பாடசாலையிலும், போர்டு பாடசாலையிலுள்ள பிள்ளைகளை ஆசிரிய மானேஜர்கள் பாடசாலையிலும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் டிப்டி இன்ஸ்பெக்டர்கள் கூட்டியும் கழித்தும் பச்சை சிவப்பு வர்ணங்களுடன் ஒரு கதம்பக் கணக்கை

மேலதிகாரிகள் திருப்திக்காக அனுப்பியிருக்கின்றார்கள். ஒரு பாடசாலையிலிருந்து மற்றொருபாடசாலைக்கு பிள்ளைகளை சேர்க்கப்படுவதற்கு டிப்டி இன்ஸ்பெக்டர் அதிகாரமாவது,பாடசாலை மானேஜர்கள் அதிகாரமாவது, ஆசிரியர் அதிகாரமாவது செல்லாது. அது தாய் தந்தையர்கள் மனப்பான்மையை ஒட்டியது.

2. சிறு வகுப்புக்களை ஸென்டிரல் பாடசாலையில் கொண்டுபோய் சேர்த்து 30 பிள்ளைகளுடைய பெரிய வகுப்புக்களை உண்டாக்குவதால் கட்டடச் செலவு, உபாத்திமைச் சம்பளங்கள் ஒட்டிக்கு இரட்டையாக சிலவாகுமே யொழிய ஸ்கீமின் நோக்கத்தைப்போல் பணசிக்கனமிராது. சாதாரணமாக ஒரு வகுப்பில் 15 அல்லது 20 பிள்ளைகளுக்குமேல் இருப்பின் பிள்ளைகளுக்கு நன்றாக கவனித்து ஆசிரியர் போதிக்க இயலாது. எவ்வளவுக்கெவ்வளவு பிள்ளைகள் குறைவோ அவ்வளவுக்கவ்வளவு நன்றாக ஆசிரியர்கள் கல்வியை கவனித்து போதிக்க இயலும். ஆரம்பப் பாடசாலைகள் சர்வகலாசாலையல்ல. நமது இராஜதானியில் 100-க்கு 75 பாடசாலைகள் 3 வகுப்பு வரையில் தான் இருக்கின்றன. 100-க்கு 10 பிள்ளைகள்தான் 5-வது வகுப்புவரை வாசிக்கின்றார்கள். ஏனைய பிள்ளைகளை படிக்காதவர்கள் எனவே கருதப்படுகின்றது. ஆதலின் ஆரம்பக்கல்விக்கென சிலவாகும் பெரும்பான்மையான தொகை வீணாக்கப்படுகின்றது. ஆதலின் பெரும்பான்மையான பிள்ளைகளை 5-வது வகுப்பு வரையில் வாசிக்கும்படிச் செய்ய வேண்டுமென்று (ஹார்டாக் கமிட்டியார்) (ஸ்டாக்னேஷன்) என்ற தலைப்பில் அதிக விரிவாக தங்கள் ரிபோர்ட்டில் எழுதியிருக்கின்றார்கள். இதற்கு மாறாக தற்போதுள்ள ஸ்கீம் அமுலுக்கு வருமானால் தற்சமயம் நடந்து வரும் 100-க்கு 25, 5-வது வகுப்பு வரையிலுள்ள பாடசாலைகளெல்லாம் 3-வது 2-வது வகுப்பு வரையில் குறைத்துவிடும் பட்சத்தில் படியாத பிள்ளைகளின் தொகை அதிகப்படுமே யொழிய குறையாது.

3. பெண்பிள்ளைகளை ஆண் பிள்ளைகளுடன் கலந்து கல்வி பயிற்றுவிப்பதென்பது தற்கால பிள்ளைகளின் மனப்பான்மையையும், நாகரீக சீர்கேட்டையும் கவனித்து பார்க்குமிடத்து உசிதமாகத் தோன்றவில்லை. பெண்களுக்கென கூடுமானவரையில் தனிப்பட்ட பாடசாலைகளே யிருப்பது உசிதமென தோன்றுகிறது. பெண்கள் கற்கவேண்டிய கல்விக்கும் ஆள்கள் கற்கவேண்டிய கல்விக்கும் அதிக பேதங்களிருக்கின்றன.



4. (புளூரால் டீச்சிங்) அதாவது ஒரு உபாத்தியாயரே இரண்டு வகுப்புக்களை போதிப்பதென்பது தப்பான முறையென்றும், கல்வியை நன்றாக போதிக்கக்கூடாத காரியமென்றும், வாதிக்கின்றனர். அனுபவத்தில் பார்க்குமிடத்து சரியான முறையில் ஆசிரியர் போதிப்பாராகில் இரண்டு வகுப்புக்களை திறமையான முறையில் நடத்தலாம். உதாரணமாக 3-வது வகுப்பில் 10 பிள்ளைகளும் 4-வது வகுப்பில் 10 பிள்ளைகளும் இருந்தால் ஒரு ஆசிரியர் 3-வது வகுப்பிற்கு ஒரு கணக்கு கொடுத்துவிட்டு அதை அவர்கள் செய்யுங் காலத்தில் 4-ம் வகுப்பிற்கு தமிழ் பாடம் நடத்தலாம், இவ்வாறு கிராமாந்திரங்களிலுள்ள பாடசாலைகளில் நடைபெற்றுவருகின்றது. அதனால் யாதொரு குறைபாடும் இருப்பதாக தெரியவில்லை. அநேகமாக கிராமப்பாடசாலைகளில் மேல் வகுப்பில் 10 பிள்ளைகளுக்குமேல் இருக்க முடியாது. அந்தப் பிள்ளைகளை அடுத்த கிராமப்பாடசாலைக்கு அனுப்ப தாய் தந்தையர் சம்மதிக்கமாட்டார்கள். இவ்வித சந்தர்ப்பங்களில் ஸ்கீமை எவ்வாறு அமுலுக்கு கொண்டுவரமுடியும் மேல் வகுப்புக்களை எடுத்து விடுவதா? 3-வது 4-வது வகுப்புக்களைச் சேர்த்து 20 பிள்ளைகளுக்கும் ஒரு ஆசிரியர் போதித்து வருவதுதான் சாத்தியமான காரியம். இம்மாதிரி பாடசாலைகள்தான் நமது நாட்டில் அதிகம். அதுவுமன்றி எப்பொழுதும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை திருடர் பயம், கால் நடை கஷ்டம், வண்டி ஆபத்துக்கள், ஆற்றைக்கடக்கும் கஷ்டம், தனிமையாக செல்லுவதில் குழந்தைகளுக்கு பயம், முதலியவைகளை யோசித்து அருகேயுள்ள பாடசாலைக்குத்தான் அனுப்புவர். 5-வது அல்லது 4-வகுப்புவரையிலுள்ள பாடசாலைகளை 2-வது வகுப்பு வரையில் ஜூனியர் பாடசாலையாக குறைத்துவிடும்பட்சத்தில் அப்பாடசாலை எய்டட் பாடசாலையாயிருப்பின் வரும்படி குறைந்து பாடசாலையை நடத்தவும் இயலாது. அவ்வித வகுப்புக்குறைந்த பாடசாலைகளுக்கு பெற்றோர் தங்கள் குழந்தைகளை அனுப்ப சம்மதியார். ஆசிரியர்களுக்கும் வகுப்புக்களில் கல்வி போதிக்க உற்சாகமிராது. இதனால் ஒரு சமயம் திறமையுள்ள அநேக பாடசாலைகள் எளிதில் மூடப்படவும் கூடும்.

இவ்விதமான பல காரணங்களினால் தான் இந்த கன்ஸாலிடேஷன் ஸ்கீம் எங்குப் பார்த்தாலும் எல்லோராலும் கண்டனம் செய்யப்பட்டு வருகின்றது.

# கோஹினூரின் வரலாறு

ஏ. டி. முத்துகிருஷ்ணன் ஆரம்பாசிரியர் சென்னை.

---

6-ம் இதழில் நம் பாரதநாட்டு பண்டைப் பொருள்களைப் பற்றி வெளிவந்ததைக் கண்ணுற்று என் அவா மேலிட்டதால் கோஹினூர் என்னும் விலையில்லா மாணிக்கத்தைப்பற்றி எழுதலானேன். நம் நாட்டு பண்டைப்பொருள்களை காணுந்தோறும், கேட்குந்தோறும் நம் முன்னோர்களின் உழைப்பும், அறிவின் நுட்பமும் நம் கண்ணெதிரே விளங்கி நிற்கின்றன.

விஜய நகரம், பூ பிரகாசமுள்ளதும், விலையுயர்ந்ததுமான வைரங்களின் இருப்பிடமாய் விளங்கியது. அந்நகரில் அநேக வைரக் கனிகளிருந்தன. பெர்னாண்டோ நூநிஸ் என்னும் யாத்திரி, அநேக வைரக்கனிகள் விஜயநகர ராஜ்யத்தில் இருந்ததாகவும், வைரங்கள் குவியல்குவியலாக சக்ரவர்த்தியின் அரண்மனையில் இருந்ததென்று தன் நூலில் குறித்திருக்கிறார். விஜய நகர ராஜ்யம் அழிந்த பின்னும் கி. பி. 1614-ல் சந்திரகிரி அரசனிடம் பெரிய நவநிதிகள் பல பெட்டிகளில் இருந்தது என்று பரடாஸ் என்னும் மற்றொரு யாத்திரி கூறியிருக்கிறார்.

கிருஷ்ணா நதியின் வடகரையிலும் கர்நூல், அனந்தபூர் ஜில்லாக்களிலும், விசேஷமாக வஜ்ரகரூரிலும் வைரக்கற்கள் அதிகமாகக் கிடைத்தன. அங்கே கோல்கொண்டா வைரச் சுரங்கம் என்ற ஒரு சுரங்கம் பெயர்பெற்றிருந்தது. அச்சுரங்கத்தில் கோழிமுட்டை அளவு ஓர் வைரம் கிடைத்து கி. பி. 1565-ல் முகம்மதியர்களால் கைப்பற்றப்பட்டதாக ஓர் யாத்திரி உரைத்திருக்கின்றார்.

கி. பி. 1534-ல் விஜயநகரத்தில் 150, 175, 312½ காரெட் எடையுள்ள வைரங்கள் பல நேரில் கண்டதாகவும், பிறகு பிஜபூர் சுல்தானால் 1565-ம் வருஷத்தில் அபகரிக்கப்பட்டதாகவும் கார்ஸியா டா ஓர்டா என்னும் யாத்திரி கூறியிருக்கின்றார். மேற்சொன்ன வைரங்களுக்கெல்லாம் அரச வைரமாய் விளங்கியது கோஹினூர் வைரம். அதைப்பற்றி தெரிந்துக்கொள்ள பாரத மக்கள் பலர் விரும்புவர்.

கி. பி. 1686 வருஷம் கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள கொல்லூர் என்ற யிடத்தில், மீர்ஜம்லா என்னும் முகம்மதிய சுரங்கச் சொந்தக்



காரனால் கோஹினூர் என்னும் வைரம் கண்டெடுக்கப்பட்டது. அப்போது அது மிகப்பெரியதாகவும் 756 காரட் எடையுள்ளதாகவுமிருந்தது. அவன் ஒரு வெனிஸ் வர்த்தகன் மூலமாய் டில்லி சக்ரவர்த்தி ஷாஜஹானுக்கு பரிசாகக் கொடுத்தனுப்பினான். அவ்வர்த்தகன் வழியில் அவ்வைரத்தை கொஞ்சம் வெட்டி எடுத்துக்கொண்டு மீதி 268½ காரட் எடையுடையதாய் டில்லி அரசனுக்கு கொடுத்தான். 1665 வருஷம் டாவர்னீயர் என்னும் பிரயாணி அவ்வைரத்தைக்கண்டு வியந்து எழுதியிருக்கிறார்.

சில ஆண்டு சென்ற பிறகு நாதர்ஷா படையெடுத்து டில்லி குடிகளை படுகொலை செய்ததல்லாமல் பல விலையுயர்ந்த பொருள்களை சூறையாடினான். கோஹினூர் வைரம் டில்லி பாதுஷா தன் தலைபாகையில் மறைத்து வைத்துக் கொண்டிருந்தான். இதை ஒற்றர்களால் நாதர்ஷா அறிந்து டில்லி பாதுஷாவை கண்டு சிநேகபாவனையாய் இருத்தலுக்கு ஒருவருக்கொருவர் பாகையை மாற்றிக் கொள்ளுதல் தன் நாட்டு பழக்கம் என்றுரைத்து டில்லி பாதுஷா பாகையை எடுத்துக்கொண்டு போய்விட்டான். பிறகு கோஹினூருக்கு ஜோதியின் மலை என்று பெயரிட்டான்.

1747-ல் நாதர்ஷா கொலையுண்டபின் அவனது பேரன் ஷருக் என்பவன் அவ்வைரத்தை காபூல் காவலனான ஆமத்ஷா துராணிக்கு அளித்தான். பிறகு அவன் மகன் தைமூரும் பிறகு அவன் வம்சத்தை சேர்ந்த ஷாஜஹானும் 1793 வருஷம் ஜோதியின் மலையைவைத்திருந்தனர். ஷாஜஹான் தமையன் அவனை குருடாக்கி சிறையில் வைத்த போதும் ஷாஜஹானிடமே அவ்வைரம் இருந்தது.

அவனது சகோதரனான ஷூஜா சுல்தான் 1796 வருஷம் அவ்வைரத்தை கைபற்றினான். 1809 வருஷம் அவன் காபூலில் காவலனான போது எல்பின்ஸ்டன் என்னும் கவர்னர் ஷூஜா தரித்திருப்பதை கண்டு வியந்தான். 1812 வருஷம் முகம்மத் ஷூஜாவை துரத்திவிட்டுதான் அரசனான். துரத்தப்பட்ட ஷூஜா லாகூருக்கு ஓடிவந்தான். அப்போது அப்பிரதேசத்து அரசனான இரஞ்சிட்சிங் அவனை கைது செய்து 1813 வருஷம் நிகழ்ந்த சமாதானத்தின்படி கோஹினூர் வைரம் இரஞ்சிட் சிங்குக்கு கிடைத்தது.

1839ஆம் இரஞ்சிட் சிங் இறந்தஉடன் தன் மகன் டுலிப் சிங்குக்கு வயது வந்த உடன் தரித்துக்கொள்ளும்படி ஆபரணபெட்டியில் வைத்து பூட்டி வைத்தான். கி. பி. 1849 வருஷம் ஸர்ஜான்

# யார்? ஆசிரியர்

(வசுந்தர நைனர் அவர்கள், தலைமை உபாத்தியாயர் கடலாடி)

323-ம் பக்கத் தொடர்ச்சி

கல்வியின் பெருமையும், கலங்காத வல்லமையும், பொருமையும், சுறுக்கமான வழியில் போதிக்கும் திறமையும், தன்னை பெருமையாக பிறர் நினைக்கும்படி நடத்தலும், அன்னியர் எதிர்த்து வாதம் செய்ய நினைக்காமல் நடத்தலும், சதா சந்தோஷத்தையுமுடையவராக யிருப்பவரே ஆசிரியராவர்.

3. நிறைகோல் மாட்சி:—

ஐயந்தீரபொருளை யுணர்த்தலும்,
மெய்நடுநிலையு மிடுநிறைகோற்கே.

பொருள்

1. நிறுக்கப்பட்ட பொருளை சந்தேகமில்லாமல் காட்டுதல்,

---

லாரென்ஸ் பஞ்சாபை இங்கிலீஷ் இராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டபோது இவ் விலையில்லா வைரத்தையும் எடுத்துக்கொண்டான். அக்காலத்தில் இங்கிலாந்து இராணியாய் விளங்கிய விக்டோரியா மஹாராணிக்கு 1858 வருஷம் அளித்தான்.

இயற்கையிலேயே நீரோட்டம் மிக்க அக் கோஹினூர் வைரம் சாணம் பிடிப்பதில் பெயர் பெற்ற அம்ஸ்டர்டாம் பட்டணத்து வைரந் தீட்டுபவர்களால் கி. பி. 1852 வருஷம் பட்டை தீர்க்கப்பட்டது. அப்படி தீட்டும்போது விழுந்த சிறு வைரங்களை எடுத்து ஒரு மகுடம் செய்யப்பட்டது. கோஹினூர் வைரம் பட்டை தீர்த்தபின் $106\frac{1}{2}$ காரெட் எடை இருந்தது.

அந்த ஜோதிமிகுந்த விலையில்லா மாணிக்கமாகிய கோஹினூர் இன்று மாட்சிமைபெற்ற ஐந்தாம் ஜியார்ஜ் மன்னரின் மகுடத்தில் விளங்குகிறது. சுமார் 300 வருஷங்களுக்கு முன் விஜய நகரத்தில் ஒரு சிறு கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட உயர்ந்தமணி சக்கரேசுவரராயும், சூரியன் அஸ்தமில்லாத ராஜ்யத்தை ஆளும் நமது மன்னரின் சிரசில் இடம்பெற்றிருக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறது. பிறந்த இடத்தில் சிறப்பு பெறுவிடினும் அந்நிய நாட்டில் யாவரும் புகழ மேன்மையுற்றிருப்பது நமக்கு சந்தோஷமே. உலகம் போற்றும் கோஹினூர் இந்தியாவில் தோன்றும் பாக்கியம் பெற்றிருந்தும் இந்திய மன்னர்கள் பெறாதுபோனது வருந்தத்தக்கதே.



2. உண்மையாக தராசு இரண்டு தட்டுக்கும் நடுவே ஒரு பக்கம் சாயாமல் நிற்றல் தராசுகோலின் குணமாம்.

உவமை.

1. கேட்கப்பட்ட சந்தேகார்த்தங்களை தீர அறிவித்தலும்,

2. இரண்டு புலவர்கள் மாறுபட்டுவந்தால் அவ்விருவரும் ஒப்புக்கொள்ளுமாறு, பாரபக்ஷமின்றி நடுவாக நின்று பேசுபவராயும், மாணாக்கர்களிடம் விருப்பு, வெறுப்பு, கொள்ளாதவராயுமிருத்தல் நல்ல ஆசிரியர் குணங்களாம். இதனால் தராசு கோலை உவமானிக்கப்பட்டது

*சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொரு பாற்
கோடாமை சான்றோர் அணி. (குறள்)

4. மலர் மாட்சி:—

மங்கலமாகி யின்றி யமையாது,
யாவரு மகிழ்ந்து மேற்கொளமெல்லி
பொழிதின் முகமலர் வுடையது பூவே.

பொருள்.

1. புட்பமானது சுப காரியங்கட்குத் தானில்லாமல் யாதொரு செய்கையும் செய்ய முடியாமல் தன்னைச் சிரசில் சூடிக்கொள்ள, மேன்மைக் குணம் படைத்ததாயிருத்தலும்,

2. பூ, மலருங்காலத்தில், முகமலர்தலோடு இருப்பது பூவின் குணமாம்.

உவமை.

1. ஆசிரியர் தாமிருக்கும் ஊரில் நடக்கும் எந்த சுபகாரியங்களுக்கும் ஆசிரியரில்லாமல் எச் செய்கையும் நடத்தல் கூடாதென, எல்லோரும் விரும்பி அழைக்கும்படி தன்னை வைத்துக் கொள்ளலும்,

2. பாடம் சொல்லுதற்குறிய காலத்தில் முகமலர்ச்சியுடையவராயிருத்தலும், நல்ல ஆசிரியர்க்குள்ள குணங்களாம். இதனால் பூவை உவமானிக்கப்பட்டது.

நல்லாசிரிய சகோதரர்களே! நம் தலைப்பெயர் புனைந்துலாவும் "ஆரம்பக் கல்வி" யென்னும் குழவியை இனிதே ஆதரியுங்கள். நம் குறையகலும், நம் வாழ்நாளும் விருத்தியடையும், என்பதை சொல்லாமலே அறிவோம். "சொல்லாமற் செய்வோர் பெரியோர்" என்னும் நீதியை உள்ளடக்கின ஆரம்பக் கல்வி இதென வர்ப்புறுத்துகிறேன்.

அடுத்த இதழில் ஆசிரியராகாதவர் என்னும் தலைப்பில் வியாசமாக வெளிவரும். சுபம்.

## தார - தம்மியம்.

திரு, பி. பரிமணப்பல்லவராயர்.

"கிராம உபாத்தியாயர்கள் தான் எதிர்கால ஜனசமூகத்தை ஒழுங்கு படுத்தி நமது நாட்டை முன்னுக்குக் கொண்டுவரும் பெரும் பாரத்தையுடையவர்கள். ஆதலின், உபாத்தியாயர்கள் வறுமையினாலோ, அரசாங்கத்தார் தம்மைக் கவனிக்காததினாலோ, சிலதேச ஊழியர்கள் தங்கள் மீது தயாள சிந்தனையைக் காட்டாததினாலோ மனச்சோர்வு அடைதல் கூடாது."

கௌரவ அதிகாரி

* * *

"ஒரு ஆரம்பாசிரியனும் மனைவியும் ஒரு பிள்ளையும் சுகமாகக் குடும்பத்தை நடத்த 25-ரூபாய் கொடுத்தால் அல்லாது அவர்கள் (மைசூரில்) சுகமாக வாழமுடியாது என்பதாகக் கணக்கெடுத்தார்கள். இனியாவது ஒவ்வொரு தாலுகா போர்டும் ஒரு ஆரம்ப ஆசிரியன் சுகமாக வாழ்வதற்கு ரூ. 25 கொடுக்க ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறேன்"

ஒரு சம்பள அதிகாரி.

* * *

சென்னை சட்டசபையின் சம்பளக் கமிட்டி 1918-ல் திவான்பகதூர் வி. கே. இராமாநுஜாச்சாரியார் தலைமையில் 30 ரூபாய்க்குக் குறைந்து சம்பளம் கொடுத்தால் ஜீவனம் செய்வது கஷ்டம் என்று கூறியது.

* * *

ஒரு வித்துவான், "மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி—தேனின் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்."

என்று இயம்பியிருக்கின்றார்.

* * *

ஒருவர் சுவர் வைத்துக்கொண்டு சித்திரம் எழுதவேண்டும் என்கிறார். இன்னொருவர் சுவர் இல்லாமல் சித்திரம் எழுதுவதுதான் சாமர்த்தியம் என்கிறார்.

மற்றொருவர் மண்ணோ செங்கல்லோ இல்லாமல் சுவர்வைப்பவர் சிரேஷ்டமானவர் என்கிறார். வேறொருவர் இரண்டிலொன்று இல்லாமல் சுவர் வைக்க இயலாதென்கிறார்.

* * * *

இவைகளிலுள்ள தாரதம்மியங்களையும், இவ்வாறு கூறுபவர்கள் எவரெவர்கள் என்பதையும் உங்கள் "ஆரம்பக்கல்வி"யின் முந்திய மலர்களிலிருந்து கண்டு பிடியுங்கள்.

## பெற்றோர் விரும்பும் கல்வி.

திரு, பி. பரிமணப்பல்லவராயர்.

நமது "ஆரம்பக் கல்வி" பத்திரிகையின் 8-வது இதழாகிய, சென்ற ஜனவரி மாத இதழின் 316-ம் பக்கத்திலே, தஞ்சை ஜில்லா ஆசிரிய மானேஜர்களின் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவரான திரு. கே. ரெங்கசாமி அய்யங்கார் அவர்களது பிரசங்கத்திலே, கனம் சாம்பியன் துரைமகனாரின் ஏற்பாட்டைப் பற்றிக் குறிப்பிடுகையில், "சாமர்த்தியமற்ற பள்ளிக்கூடமாயிருந்தாலும் சமீபத்திலிருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு பெற்றோர்கள் குழந்தைகளை அனுப்புவார்களே யொழிய, வெகு சாமர்த்தியமாய் நடத்தும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப மாட்டார்கள். ஒவ்வொரு கிராமமும், பிடாகையும், வகுப்பினரும் தங்களுக்கென்றே தனித் தனியாய்ப் பள்ளிக்கூடங்கள் வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்" என்று கூறியுள்ளது உண்மையே.

பெரும்பான்மையும் ஒரே வகுப்பினராயுள்ள ஒரு ஊரிலே ஏற்பட்ட போர்டுபாடசாலையின் ஆசிரியரை அவ்வூரார் ஆசை காட்டித் தங்கள் வகுப்புப் பிள்ளைகளுக்கு மட்டுமே கல்வி கற்பிக்கச் செய்த தன் பேரில் அவ்வாசிரியர் மற்ற வகுப்பினரின் பிள்ளைகளைச் சேர்ப்பதற்குத் தனக்கு உத்திரவில்லையென்று, பிற வகுப்புப் பிள்ளைகளைச் சேர்க்காமலே பெரும் பான்மையான அவ்வொரு வகுப்புப் பிள்ளைகளை மட்டுமே வைத்துக்கொண்டு யதேச்சாதிகாரமாய்க் கல்வி கற்பித்துக் கொண்டு, தாலுகா போர்டாரின் சம்பளத்தோடு அப் பெற்றோருடைய பிற உதவியையும் பெற்று நிம்மதியாயிருந்து வந்ததைப் பொது ஜனாபிவிருத்தியில் ஆக்கங்கொண்ட ஒருவரது பெருமுயற்சியால் வேறு உபாத்தியாயரை அந்த இடத்துக்கு நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்பேரில் புதிதாக வந்த ஆசிரியர் அந்தப் பெரும்பான்மை வகுப்பினரின் தனிப்பட்ட ஊதியத்தை எதிர்பார்க்காமல் — ஆசைப்படாமல், பிற வகுப்பினரின் பிள்ளைகளையும் சேர்த்துக் கல்வி பயிற்ற முயற்சிக்கவே, அப்பெரும்பான்மை வகுப்பினருக்கு அப்புதிய ஆசிரியரின் மீது சினமேற்பட்டு என்னென்னவோ இன்னல்கள் செய்தும் முடியாமற் போயிற்று.

மேலும், அப்புதிய ஆசிரியரின் புதிய முறைகள் - பண்டைக் கால முறைகளாகிய, நாள் முழுதும் பிள்ளைகள் இப்படியும் அப்படியும் அசையாமல் உட்கார்ந்த இடத்திலேயே படித்துக்கொண்டும் எழுதிக் கொண்டும் முறைவைத்துக் கொண்டும், "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை"களைப் போல் இராமல், புதுமுறைப்படி குறித்த காலம் குறித்த நிர்ணயப்படி மனோ விருத்தி, ஆராய்ந்தறிதல், யோசனா சக்தி, காரணா காரியப் பாகுபாடுகளுடன் அறிவு விருத்திக்கான போதனைகள் நடைபெறுவதும்; அயர்ந்த மூளைக்கு—குறைந்த யோசனாசக்திக்குப் புதிய ஊக்கம் கொடுக்கும் ஓய்வுகால வெளிப்போதல் முதலிய நிகழ்ச்சிகளைக் கண்டு, இந்தப் புதிய ஆசிரியர் பிள்ளைகளை விளையாடவும் பேசவும் வீண் காலங்கழித்துப் பொழுதுபோக்குகின்றார் என்று வீணாக வெறுக்கவும், வேறு பள்ளிக்கூடம் வேறு ஒருவரைக் கொண்டு பண்டைய முறையில் மேலே காட்டியபடி பிள்ளிகளின் அறிவு வளர்ச்சியை அடக்கி ஒடுக்கி—கைகட்டி வாய்புதைத்துப் பயப்பிராந்தி கொண்டவர்களாய் சுதந்தர வளர்ச்சியின்றி அடிமைக்களஞ்சியமாய் — வீரவளர்ச்சி, பகுத்தறிவு ஒடுங்கியவர்களாய்ச் செய்து வருவது பெரிதும் வருந்தத்தக்கதாகும்.

இத்தகைய முறையே—"என் அடுப்பே திருப்பதி, என் ஆமக்கணே குலதெய்வம்" என்று சொல்வதுபோல், தம் கிராமமே இவ்வுலகமாய் நினைத்திருக்கும் பாமரத்தன்மை நிறைந்த பெற்றோர், தம் மக்களையும் அந்நிலையில் ஆழ்த்த நினைப்பாராயின், கல்வி அபிவிருத்திக்காகப் பாடுபடுவோரும் அம் முறையையே ஆகாயம் வரையில் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் புகழ்ந்து, மக்களாகப் போகும் பாலர்களை அவ்வடிமைப் புத்திக்கு உட்படுத்திப் புகழ்ந்துறுவது பெரிதும் விசனிக்கத்தக்கதே.

கிராமாந்தரங்களில் ஜாதி இந்துப் பிள்ளைகளோடு ஆதிதிராவிடப் பிள்ளைகளைக் கட்டாயமாய்ச் சேர்ப்பது, கல்விக்கும் ஆதி—திராவிடர்க்கும் இடையூறு விளைவிப்பதேயாகும். ஒரு ஊரில் ஆதிதிராவிடர்கள், ஜாதி இந்துக்களின் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் தனித்து உட்கார்ந்து படிக்கவும், உயர்ஜாதி இந்துக்களிடமுள்ள பயத்தால் விரும்பாமல், நாங்கள் அந்த உயர்ந்தஜாதி இந்துக்களின் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்துக்கு எங்கள் ஆதிதிராவிடப் பிள்ளைகளை அனுப்பமாட்டோம் தனியாய் எங்கள் பிள்ளைகளுக்கு வேறு பள்ளிக்கூடம் ஏற்படுத்திக் கொடுத்தால் கொடுங்கள்



என்று பள்ளிக்கூட அதிகாரியிடம் எழுதிக் கொடுத்ததை நாம் அறிவோம்.,

அத்தகைய உயர்ஜாதி இந்துக்களின் மனப்பான்மை மாறும் வரையில் ஆதிதிராவிடப் பிள்ளைகள் பெரும்பாலான கிராமங்களின் இக்கால நிலைமையில் சேர்ந்து படிப்பதென்பது வீண் பிரயத்தனமேயாகுமென்போம் இருபாலாரும் ஒன்றாய்ச் சேர்ந்து படிக்க உத்திரவிடும் அதிகாரிகள் அவ்வவ்வூர்களிலிருந்து அங்கு நிகழும் நிகழ்ச்சிகளைக் கண்ணால் பார்ப்பதில்லை—பார்க்க முடியாத காரியமாகும்.

பகுத்தறிவுள்ள பெற்றோர்களாயின் "இரவும் பகலும் நாள் தவறாமல்—நேரம் தவறாமல்-ஓய்வு இல்லாமல் ஆடுமாடுகளைப் பட்டிகளில் அடைத்து வைப்பதுபோல், வளர்ச்சி நிலையிலுள்ள தம்மக்களை அடக்கி ஒடுக்கிக் கால்கள் அசையாமல்—கட்டின கைகளை எடுக்காமல் உட்காரவைத்துக் கற்சிலையைப்போல் இருக்கச் செய்வதற்குப் பெரிதும் வருந்துவரெனலாம்" பெரும்பான்மையான கிராமங்களில் அவ்விதப் பெற்றோர்கள், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் அவ்விதம் இல்லாமையாலே, நம் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியடையாமைக்குக் காரணமெனக் குன்றின்மீதிருந்தும் கூசாமற் கூறுவோம்.

சுகாதாரக் கொண்டாட்டம் சம்பந்தமான ஊர்வலங்களில் அதன் சம்பந்தமான வாக்கியங்களைக் கண் கொண்டு பார்க்கவும், சுகாதார அச்சுப்பிரசுரங்களைக் கைநீட்டி வாங்கவும், பிள்ளைகளின் கல்வி சம்மந்தமாய்ப் பெற்றோர் கவனிக்கவேண்டிய விவரமான பிரசுரங்கள் முதலியவற்றையும், இவை என்னவோ ஏதோ என்று எண்ணிப் பார்க்கப் பயப்படுகிறவர்களோ, விருப்பமில்லாதவர்களோ; சுகமாயிருக்கவேண்டும்—சுத்தம் சுகம்தரும்—அசுத்தம் ஆயுளைக் குறைக்கும்-கந்தையானாலும் கசக்கிக்கட்டு—கூழானாலும் குளித்துக்குடி என்பன யாருக்குத் தெரியாது, இவரென்ன (உபாத்தியாயர்) நமக்குச் சொல்வது, இவற்றில் பிள்ளைகளை வீணே காலத்தைக் கழிக்க ஊரைச் சுற்றிவரச் செய்வது பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் இருப்பதும்—விளையாடுவதும் உபாத்தியாயர்களுக்குச் சங்கடமாயிருக்கிறதாக்கும், அதற்காகத்தான் இப்படி ஊரைச்சுற்றி வரச்செய்கிறார்களாக்கும் என்பவர்களோ, இன்னும் புதுமுறைகளை இழித்துக் கூறுபவர்களோ—நம்மை தெரியாமல் வெறுத்துக் கூறுபவர்களோ; கிராமப் பஞ்சாயத்து அமைப்பின் சீர்திருத்தங்களில் தம் பழைய அதிகார சுதந்தரங்களை ஒரு சிலரிடம் கொடுக்கப் பிரியமில்லாமல் பஞ்சாயத்

தில் வெறுப்புக்கொண்டோர், பஞ்சாயத்தின் எலக்ஷன் காரியாதிகளுக்கு மேலதிகாரிகளின் உத்திரவுப்படிப் பாடசாலையில் இடங்கொடுக்கும் சர்க்கார் பாடசாலை ஆசிரியர் பஞ்சாயத்து நிர்வாகிகளுக்கு, தங்களுக்கு விரோதமாய் உடந்தையாயிருக்கின்றாரென்ற மனமாற்றமுடைய—அழுக்குடைய-பகுத்தறிவற்ற கிராமவாசிகளால் காரண காரியங்களை ஆசிரியர் எடுத்துக் கூறினும், "தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்ற பிடிவாதமுள்ள பெற்றோர்களால் கல்வி அபிவிருத்தியும், பொதுஜன க்ஷேமமும் எங்ஙனம் அபிவிருத்தியாகும்?

கிராமாந்திரப் பெற்றோர் விரும்பும் இத்தகைய கல்விக்கே, பொதுஜனக்கல்விச் சீர்திருத்தக்காரர்களும் சர்க்காரும் இடங்கொடுத்துக் கொண்டே போனால், அல்லது ஒரேயடியாய்க் கட்டாயப்படுத்தினால் மிகப் பெருஞ்சிரமந்தான்.

ஆகவே, முதலில் வயது வந்த பெற்றோர்களை, உலகப் பொது முன்னேற்றக் கல்வியில் கிராமாந்திர வாசகசாலைகளின் மூலம் - பத்திரிகைகள் படிப்பதின்—படிப்பிப்பதின் மூலம் மனமாற்றம் அடையச் செய்தாலே புது முறைக் கல்வியிலும் வகுப்பு பேதமற்ற கல்வியிலும் அவர்களை ஈடுபடச் செய்வதற்குச் சிறந்ததும் முதன்மையானதுமான வழியாகும் என்போம்.

ஆதலால், அறிஞர்கள் ஆரம்பப் பாடசாலைகளின் மூலம் இவ்வரிய செயலைச் செய்கையின் மூலம் செய்து இவ்வஸ்திவாரத்தின் பேரில் ஆரம்பக் கல்வி நிர்மாணக் கட்டிடத்தைக் கட்டி நிலைபெறுமாறு - வளர்ச்சியுறுமாறு செய்யவேண்டுகின்றோம். சென்னை புத்தகாலயப் பிரசாரச் சங்கத்தாரும் ஆரம்பக் கல்விக் கிருஷிகரும், கல்வி வளர்ச்சிச் சுவான்தாரரும் ஒத்து உழைத்துப் பெருநலம் பயக்கச் செய்யவும் வேண்டுகின்றோம்.

---

## சாணத்தின் உபயோகம்.

இந்தியர்கள் தரை, சுவர் இவைகளை மெழுகுவதற்கு பசுஞ்சாணத்தை உபயோகித்து வருகிறார்கள். வைத்திய சாஸ்திரப்படி பசுஞ்சாணத்தில் 'பாக்டீரியோ பேஜ்' இருப்பதாகவும், அது நோய்க்கிருமிகளை அழிப்பதாகவும் இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. மதராஸ் பொதுஜன ஆரோக்கிய இலாகா டைரக்டராகிய லெப்டினெண்டு கர்னல் வெப் என்பவர், பசுஞ்சாணத்திலிருந்து பேஜுகளை எடுத்து ஆராய்ச்சிகளைச்செய்து, வாந்திபேதியைத் தடுப்பதற்காக உபயோகித்து வருகிறார். இதனால் அதிக அனுகூலம் இருப்பதாகத் தெரிய வருகிறது.—தி ட்ரெஷர் செஸ்டு.

# அடக்கி ஆளல்; தன்னடக்கம்; சித்தஸ்வாதீனம்

(திரு சி. வெங்கடேச அய்யர் பி. ஏ எல். டி. அவர்கள் பொள்ளாச்சி)

'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்றார் பெரியார். மனமே நமக்கு சத்துரு அதுவே நமக்குமித்துரு. ஸத்வழியில் நடக்கும் சமயந் தவிர இதர காலங்களில் பாபச் செயல்களில் ஈடுபட்டு நம்மை இழுத்துச் செய்வது அதுவே. அக்காரியங்களில் சில எவ்வித பிரயோசனமு மற்றதாகவே யாகும். மனதையடக்கியாண்டவரும் அதையே தன்னிஷ்டப்படியே விட்டவரும் பிரயோசனமுள்ளதும் அற்புதமான செய்கைகளையும் செய்த பலரிட சரித்திரத்தை இங்கு விளக்குவோம்.

முன்னொரு காலத்தில் 'மெஸடோனியா' என்னும் தேசத்தையாண்டுவந்த 'பிலிப்ஸ்' என்போனொருவனிருந்தான். அவனுக்கு நல்ல குதிரைகளை வளர்ப்பதிலும் பழக்கிச் சவாரி செய்வதிலும் பிரியம் அதிகம். ஒரு நாட்காலை குதிரை வியாபாரி ஒருவன் சில குதிரைகளைக் கொண்டுவர அரசன் பிரியப்படும்படியான ஒன்றை பக்கத்திலிருந்தோர் தேர்ந்தெடுத்தார்கள். இதைக் கண்டு ஆவல் கொண்ட மன்னன் அதன் விலையை நிச்சயித்தான், அதை ஒரு பெரிய மைதானத்திற்கு அழைத்துச் சென்று பரீக்ஷிக்கும்படி பாகனை ஏவினான். குதிரையோ வெனின் யாரையும் தன்பேரில் ஏறவிடாமல் தடுத்து நிலத்தைக் கால்களால் பறந்து முன்னும்பின்னுமாகச் சென்றதேயொழிய அரசன் கட்டளைப்படி பாகன் ஒருவன் கூட பக்கத்தில் நெருங்க இடங் கொடுக்கவில்லை. இதைக் கண்ணுற்ற காவலன் 'இது ஒரு சுத்த முரட்டு மிருகம், அழைத்துச் செல்லுங்கள் என்றான்.

இவ்விருத்தாந்தங்களை நோக்கிக் கொண்டும் அரசன் ஆக்ஞையைக் கேட்டுக்கொண்டும் அண்டையில் நின்ற இளவரசரான அலெக்ஸாண்டர் ஆச்சரியமுற்று "ஆகா என்ன நேர்த்தியான மிருகம்; இதை யடக்கி ஆளும் திறமையும் பொறுமையும் இன்றி விட்டுவிடுகிறார்களே", என்று அறையலாயினன்.

இதைச் செவியுற்ற மன்னன் சினங்கொண்ட போதிலும் மகனை நோக்கி, 'கண்ணே! உன்னிலும் அனுபவத்திலும், பயிற்சியிலும் வயதிலும் முதிர்ந்தோர் அடக்கியாள முடியாத அசுவத்தை வசப்படுத்தும் சமர்த்தன் போலல்லவோ பேசுகின்றனை? அவர்கள் பேரில் இவ்வாறு குற்றம் கூறல் முறையோ தகுதியோ" என்றான்.

‘அதில் ஐயமென்ன’ என்றறைந்த புதல்வனைக் கடிந்து கூறுவான் அண்ணல் “உன்னால் இம்மிருகத்தை வசப்படுத்த முடியாவிடில் உனக்கென்ன தண்டனை விதிக்கலாம்.”

“குதிரையின் விலை முழுவதும் யான் கொடுக்க உள்ளவன்” என்றான் இளவரசன்.

வேந்தன் பந்தயத்திற் கிணங்கியதை நோக்கி அங்கு கூடிய ஜனங்கள் நகைக்க உலகமறியாத இளங்கோ மான்குட்டி துள்ளி ஓடுவது போல் சென்று அசுவத்தின் கடிவாளத்தைப் பிடித்து அதன் முகம் சூரியனை நோக்குமாறு செய்தான். பகலவனுக்கு எதிர் புறமாக நின்ற பரி தன் நிழலைக்கண்டு மயங்கியதாக அறிந்தவன் அலெக்ஸாண்டர் ஒருவனே அதன் பயம் தெளியுமாறு அதைத் தட்டிக் கொடுத்து சற்று சாந்தப்படுத்தி சவாரி செய்யத்துடங்கினன். அரசனும் மற்றும் அங்கிருந்த ஜனங்கள் யாவரும் மனம் பொறுக்காதவராய் வாலிபன் கண்ணிற்கு மறையும் வரை நோக்கிக்கொண்டே நின்றார்கள். குதிரை வியாபாரிக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் இளவரசு வெகு கம்பீரமாய் மிருகத்தை நடத்திக்கொண்டு வருவதைக்கண்ட பலரும் ஆச்சரிய மடைந்தார்கள்

குதிரையைவிட்டு இறங்கிய தன் மகனை கட்டித்தழுவி முத்தமிட்டுக் கண்களில் ஆனந்த பாஷ்யம் பொழியும்படி சொல்வானாயினன் “மகனே! பெருமைக் கண்மணி. நம்தேசம் உனக்கு மிகவும் சிறியது இத்தேசத்தைவிட்டுச் சென்று வெளியிடங்களில் அநேக நாடுகளைச் ஜெயித்து வா”. இவ்வாலிபனே பிற்பாடு இந்தியாவரையுள்ள பல நாடுகளை ஜெயித்து மகா அலெக்ஸாண்டரென பெயர் பெற்ற மன்னனாக விளங்கினான்.

மற்றவர்களால் முடியாத எக்காரியத்தை இளவரசு செய்து முடித்ததாக நாம் எண்ணுகிறோம், குதிரையைப் பழக்கப்படுத்தினார். அதை ஜெயித்தார் அதை அடக்கி வசப்படுத்தினார். அது அவர் சுவாதீனத்தில் வந்தது. இதையறிந்தே தகப்பனார் அவ்வாறு கூறினார்.

இவ்வளவோ! குதிரைதானோ! இன்னும் எவ்வித பிராணிகளையும் எளிதில் அடக்கி வசப்படுத்திவிடுகிறார்கள். சிறு குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்திருக்கிறீர்கள். ஒரு பிராணியுடன் விளையாட்டைச் சொல்லவில்லை; ஒரு இரும்புச் சக்கரமும் ஒரு கோலும் ஒரு வாலிபனிடம் கொடுப்போம். அது கீழே விழாமல் தன் இஷ்டம் போல் திருப்பித் திருப்பி ஓடும்படி செய்யும் சிறுவனின் சாமர்த்தி



யத்தைக் கவனியுங்கள் அதே குழந்தை தன் பருவமடைந்த காலத்து துவிச்சக்கர வண்டியில் ஏறி பந்தயங்களில் செலுத்தி வரும் பொழுது அவனைச் சமர்த்த னென்கிறோம். அதை அடக்கி ஆளும் திறமை அவனிடம் உண்டு. அவ்வாறின்றி மலைச்சாரிவில் தலைகீழாக ஓடிவரும் ஒரு யந்திரத்தின் மேலுள்ள ஒருவன் அதை அடக்கியாளும் சக்தியற்றவனாகிறான்.

ஒரு பெரிய மளிகைக்குச் செல்வோம். அங்கு நடப்பவைகளை ஆராய்வோம். அன்றுதான் கிடைத்த சாமான்களை ஒழுங்காக எண்ணிக் கணக்கிட்டு வைக்கிறார்கள் அதிலும் ஒரே மாதிரியானவைகளை ஒரு புறமும் மற்றவைகளை வேறாகவும் பிரிக்கிறார்கள். சிலர் கணக்கு படிக்கிறார்கள். ஒருவன் கணக்கு போடுகிறான். மறுபக்கத்தில் சரக்குகள் விற்பனையாகின்றன. வாசலில் சரக்குகள் அயலிடங்கட்கு கொண்டுபோக வண்டிகளில் ஏற்றப்படுகின்றன. இதைத் தணிக்கை பார்ப்போன் ஒருவன். மளிகைக்குச் சரக்குகள் கொண்டுவந்த வண்டிகள் உள் நுழைய வழி ஒன்று. அதில் ஒருவன் சரிபார்த்து உள்ளே விடுகிறான். சிலர் தபால் தந்திகளைக்கொண்டு வந்து கொடுக்கிறார்கள். மளிகையிலிருந்தும் கடிதம், தந்தி கொண்டுபோவார் சிலர். ஒருவர் டெலிபோனில் பேசிக்கொண்டு இருக்கிறார். யார் உத்திரவினால் இவை நடைபெறுகின்றன வென்பதை ஆராய்ந்துயர். அதோ ஒருவர் மேஜையண்டையில் நிற்கிறார். அவர் சிலரிடம் கடிதம் கொடுக்கிறார். சில கடிதங்கட்கு கையெழுத்திடுகிறார். சிலரிடம் விலை பேசி நிச்சயிக்கிறார் இவரே இம்மாளிகைக்குச் சொந்தக்காரரோ அல்லது மானேஜரோ. இவரே தான் இதை அடக்கி ஆளுகிறார்.

ஒரு ராணுவ ஸ்தலத்திற்குப் போவோம். ஒரு பெரிய மைதானத்தில்கட்டப்பட்ட கற்கோட்டை. சுற்றிலும் புல்தரை. சண்டைக்கு ஆரம்பம். எதிரிகள் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். ஒருவர் தன் கைகளைப் பின் புறமாகக்கட்டி வைத்ததுபோல் நின்று கொண்டு நாற்றிசையும் பார்க்கிறார். சற்று குனிந்து வெகு நுட்பமாகப் பார்க்கிறார். பக்கத்தில் நிற்கும் 10000 காலாட்படையைப் பார்த்து ஏதோகட்டளை யிடுகிறார். பெரிய மரம் சாய்ந்தது போல் ஏக காலத்தில் கீழே விழுகிறார்கள். எதிரியின் குண்டுகள் ஒன்றும் பயன்படாமல் போகிறது. மறுபடி கட்டளை யிடுகிறார். ஒரே சுவர்போல் எல்லோரும் நிற்கிறார்கள், திரும்புகிறார்கள்—குண்டு வெடிக்கிறார்கள். இவர்களை இம்மாதிரி செய்பவர் யார்? தளகர்த்தன் இவர்களை இவ்வாறு பழக்கி தன்

கட்டளைப்படி கொஞ்சமும் தவறாமல் நடக்கும்படி செய்திருக்கிறான். அவர்களை அடக்கி ஆளும் வலிமை பொருந்தியவன் அவனே. இவ் விஷயத்தில் பெயர் பெற்று வழங்கிய நெபோலியன் என்பன் சரித்திரம் நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

எவ்வாறு ரெயில்வண்டியை ஓடும்படி செய்ய அது எக்காலத்து எம்மாதிரி செல்லவேண்டுமென்பதை நிச்சயிக்க கார்டும் இருக்கிறார்களோ அம்மாதிரியே தண்ணீரில் செல்லும் கப்பல் நடத்தி மாலுமி இருக்கிறான். கப்பலைப் பார்க்கவும் அது தண்ணீரில் ஓடுவதைக் கவனிக்கவும் அநேகருக்கு ஆவலுண்டு. அதை தன் வசமாக்கி தன்னிஷ்டப்படி ஓட்டவும் நிறுத்தவும் செய்ய மாலுமிக்கு சக்தியுண்டு. இச் சக்தியினால் அநேகர் கடல் மார்க்கங்களில் பிரயாணம் செய்கிறார்கள். இக்காலத்து இதிலும் அற்புதமான ஆகாயக்கப்பலின் மாலுமிகளைப் பார்க்கிறோம். பக்ஷிகள் பறப்பது போல் தம்யந்திரத்தில் தாமும் இன்னும் அநேக ஜனங்களுடனும் ககன மார்க்கத்தில் சென்று இறங்க வேண்டிய இடமறிந்து கீழிறங்குகிறார்கள். அபாயம் நேரிட்ட காலத்தும் தம் நிலைமையை கம்பியில்லா தந்திமூலம் அறிவிக்கிறார்கள்.

(தொடரும்)

---

## குரு வணக்கத்தின் நன்மை

அன்பே அமர்ந்திடும்
ஆசான் அருகினில்
இனிமையா யிருந்தே
ஈவது ஈழமும்
உடலும் உயிருமே
ஊனிலா ஊனுமாய்
எக்கா லத்துமே
ஏவிய முறை வழி
ஐயமத கற்றியே
ஒப்பற் றொருவனை
ஓதியு மோர்ந்திடில்
ஔவை யடைபதம்
அஃதடைவதும் ஆணையே.

# உதய குமாரன்

(வஞ்சித்தாரைத் தெய்வம் தண்டிக்கும்)

## ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன் தொடர்ச்சி)

மயானத்தில் மற்றோர்புறம்.

மதனன்:—பைரவா! கோயிலில் திடீரென்று ஓர் இடி உண்டாயிற்றே அது என்னடா?

பீமன்:—சாமி! அந்த இடி பயத்தால் எனக்குச் சுரம் கூட வந்துவிட்டது (உடம்பு நடுக்குதல்)

பைரவன்:—சாமி! அதெல்லாம் இருக்கட்டும். ராஜா உத்திரவுப்படி செய்யலையே அவருக்கு இன்னா சொல்ரது.

பீமன்:—நீங்க எப்பிடியின்னா போங்க. நானு உங்க கூட வரமுடியாது. இங்கியே படுத்துக்கிரே. (படுத்துக் கொள்ளுதல்).

மதனன்:—ஆம்! அதற்கென் செய்வது. எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே.

பைரவன்:—நாம்போ அங்கே போயிபாப்போமா?

மதனன்:—அட்டா நான் என் ஜென்மத்திற்கும் அவ்விடம் வரமாட்டேன். ஓடிவரும்போது ஓர் பள்ளத்தில் வீழ்ந்து எழுந்து வந்ததே போதுமாய் விட்டது. பார்த்துவருவதென்றால் நீ போய்ப் பார்த்துவா. நான் இவ்விடத்திலேயே இருக்கின்றேன்.

பைரவன்:—அய்யய்யோ. நாங்கூட போவே மாட்டேன்.

மதனன்:—நல்லது. நாம் இப்பொழுது அவ்விடம் போனால்கூட என்ன பிரயோசனம். இதற்குள் அந்தச் செட்டி மகன் எவ்விடமாவது ஓடிப்போய் விட்டிருப்பான். என் மாதுலர்க்கு என் சொல்வது?

பைரவன்:—அத்தான் எனக்குத் தெரியலே.

மதனன்:—(சற்றுயோசித்து) இப்படி சொல்லிவிடுவோம்.

பைரவன்:—அதான் செரி.

மதனன்:—உனக்குத் தெரியும்

பைரவன்:—எதுவானு இன்னுசாமி. எதுண்ணு ஒரு புளுவு புளுவி நாம்போ தப்பிச்சிக்கவோணும். அதுக்குதாவழி பாக்கோணும். அது இன்னு சொல்லுங்கோ பாப்போம்,

மதனன்:—மன்னரிடம் சென்று சீவோதயனை அவர் கட்டளைப்படி மயான தேவதை முன்னம் நிறுத்தி அவட்கு பலியிட்டு விட்டதாகவும், அவன் உடலை யாவரும் அறியாவண்ணம் புதைத்துவிட்டதாகவும் சொல்லிவிடலாம்.

பைரவன்:—அதான் சரி. அதான் சரி. வாங்கோ சாமி சீக்கிரம் போயி சொல்லிடலாம்.

பைரவனும் மதனனும் போய்விடுதல்.

துஷ்டத்தும்மன் சபை

துஷ்டத்தும்மன்-குணாகரன்-சபையில் வீற்றிருத்தல்.

துஷ்டத்:—குணநலன் சான்றமந்திரி! இன்று நிகழ்ந்த செய்தியாவும் நீ அறிவையோ.

குணாகரன்:—அறிவேன்.

துஷ்டத்:—அதைப்பற்றி நின் அபிப்பிராயமென்ன?

குணாகரன்:—தாங்கள் செய்வது மிகவும் நன்று. சீவோதயன் இன்னும் உயிருடன் இருப்பின் தங்களுக்கு எப்படியும் கேடாகவே முடியும். அவன் உயிர் இழந்தாலல்லாது தங்கள் துயர் அகலாது. மேலுந் தங்களுயிர்க்கே யாபத்து.

மதனன்:—(பிரவேசம்) மாதுல! வந்தனம்.

துஷ்டத்:—காரியம் பலித்ததா?

மதனன்:—தங்கள் கட்டளைப்படியும், இஷ்டப்படியுமே.

துஷ்டத்:—மிகவும் சரி. நடந்த தென்ன?

மதனன்:—அரசே! நானும் நம்வீரர்க்கு வீரரான பீமனும் பைரவனும் சீவோயதனைச் தேடிச் செல்ல கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் சீவோதயனும், உமது மருமகனும் பெரிய கடைவீதியாக வந்துகொண்டிருந்தார்கள். அதைப்பார்த்தவன் நான் தான்.

துஷ்டத்:—உன்னுடைய பராக்கிரமம் எளிதோ. நீ யல்லவோ எனக்கேற்ற மைத்துனன். சங்கதியை விவரமாய்ச் சொல்.

மதனன்:—தாங்கள் என்னை வீணில் புகழ்வதேயல்லாது எனக்கு இதுவரைக்கும் என் வீரப்பிரதாபத்திற்கு என்ன பரிசளித்தீர். சீவோதயன் நண்பனும், சீவோதயனைச் சிறைப்படுத்தும்போது எனக்குப் பயந்தோடியவனுமான பதுமுகனுக்குத் தங்கள் மகளையும் கொடுத்துவிட்டீர்கள். தங்களுயிர்க்காபத்தாயுள்ளவனைத் தொலைத்ததற்கு என்ன பரிசளிக்கப் போகின்றீர்.

துஷ்டத்:—எல்லாம் உன்னுடையதே. எனக்குப்பின் இந் நாட்டை யார் ஆள்வது. நீயே யல்லவோ?



மதனன்:—அதெப்படி! தங்கள் மகளும் மருமகனுமிருக்க

துஷ்டத்:—அவையாவு மம்மட்டில் இருக்கட்டும், அப்பால் பேசுவாம் நடந்ததைச் சொல்.

மதனன்:—நடந்த சங்கதி யப்படி யிருக்கட்டும்.

துஷ்டத்:—நேரமாகிறது, சீக்கிரம் சொல். இன்று நான் ஓர் முக்கிய விஷயமாய் அவசரத்துடன் போகவேண்டும்.

மதனன்:—என் சங்கதியைத் தாங்கள் சீக்கிரம் சொல்லிமுடித்தால் தங்கள் சங்கதியை நான் சீக்கிரம் சொல்லிமுடிக்கின்றேன்.

துஷ்டத்:—இது ஏது-மதனனைச் சற்று உயர்த்திப் பேசியதால் வந்த சங்கடம் போலும்.

குணாகரன்:—ஆம். ஆம். அப்பா மதனா! உன் மாதுலர்க்குடையதெல்லாம் உன்னுடையதே. நீ அவர்க்குச் செய்து வந்த உதவிகளுக்கெல்லாம் உன்னைவிட அவர்க்குத் தக்க உதவியாயுள்ளவர் யாரிருக்கப் போகின்றார்கள்.

மதனன்:—மதிப்பெருங் குன்றமே! அஃதப்படியன்று அவர் வாயால் இந்த ராஜ்ஜியம் அவர்க்குப் பின்னர் என்னுடையதென்று சொல்லட்டும் போதும்

துஷ்டத்:—எல்லாம் சரி. விரைவில் சங்கதியைச் சொல். நேரமாகின்றது.

மதனன்:—அப்படியாயின் சரி சொல்லுவன். நான் அவர்களைப் பார்த்தபின்னர் பைரவனுக்குச் சீவோதயன் பின்பாக வந்து யாவரும் அறியா வண்ணம் பிணித்து விடும்படிக் கட்டளையிட்டேன். அப்படியே அவன் சென்று பிணிப்ப, பீமனும் நானும் நம்மருமகனை வெருட்டியடித்து நம் பகைவனை மயானம் நடத்திச்சென்று ஆங்கெழுந்தருளி யிருக்கும் ருத்திரி யம்மையார் முன்னிறுத்தி என் கை வாளால் அவன் சிரம் மண்படியும்படி வெட்டி அவ்வம்மையார்க்குப் பலியிட்டு அவனுடலை யாருமறியாவண்ணம் மண்ணுக்கிரையாக்கி வந்தேன்.

துஷ்டத்:—நன்றியற்றினாய். நின் சாமர்த்தியமே சாமர்த்தியம். நினக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளை யெல்லாம் நின் இஷ்டப்படி எடுத்துக் கொள்ளலாம். குணாகர! நம் பகைவன் கொட்டம் அடங்கியது. அவனால் என்னகத்துக் குடிகொண்டிருந்த கலக்கமனைத்தும் இன்றோடொழிந்தது. இது செய்தி நிகழுமுன்னரே வைரமணிச் செட்டி தன் மனைவி மருமகளுடன் தன் வீட்டை விட்டு எவ்விடமோ ஓடி விட்டனளாம். சயிந்தையை வலிதில் மணக்க வெண்ணிய என் எண்ணம் பாழ்பட்டதே. என்றாலும் சீவோதயன் தொலைந்தான் என்னும் சந்தோஷ செய்தி கேள்விபட்ட மாத்திரத்தில் அவ்விசனம் போய்விட்டது. எத்

துணைக் கஷ்ட நஷ்டங்கள் நேரிட்டபோழ்திலும் சயிந்தை யிருக்குமிடமறிந்து எவ்விதத்திலாவது என் காதற்குப் பாத்திரமாக்க வேண்டும். குணாகர! நீ சீக்கிரம் சென்று நம் வீரர்கள் சிலரைப் பல திசையும் போக்கிச் சயிந்தை யிருக்குமிடத்தை அறிந்து வரும்படிச் சொல்லி, எவன் இருப்பிடமறிந்து வருகின்றானோ அவனுக்கு ஓர் கிராமம் கொடுப்பதாகவும், எவன் செய்தி யறியாது திரும்பி வருகின்றானோ அவனைச் சிரச்சேதம் செய்து விடுவதாகவும் தெரிவிப்பாய். நான் சீக்கிரம் இன்றுபோக வேண்டியிருக்கின்றது. [யாவரும் போய்விடுதல்].

பதுமுகன் தனிமை

என்னுயிர் சீவோதய! நீ இறந்து விட்டாயென்று கேள்வி பட்டும் என்னுயிர் இன்னுமிருக்கின்றதே. அப்பாதகன் துஷ்டத்தும்மன் தன் வஞ்சகத்தால் நின்னுயிர்க்குத் தீங்கிழைப்பனென்று முன்னரே அறிந்திருந்தால் அவனை அவன் நாட்டுள் வதைத்திருக்காயோ. நின் வலிமை எங்ஙனம் அடங்கி யொடுங்கியது? அச் சண்டாள மதனன் நின்னைக் கொலைபுரிந்த போது நின்மனம் என்ன வென்ன வெண்ணியதோ? வைரம் காய்த்துச் சொரியும் வைரமணிச் செட்டியார் வயிற்றுதித்து, யாவராலும் செல்லற்கரிய வேடுவர்தமை வென்று அவர் கவர்ந்து சென்ற கோநிரையை மீட்டுவந்தும், நல்வேந்தர் மெச்சவும், தீவேந்தர் வெட்கிக்கவும் மன்னர் மகளாம் சயிந்தையை மாலையிட்டு ஓர் தனிச் சிங்கம்போல் நின்ற நின்பராக்கிரமம் எங்கு சென்றது? கடவுளார்க்கும் நின்னிடம் கருணை யில்லையோ! நின்னைப் பெற்றோர்க்கு ஒரே புதல்வனான நீ மதனன் கைபட்டாய் என்றறியின் அவர் உயிர்வாழ்வரோ. ஆ! என்பிராண நேசா! நின் நாயகி நீ சிறைப்பட்டாய் என்று கேட்டதும் உயிர்துறக்க எவ்வளவோ முயன்றாள். இப்போது நீ இறந்தாயென்றறிந்தால் அவள் எவ்வளவு தான் வருந்தாள்? கடவுளர் நின் பொருட்டில்லாவிடினும் நின் மனைவி பொருட்டாவது கருணை வைத்தலாகாதோ? நின்னால் கடைத்தேரவேண்டுமென்றிருந்த என்னெண்ணம் அவலமாயிற்றே இத்தனை உயிர்கட்கும் உதவியாயிருந்த நின்னை வஞ்சகத்தால் கொன்ற அப்பாதகனுக்கு என்னகேடு நேரிடுமோ? ஐயோ! தெய்வமே! வஞ்சகத்தால் அரசனைக் கொன்று அரசைக் கவர்ந்தான் மேலும் தன் வஞ்சகத்தால் என் நண்பனைக் கொன்று மகா பாதகத்திற்குப் பாத்திரனான பாதகனுக்குச் சகாயம் செய்கின்றனையே. இதுவும் நியாயந்தானோ! நின் நாயகிக்கு நிற்குரிய ஏது செய்தியும் தெரிவிப்பதாக வாக்களித்து வந்தேனே. இவ்வமங்கலச் செய்தியை எடுத்துச் சொல்லவாபுவியிற் பிள்ளையாய்ப் பிறந்து வளர்ந்தேன். இதுவும் தலைநாளின் விதியோ. விதித்தாங்கு சயிந்தையிடம் சென்று அவட்குச் செய்தி யறிவித்து உயிர்துறப்பம். இனி நாம் செல்வம். செல்வமெனினும் காலிடறுகின்றதே என்று சோர்ந்து கீழே உட்காருதல். (பின்பு தேரி எழுந்துபோதல்)

# கௌமார குருகுலம் மன்னார்குடி.

## உயர்தரக் கிராமக்கல்வி வித்யாசாலை.

1934ஆ ஏப்ரல்மீ 4உ முதல் ஜூன் 20உ வரையில்

நடைபெறும்.

மன்னார்குடி கௌமார குருகுலத்தில் 1932ஆ ஏப்ரல் மே மாதங்களில் கிராமக்கல்வி வித்யாசாலை ஒன்று நடைபெற்றது. அப்பொழுது 45 மாணவர்கள் ஆண், பெண் கூடினவர்களுக்கு 46 ஆசிரியர்களைக்கொண்டு 70 பாடங்கள் (1) சமயம், ஒழுக்கம் (2) சுகாதாரம் (3) கிராமப் பொருள் நிலை (4) தமிழ் மொழி (5) தேச சரித்திரம், பூகோளம் (6) கிராமப் பரிபாலனம் [7] பூத பௌதீக அறிவு என்ற விஷயங்களைப்பற்றி கிராம வாசிகளுக்குப் போதுமான அறிவு போதிக்கப்பட்டது. 1933ஆ கோடைக்காலத்தில் கௌமார குருகுலத்தார் சுற்றியுள்ள சில கிராமங்களுக்குச் சென்று அவ்விடங்களில் சில நாள் தங்கி 199 மாணவர்களுக்கு மேற்சொல்லிய விஷயங்கள் கூடிய வரையில் சொல்லிக்கொடுக்கப்பட்டன.

2. இவ்வாண்டில் கிராமவாசிகளுக்கு பயிர்த்தொழில் காரியம் குறைவாக இருக்கும் கோடைகாலத்திலும், மழை காலத்திலும் இரண்டு மூன்று மாதங்களில் கிராம வாழ்க்கைக்கு அவசியமான உயர்தரக்கல்வி கற்றுக்கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. தற்காலத்தில் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிலும், கற்றுக்கொடுக்கும் கலவி கிராமத்தில் வாழும் நம்மவர்களுக்குப் பிரயோஜனப் படாமல் போவது யாவரும் அறிந்த விஷயம். ஆதலால், கிராம வாழ்க்கைக்கு தற்காலத்திற்கேற்ப அவசியமான அறிவு ஊட்டுவதே இப்பள்ளிக்கூடத்தின் நோக்கம்.

3. இப்பள்ளிக்கூடத்தில் எல்லா விஷயமும் தமிழிலேயே சொல்லிக்கொடுக்கப்படும். ஆங்கிலத்திற்கும் கொஞ்சம் ஆதாரம் கொடுக்கப்படும். சர்க்கார் உத்தியோகத்திற்கு வேண்டிய பரீக்ஷைகளுக்கு இங்கு கல்வி கற்றுக் கொடுக்கப்படவில்லை. ஆனால், பள்ளிக்கூட முடிவில் எழுத்து மூல்யமாகவும், வாய்ச் சொல் மூல்யமாகவும் கற்றுக்கொடுக்கப்பட்ட விஷயங்களில் மாணவர்கள் எவ்வளவு தேர்ச்சி பெற்றார்களென்று பரிசோதனை செய்து நற்சாக்ஷி பத்திரங்களும் (சர்ட்டிபிகேட்ஸ்] பரிசுகளும் கொடுக்கப்படும். பழைய நாள் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றதுபோல மாணவர்கள் தாங்கள் உபாத்தியாயர்களிடம் கற்றுக்கொள்வதுடன், தமக்குக் கீழ்தரத்தி

ளுள்ள மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துப்போதிக்கும் முறையும் பேசுந்திறமையும் பழகுவார்கள்.

4. மாணவர்கள் கௌமார குருகுலத்தில் குருகுல வாசஞ் செய்து கல்வி கற்று நல்லொழுக்கம் பழகுவார்கள். அவர்களுக்குத் தேவையான சாதாரண சாப்பாடும், இடவசதியும், சம்பளம் உள்பட மாதம் ஒன்றுக்கு ரூபாய் 6-க்கு ஏற்பாடு செய்யப்படும். இது பணமாகக் கொடுக்கத் தேவையில்லை. நெல்லாகக் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளப்படும். 25 பேர்களையே இவ்வாண்டில் சேர்த்துக்கொள்ள இயலும். ஸ்திரீகளுக்கு எங்கள் வீட்டிலேயே இருப்பதற்கு சௌகரியமும் ஜாக்கிரதையுமான ஏற்பாடும் செய்யப்படும். மாணவர்கள் தமிழிலும், கணக்கிலும் சாதாரண அறிவு உள்ளவர்களாக இருக்கவேண்டும். பதினான்கு வயதுக்கு மேற்பட்டவர்களையே இப்பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளப்படும். ஏனெனில், அவ்வயதிற்குக் குறைந்தவர்கள் சொல்லப்படும் விஷயங்களை அறிய இயலாது. தமிழிலும், கணக்கிலும் தேர்ச்சியுள்ளவர்கள் இப்பள்ளிக்கூடத்தில் சேர்வார்களானால் கோடை காலத்தில் சுமார் மூன்று மாதங்களிலும், மழை காலத்தில் மூன்று மாதங்களிலும் அவர்களுக்கு வேண்டிய கல்வி கற்றுக்கொள்ளலாம். இல்லாவிடில் இன்னும் ஒரு வருஷம் அதிகமாகப் படிக்கவேண்டி வரும்.

5. தற்காலத்தில் சாதாரணமாக வகுப்புகளில் சொல்லிக் கொடுப்பது போலில்லாமல் மாணவர்கள் ஒவ்வொருவரும் நேராக கவனிக்கப்பட்டு பகலிலும், இரவிலும் கல்வி கற்றுக்கொடுக்கப்படும். உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் அன்னியோன்னியம் ஏற்படும்படி குருகுலவாசம் நடைபெறும். அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்த பல பெரியார்கள் சென்னை முதலிய பல வெளியூர்களிலிருந்துவந்து குருகுலத்தில் தங்கி மாணவர்களோடு கூடிக் குலவி தற்கால விஷயங்களைப்பற்றியெல்லாம் சம்பாஷணை செய்து மாணவர்களுக்கு மனக்கிளர்ச்சியை எழுப்புவார்கள்.

6. ஆதலால் மாணவர்கள் குருகுலத்தில் தங்கி படிப்பதே நலம். அவ்விதம் சௌகரியமில்லாதவர்கள் வெளியே சாப்பாடும் வசதியும் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டுமானால் மாதம் ஒன்றுக்கு சம்பளம் ரூபாய் இரண்டுமட்டும் கொடுக்க வேண்டும். இதுவன்றி, மாலை, இரவு முதலிய காலங்களில் நிகழும் பெரியார்களின் உபந்நியாசங்களுக்கு வந்துகேட்க பிரியம் உள்ளவர்கள் மொத்தம் இரண்டு மூன்று மாதங்களுக்கும் ரூபாய் 2 கொடுக்க வேண்டும். ஏழை மாணவர்களுக்குத் தக்கபடி பணம் குறைத்துக் கொள்ளுவோம்.



7. கிராம வாழ்க்கைக்கு அவசியமான கல்வியாவது:—

1. ஒவ்வொருவரும் தங்கள் மத உண்மைகளையும், தங்கள் தோழர்களின் மதக்கருத்துகளை அறிவதோடு, நீதி முறை ஆசார ஒழுக்கங்களைக் கூடியவரை காரணகாரியங்களுடன் அறிவது பெரியார்களின் வாழ்க்கை சரிதங்களைக் கற்று அறிவது.

2. தன் உடல் வியாதியின்றி சுகமாகவும், சுத்தமாகவும், இருப்பதற்கும் வீடு, தெரு, கிராமம் இவைகள் குப்பை அழுக்கு இல்லாதபடி சுக ஜீவியத்திற்குத் தக்கதாக வைத்துக் கொள்ளவும் அறிவது. நமது தேகத்தில், சாப்பிடுவது எவ்விதம் ஜீரணமாகிறது, இருதயம் முதலிய பாகங்கள் எவ்விதம் வேலை செய்கிறது என்பது போன்ற விஷயங்களும், எவ்வித உணவு, பானம் நல்வாழ்வுக்கு ஒத்தது என்பதும் கைமுறை வைத்தியமும் இதில் அடங்கும்.

3. சாஸ்திரீயமான முறையிலும் தொழில் முறையிலும் விவசாயம் செய்வதும் குடும்பக்கணக்கும் நிலக்கணக்கும் அறிவது. எண் சுவடி, குழிக்கணக்கு, வட்டிக்கணக்கும் இதில் அடங்கும்.

4. தமிழ்மொழியில் பஞ்சதந்திரம், நளவெண்பா, அறப்பளீச்வர சதகம், குறள், நாலடியார், பாரதம், இராமாயணம் போன்ற நூல்களிலும் இலக்கணத்திலும் ஒருவாறு கற்று அறிவது.

5. பலநாடுகளைப்பற்றிய தேசசரித்திரமும் பூகோளமும் பொதுப்படையாகவும், இந்திய நாட்டையும் இங்கிலாந்து தேசத்தைப்பற்றியும் விசேஷமாக அறிவது.

6. பூத பௌதீக அறிவு, பஞ்சாங்கம், வானசாஸ்திரம் முதலியவற்றின் முக்கியமான அம்சங்களை அறிவது.

7. கிராம பரிபாலனம், பொதுநலத்தொண்டு ஆற்றுவது, கூட்டுறவு, பஞ்சாயத்து முதலியவற்றின் மூலதத்துவங்களை அறிவது.

இவைகளல்லாமல் பெற்றோர்களோ, மாணவர்களோ, எவைகளைப்பற்றி ஆழ்ந்து அறியவேண்டுமென்கிறார்களோ, அவைகளைப் பற்றி அதிகமாகச் சொல்லிக்கொடுக்கப்படும்.

8. பள்ளிக்கூடத்திற்கு தேவையான புத்தகங்களும் நோட்டுகளும் ரூபாய் 3-க்குள் வாங்கிக்கொள்ளலாம். பாடங்களெல்லாம்

பெரும்பாலும் படங்களைக்காட்டி எளிதில் அறியும்படி கற்றுக் கொடுக்கப்படும். அவ்விதம் வாயினால் சொல்லப்படும் விஷயங்களை மாணவர்கள் தங்கள் நோட்டுகளில் எழுதிக் கொள்வார்கள். குருகுல புத்தகசாலையில் பலதுறைகளைப்பற்றிய அச்சுப்படங்களும்கண்ணாடிப் படங்களும் அநேகம் இருக்கின்றன. இவைகளைக்கொண்டே எளிதில் அநேக விஷயங்கள் அறிந்துகொள்ளலாம்.

9. காலையிலும், மாலையிலும் $2\frac{1}{2}$ மணி நேரம் வகுப்புகள் நடைபெறும். சில சமயங்களில் இரவில் நிழல் படக்காட்சி நடைபெறும். வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு நாளாகும். உடற்பயிற்சி தினசரி பழகுவார்கள்.

10. கோடைப்பள்ளிக்கூடம், மழைக்காலப் பள்ளிக்கூடங்களின் முடிவில் மாணாக்கர்களை சென்னை முதலிய விசேஷ ஸ்தலங்களுக்கு அழைத்துக்கொண்டு போய் ஆங்காங்கு அறிவு வளர்ச்சிக்கு அவசியமானவைகளை எடுத்துக்காட்டப்படும். இப்பள்ளிக்கூடங்களை நடத்த சர்க்கார் அனுமதி அளிக்கும்படி எழுதியுள்ளோம், அவ்வனுமதி வந்தபிறகு ரயில்சார்ஜு பாதிசெலவேயாகும். இப்பிரயாணங்களில் இடவசதி, சாப்பாடு சௌகரியங்கள் சில நண்பர்களால் செய்யப்படக்கூடும். இப் பிரயாணங்களில் மொத்தம் என்ன செலவாகுமோ அதில் பங்கு வீதாசாரப்படி போடப்படும்.

11. கிராமங்களில் உள்ள பஞ்சாயத்துகளும், கூட்டுறவு சங்கங்களும், கிராம நாடுகளும், கிராம நாட்டாண்மைக்காரர்களும், பொதுப் பணச்செலவிலிருந்து தங்களுக்கு உபயோகமானவர்களை எளிதில் அனுப்பலாம். அவ்விதம் வரும் மாணவர்கள் கிராமத்தொண்டிற்கு பயன்படுவார்கள் என சொல்லத் தேவையில்லை. இப்பள்ளிக்கூடத்திற்கு தஞ்சை ஜில்லா மாத்திரமல்ல, தமிழ்நாடு முழுவதிலிருந்தும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளப்படும். தமிழ் நாட்டினதும், தமிழ் பாஷையினதும் சிறப்பைக் கைவிடாது தற்காலத்துக்கு ஏற்றவகையில் அறிவை ஊட்டி உணர்ச்சியை எழுப்புவது நமது நோக்கம்.

12. மற்ற விபரங்கள் அடியிற்கண்ட விலாசத்தில் கேட்டறிக. இப்பள்ளிக்கூடத்தில் சேர விரும்புவர்கள் மார்ச்சு மாதம் 15-ம் தேதிக்குள்ளாக முழு விலாசத்துடன் ரூபாய் 3. கொடுத்து பெயர் தாக்கல் செய்துகொள்ளவும். அப்படி தாக்கல் செய்து கொண்டவர்களுக்கு இப்பள்ளிக்கூடத்திற்கு முன்னதாக தயார் செய்துகொள்ள வேண்டிய விஷயங்கள் அறிவிக்கப்படும்.

சு. வி. கனகசபைப் பிள்ளை,

# ஆரம்பக் கல்வியில் சீர்திருத்தம்

எம். ஆர். வெங்கட கிருஷ்ணன் சேலம்.

“பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே” என்ற தமிழ் மறைக்கிணங்க கால சக்கிரங்களில் சுழன்றுவரும் ஒவ்வொன்றும் தத்தம் பழைய நிலைமையை விட்டு புதியன ஏற்பது இயற்கையே. உலகமெங்கும் இதுகாறும் எல்லா நிலைகளும் மாறுபாடடைந்து மேன்மையடைந்திருக்கின்றன. ஆரம்பக் கல்வி மட்டும் தன் பழைய நிலையிலிருந்து சீர்திருத்தத்தை நோக்கும் பாதை வரையில்கூட எட்டவில்லை. அந்தோ, பரிதாபம். இதன் குன்றிய ஊக்கத்திற்கு காரணம் யாதென பார்ப்போம். காரணம் மூன்று வகையாகும் 1. ஆரம்பாசிரியர். 2. பொதுஜனம் 3 அரசாங்கம். மேற்கூறிய மூவரும் எங்ஙனம் பொறுப்பாவார் என்பதை சிறிது சிந்திப்போம் 1 ஆசிரியர்:—தன் கையேதனக்கு உதவி என்பது ஒவ்வொரு துறையிலுள்ளோரும் நன்கு தெரிந்துகொண்ட விஷயம். ஆனால் ஆரம்பாசிரியர் பெரும்பாலோர் இதை மறந்து தற்காலத்துக்கு தக்கபடி கல்வியில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பதை பொதுஜனங்களுக்கும் அரசாங்கத்தாருக்கும் பத்திரிகை வாயிலாகவும் சங்க மூலமாகவும் வற்புறுத்தவில்லை. இவர்களின் இம்மேலான கடமையை அசிரத்தையால்புறக்கணித்ததுதங்குழுவினருக்கே ஓர் அபவாதத்தை தேடிக்கொண்டனர். இங்குமங்குமுள்ள சிலர் முயற்சித்தும் பொது ஜனங்களின் அறியாமையாலும் அரசாங்கத்தாரின் அசிரத்தையாலும் சாம்பலில் பெய்த நெய்யென வீணாகிவிட்டது. வேலையில்லா திண்டாட்டத்தை ஒரு சாதகமாகக்கொண்டு சில பட்டதாரிகள் ஆரம்பக் கல்வியில் சீர்திருத்த விஷயமாய் முயற்சிசெய்ய முற்பட்டு ஆரம்பாசிரியர்களை கேவலமாக பேசியும் எழுதியும் வர ஆரம்பித்திருக்கின்றனர். இவர்கள் கூற்று பல பிள்ளைகள் பெற்றவருக்கு தலைப்பிள்ளை பெற்றவள் மருத்துவம் சொல்வதுபோல் நகைப்பிற்கு இடமாகிறது. இவர்கள் பால் ஆரம்பாசிரியர்கள் வருத்த முறுவது பயனில்லை. இதன் காரணம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. (2) பொதுஜனம்:—இவர்கள் சீர்திருத்தத்தை கவனிக்காதது கல்விக் குறைவும் கல்வியில் ஊக்கமின்மையுமாம், தவிர அவர்களுக்கு சாத

னக்குறைவும் அநேகம். உலகப்போக்கை யறிய பத்திரிகையில்லை. வாசக சாலைகள் இல்லை (கிராமங்களில்). பிரசங்கிகள் இல்லை. தங்கள் வயிறு வளர்க்கும் நிலையிலேயே இருந்து விட்டனர். [3] அரசாங்கம்:—இவர்கள் ஆரம்பக்கல்விக்காகும் பெரும் சிலவைக் கருதியும், சீர்திருத்த விஷயமாக தங்களை தாக்கும் பத்திரிகைகளோ அன்றி பொதுஜனங்களோ இல்லாதது கருதியும் அசிரத்தையாயிருந்து விட்டனர். அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவது போல் உங்களிட மேலொப்படைத்து விட்டோம்என்றுசொல்ல லோகல் போர்டுகள் வசம் விட்டிருக்கின்றனர். சென்றதை கருதுவது நகைப்பிற்கிடமாகும். இனி எங்ஙனம் சீர்திருத்துவது என்பதை கவனிக்கு முன் தற்காலக் கல்வியில் காணப்படும் குறைகள் என்ன என்பதை பேசுவோம்.

ஆரம்பக் கல்வியில் உள்ள குறைகள்

குறைகள் மூவகை. 1 நிர்வாகிகள் 2 ஆசிரியர் 3. மேற்பார்வையாளர். 1-வது நிர்வாகிகள்—இவர்கள் நான்கு வகையினர் 1 லோகல் போர்டுகள் 2. மிஷனரிகள் 3 பஞ்சாயத்துகள் 4 பிரைவேட் மானேஜ்மெண்டுகள். லோகல் போர்டுவசம் இருந்த கல்வியானது "பிள்ளை பிழைக்கவில்லை" விளக்கெண்ணெய்க்கு கேடு என்பதுபோல் பணச்சிலவுதான் கண்டது (காரணம்) ஷை போர்டுகளின் மெம்பர்கள் அறியாமையிலிருந்ததும் யதேச்சாதிகாரமும் தான். 2-வது மிஷனரிகள்:—இவர்கள்வசம் இருக்கும் கல்வியானது சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்ததுபோல் சமூகத்தில் இருக்கிறது. அவர்கள் ஊக்கத்தோடு விருத்தி செய்கிறார்களெனினும் ஷை விருத்திமிகக் குறைவு. 3-வது பஞ்சாயத்துகள் வசம் இருக்கும் கல்வி லோகல் போர்டை போன்றதே. ஆனால் பணக்கஷ்டத்தினால் விருத்தியடையவில்லை, 4. மானேஜ்மெண்டுவசம் இருக்கும் கல்வியினால் தான் இப்பொழுது காணும் சிறிது அபிவிருத்தி. இந்த அபிவிருத்திகூட தற்காலம் கவர்ன்மெண்டார் அநுசரிக்கப்போகும் முறையினால்வீழ்ச்சி அடையும் என அபிப்பிராயம் பெருகிவருகிறது ஆசிரியர்களால் உள்ள குறைகளை கவனிப்போம். இவர்களுக்குள் அரசாங்கத்தாரும் நிர்வாகிகளும் பிரிவினை ஏற்படுத்தியிருப்பதாலும் கிராமங்களில் தங்கள் அறிவை விருத்தி செய்துகொள்ள சாதனங்கள் இல்லாததாலும் கல்வி போதிப்பதிலும் தங்கள் கடமைகளிலும் பெரும்பாலும் ஊக்கம்குன்றியிருக்கின்றனர். (3) மேற் பார்வையாளர். இவர்களிற்



சிலர் ஆசிரியர்களை அவமரியாதையாக நடத்துவதும் தங்கள் வார்த்தைக்கு நிர்வாகிகள் மதிப்பு கொடுக்காததும் குற்றம் காண வேண்டுமென்னும் நோக்கத்தோடு பாடசாலையில் நுழைவதாலும் காரணராயினர்.

சீர்திருத்தம்

ஆரம்பக் கல்வியை பரவச் செய்வதின் நோக்கம், எழுதப்படிக்கத் தெரிவது மாத்திரமன்று, பிரஜைகள் தங்கள் குடும்ப வாழ்க்கையை ஒழுங்காக நடத்திக்கொள்ளவும் தன்கடமை தன்னை சுற்றியுள்ளவர்களின் கடமை இன்னதென்பதை தெரிந்து கொள்வதோடும், தேசிய அரசியல் விஷயங்களில் தன் உரிமை எவ்வளவு என்பதையும் தெள்ளெனத் தெரிந்துகொள்ள வேண்டும். இந் நோக்கத்திற்கு தக்கபடி கீழ் கண்டவைகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

1. மாணாக்கரின் வயது 2. பயிலும் காலம் 3 பாடசாலைகள் 4. நிர்வாகம். 5 ஆசிரியர் 6 மேற்பார்வையாளர்.

1 மாணாக்கரின் வயது

பாடசாலைகளில் மாணாக்கர் வந்து சேர்வது தற்காலத்தில் 5வயதுக்கும் குறைவாயிருக்கிறது. இதானது கல்வி வளர்ச்சியுள்ள பெற்றோர்களால் வளர்க்கப்படும் குழந்தைகட்கு தகுதியானது. கல்வி வாசனை சூழ்ந்துள்ள பெரிய பட்டணங்களுக்கு தகுதியற்றது. இது விஷயத்தில் முனிசிபல் பட்டணங்களில் அட்மிஷன் 5 வயதாகவும் கிராமாந்திரங்களில் 7-வயதாகவும் நிர்ணயிக்க வேண்டும்.

2 பயிலும் காலம்

ஆரம்பக் கல்வி பயிற்சி 7-வருஷமாக இருக்கவேண்டும் அதாவது முனிசிபல் பட்டணங்களில் 5-12 வயதும் கிராமாந்திரங்களில் 7-14 வயதும் இந்த 7 வருஷ காலத்தில் முதல் 5 வருஷ காலம் 5 வகுப்புகளும் 6-வது 7-வது வருஷங்கள் இரண்டையும் எலிமென்டரி பைனல் என்றோ அல்லது ஐந்தாவது ஜூனியர் என்றோ பெயர் வைத்து ஆரம்பக் கல்வி பூர்த்தி சர்டிபிகட் அடையவேண்டும். இந்த 2 வருஷ காலத்தில் செகண்டரி பாடசாலைகளில் 4-வது பாரம் வரையில் கற்பிக்கப்படும் சகல பாட திட்டங்களும் இங்கிலீஷ் உபபாடமாகவும் குடிசைத் தொழில் கட்டாயபாடமாகவும் கற்பிக்கப்பட வேண்டும். இதற்கு தக்கபடி பாட பட்டிகள் தயாரிக்கப்படவேண்டும். இந்த சர்ட்டிபிகேட்டுகள் முன் கொடுத்துவந்த பிரைமெரி சர்டிபிகட்டுகளைப்போல் ஒரு தாலூகாவில் சென்டரில் பொதுப் பரீட்சை

ஏற்படுத்தி கொடுக்கலாம். இதற்கு மதிப்பு அரசாங்க வாக்காளராகவும் போதனா முறை வகுப்பில் பயிற்சிபெற சாதகமாகவும் இருக்க வேண்டும். இந்த 2 வருஷ பயிற்சியும் சில சென்டிரல் பாடசாலைகளில் தான் இருக்க வேண்டும். இவைகள் 3-மைல் சுற்றளவுக்குள் இருக்கலாம். இதன் தலைமை ஆசிரியர்கள் எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகட் உடையவராக இருக்கலாம். காலத்தை அதிகப்படுத்துவது என்பது அபிப்பிராயபேதத்தை உண்டாக்கலாம். தற்காலமிருக்கும் காலத்தையேகுறைக்க வேண்டுமென்பவர் பட்டதாரிகளே. இவர்கள் வேண்டுமென்பவர் பட்டதாரிகளே. இவர்கள் வேண்டுமானால்5வருஷ பயிற்சியோடு கலாசாலைக்கு செல்லட்டும். வறுமை பெற்றோர்களும் கலாசாலை விரும்பாதவர்களும் இம்முறையை அனுசரிக்கலாம். இம்முறையால் வீண் பணச் சிலவுக்கு இடமாயிருப்பதும் படிப்பில் வித்யாசமில்லாதிருப்பதுமாகிய ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளை எடுத்துவிடலாம்.

### 3 பாடசாலைகள்

இச்சென்டரல் பாடசாலைகளுக்கு குறைந்து 5 ஏக்கர விஸ்தீர்ணமுள்ள இடம் வேண்டும். ஒரு கிணறும் தோட்ட வேலைக்கு வேண்டிய இடமும் தேவை. ஒவ்வொரு வகுப்பிற்கும் தனியறை அவசியம். கைத்தொழிலுக்கு தனிக்கட்டிடமும் வாசகசாலை புத்தகாலயம் இவைகளுக்கு தனிக்கட்டிடமும் தேவை. சென்ட்ரல் பாடசாலைகள் அரசாங்கத்தாரின் நேர்ப்பார்வையிலும் பொறுப்பிலுமிருக்க வேண்டும். இத்திட்டத்தில் பணச் செலவு அதிகம் என்று தோன்றும். செலவை குறைக்க கீழ்காணும் முறைகளை அனுசரிக்கலாம். கட்டிடங்களில் சில மண் சுவர்களாலும் திறந்தவைகளாகவும் கூரையுடையவைகளாகவும் இருக்கலாம். முதல் 2-வகுப்புகளுக்கு மரப்பலகையாவது மற்ற சாதனங்களாவது தேவையில்லை. எல்லா வகுப்புகளுக்கும் சுவர் கரும்பலகை அமைக்கப்படவேண்டும். இவைகளிலேயே இராக்காலங்களில் வயது வந்தவர்களுக்கும் கல்வி கற்பிக்கலாம். பெண் பாடசாலைகளை ஆண்பாடசாலையோடு இணைத்துவிடலாம்.

### நிர்வாகம்

ஜில்லாவிலுள்ள எல்லாப் பாடசாலைகளும் ஒரு சபையாரின் நிர்வாகத்திலிருக்கவேண்டும். இச்சபைக்கு ஆசிரியர்களில் சிலரை அங்கத்தினர்களாக சேர்த்துகொள்ளவேண்டும். இச் சபையார் கல்வி



யதிகாரிகளின் சிபார்சின்மேல் பாடசாலையிலுள்ள குறைகளை நீக்க வேண்டும். கல்வி யபிவிருத்தி சம்மந்தமான சகல நிர்வாகங்களும் (பாட புத்தகங்கள் புத்தகாலயங்கள்) இவர்கள் வசம் இருக்கவேண்டும்.

### ஆசிரியர்

ஆசிரியர்கள் ஹையர், அண்டு செகண்டரி கிரேட் பயிலப்பட வேண்டும் ஒரு வருஷ காலம் போதுமானது. போதனாமுறை பாடசாலைகளை ஹைஸ்கூல்களோடு இணைத்து விடலாம். பெண்களுக்கு தனியாக இருக்கலாம். எல்லாப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஒரே விதமான சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். விடுமுறை காலங்களில் கலாசாலை ஆசிரியர்களைகொண்டும் நிபுணர்களைக்கொண்டும் பிரசங்கம் செய்விக்கலாம் (கைத்தொழில் விஞ்ஞானம், சாரண இயக்கம்)

### மேற்பார்வையாளர்

இவர்கள் போதனா முறையில் ஊக்கமுண்டாக்க உதவி செய்வதோடும் உபாத்திமை தொழிலில் 10 வருஷம் அனுபோக மடைந்தவர்களை இன்ஸ்பெக்டர்களாக நியமிக்க வேண்டும். இவர்கள் உபாத்திமை சங்கங்களையும் புத்தகாலயங்களையும் மேற்பார்வை செய்துவர வேண்டும்.

### பொதுக் குறிப்புகள்

தற்கால ஆரம்பக் கல்வியின் குறுகிய நோக்கத்தாலும், தொழிற் பயிற்சி இன்மையாலும், பெரிதும் அசிரத்தை காட்டப்படுகிறது. இக்குறைவை நீக்க மேற் சொன்ன வழிகளை அனுசரிப்பதோடும் ஆசிரியர்கள் தங்கள் கிராமங்களில் பெற்றோர் சங்கங்களை ஏற்படுத்தியும், வாசக சாலைகள் பொது வசூலில் ஏற்படுத்தியும், பிரசங்கிகளைகொண்டு பிரசங்கம் செய்வித்தும் பொது ஜனங்களுக்கு கல்வியில் ஊக்க முண்டாக்கவேண்டும். பாட புத்தகங்கள் தற்காலம் இருப்பது போல் சுமக்க முடியாதவாறு இல்லாமல் கீழ் வகுப்புகளில் பாட உபபாட புத்தகங்களைத் தவிர மற்ற பாடங்கள் எல்லாம் உபாத்தியாயர்கள் தங்கள் குறிப்புகளில் எழுதிபோதிக்க வேண்டும். எல்லாப் பாடங்களுக்கும் புத்தகம் வாங்கி கொடுப்பதினால் மாணாக்கர்கள் புத்தகத்தில் வெறுப்படைவதோடும் ஆசிரியர்கள் தங்கள் தொழில் முறையில் ஊக்கமிழந்து வருகிறார்கள். இது வறுமை பெற்றோர்களுக்கும் சிரமமாயிருக்கிறது. ஒரு ஆசிரியர் எழுதின புத்தகத்தை 5 வருஷ காலமாவது உபயோகித்துவரவேண்டும். இப்பொழுது

# கோபத்தால் விளையும் கேடு

எம். வி. நரசிம்ம ராவ், பி. ஏ.

பூலோகம் உற்பத்தியானது முதல், மானிட கோஷ்டிக்கும், பிராணிவர்க்கங்களுக்கும் கோபத்தினால் விளையும் கெடுதல்கள் சொல்லி முடியாது. கோபம் உண்டாகிறபோது, மனதும் கலங்கிப் போகிறது; தேகமும் நிலைகுலைந்து போகிறது; ஆனால், கோபம் குடி கொண்டுள்ள ஒரு மனிதனுக்கோ ஸ்திரீக்கோ இது வெளிப்படையாகத் தெரியாது. இருந்தபோதிலும், அவன் தேகம் நிலைதவறிப் போகும் என்பது நிச்சயம்.

மனிதனுக்கோ மற்றஜந்துக்களுக்கோ ஒரு கெடுதல் செய்து அதனால் உண்டாவது கோபம். அதனால் நரம்புகளுக்கு அதிக வேலை ஏற்படும். மனிதன், மிருகம், பக்ஷி, பாம்பு முதலிய யாவற்றிற்குமே கோபமூட்டினால் கோபம் உண்டாகும். அந்தக் கோபம் ஆபத்திற் கிடமாகும். ஒரு யானை கோபித்துக் கொண்டால், பாகனையே கொன்றுவிடும், கோபமுண்ட கோழிகள் சண்டை ஓயவே ஓயாது. ஒரு நல்ல பாம்பானது கோபித்துச் சீறிப் பாம்பாட்டியையே கடிக்கும், காட்டு மிராண்டிகள் கோபத்தினால் ஒருவருக்கொருவர் மரணமடையும்படியான சண்டைபோடுவார்கள். ஈக்கும் கோபம் உண்டு.

மானிடர்க்கோ, நல்ல குணம் கெட்ட குணம் இரண்டுண்டு. அவன் மனதிலுள்ள எண்ணங்கள் எவை அதிகமோ, அதற்குத் தக்கபடி அவனுடைய குணம் மாறும். நல்ல எண்ணங்கள் இருந்தால் கோபம் உண்டாகும். கோபம் மிகக் கெடுதலானது. கோபம், பாதி பைத்தியம். கோபிஷ்டி பைத்தியக்காரனைப்போலவே பகுத்தறிவின்றி அக்கிரமத்தைச் செய்வான். கோபிஷ்டிக்கு மனோவேஷ்டை அதிகமாய் உண்டாவதால் தன்னைத்தானே தண்டித்துக் கொள்கிறான். கோபத்தினால் சக்தி குறைந்து இரத்தம் விஷப்பட்டுப்போகிறது. தாய் கோபமாயிருக்கும்போது குழந்தைக்குப் பால்கொடுத்தால் அதற்கு வலிகள் உண்டாகும். ஒரு கோபமுள்ள ஜந்து கடித்தால் அந்த ரணம் ஆறுவது கடினம். கிழவனுக்குக் கோபம் வந்தால் பாரிசவாயு உண்டாகும். அல்லது இரத்த அமுக்கு அதிகமாகி இரத்தக் குழாய் உடைந்து அதனால் மரணமும் நேரிடும். ஒரு ஏக குடும்பத்

---

ஆகும் செலவைக் கொண்டே இந்த முறையால் பரந்த கல்வியை கிராமங்களில் பரவச் செய்யலாம். இதில் தோன்றும் சாதக பாதகங்களை கல்வி யறிவாளிகள் "ஆரம்பக் கல்வி" வாயிலாக வெளியிடுமாறு கோருகிறேன்.



தில் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம் வந்தால், அந்தக் குடும்பமே கலைந்து போய்விடும்.

மனது நிம்மதியாயிருந்தால், ஜீரண சக்தி உண்டாகும். ஆகாரம் செவ்வையாய் உறிஞ்சப்படும். ஒருவன் சாப்பிடும்போது கோபமாயிருந்தால் அதனால் அஜீரணம் உண்டாகும் ஆனதுபற்றி, கோபமாயிருக்கும்போது, ஒருவன் சாப்பிடாமல் இருப்பதுமேல். கோபத்தினால் தலைவலி, தூக்கமின்மை, அஜீரணம் முதலியன உண்டாகும். மனதை அடக்காதவன் காமக்ரோதாதிகளுக்கு அடிமையாகி, அதனால் அவன் தேகமும் மனதும் ஆன்மாவும் அழிந்து அற்பாயுள் உள்ளவனாவான்.

* * *

(8) ஆகாரம்.—ஆகாரம் சரிசமானமான எடையில் இருக்க வேண்டும். அதாவது, அதிலுள்ள ப்ரோடீன், கொழுப்பு, கார்போஹைட்ரேட்டுகள், உலோக உப்புக்கள், ஜீவஸத்துப் பொருள்கள் இவையாவும் சரியான விகிதாசாரப்படி இருக்க வேண்டும். குழந்தைக்கு ப்ரோடீன் அதிகம் வேண்டும். ஏனெனில், அது வளரவேண்டியிருக்கிறது. கார்போஹைட்ரேட்டும் அதிகம் வேண்டும். வயதானவர்களுக்கு ப்ரோடீன் கார்போஹைட்ரேட்டு கம்மியாகவும், கொழுப்பு அதிகமாகவும் இருக்கவேண்டும். ஆகாரம் அவரவர் செய்யும் தொழிலுக்குத் தக்கபடி வித்தியாசப்படும். சக்தி அதிகம் வேண்டியிருந்தால், கொழுப்பு பதார்த்தம் அதிகம் வேண்டும். ஸ்திரீகளுக்கு ஆகாரம் புருஷர்களைக்காட்டிலும் ஆறில் ஒன்று கம்மியாயிருக்கவேண்டும். ஏனெனில், அவர்களுக்கு வேலை கம்மி. மலச்சிக்கல் உள்ளவர்கள் ஸெல்லுலோஸ் அதிகமாயுள்ள ஆகாரம் சாப்பிட வேண்டும். சமைத்த காய் கறிகளும் பழங்களும் அவர்களுடைய ஆகாரத்தில் கலக்கவேண்டும். முழுக்கோதுமை ரொட்டி உபயோகமானது. சாதாரணமாய் 4 வேளை ஆகாரம் சாப்பிடலாம். ஆனால், மூன்று வேளை போதுமானது. ஆகாரத்தைச் செவ்வையாய் மென்று சாப்பிடவேண்டும். ஆகாரம் சாப்பிட்டானவுடன் சற்று நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும். பாலுக்கும், பச்சை மரக்கறிகளுக்கும் "பாதுகாக்கும் ஆகாரங்கள்" என்று பெயர். ஏனெனில், பசியைத் தீர்த்து சக்தியைக் கொடுக்கும்படியான எந்த ஆகாரத்துடன் சேர்த்தாலும், போஷணைக் குறைவினால் ஏற்படும் வியாதிகளை இது தவிர்க்கிறது.

* * *

(9) தூக்கம்:—தூக்கம் என்பது தேகத்தைப் பழுது பார்க்கும் முறை. ஆனதுபற்றி, இது அவசியம். படுக்கையறை காற்றோட்ட

முள்ளதா யிருக்கவேண்டும். இருட்டாயும், சந்தடியில்லாமலும் இருக்கவேண்டும். சாதாரணமாய் 'புருஷர் களுக்கு 6 மணி, ஸ்திரீ களுக்கு 7 மணி, முட்டாள்களுக்கு 8 மணி தூக்கம் வேண்டும்' என்று ஒரு பழமொழி உண்டு. இது பிசகு. ஸர் வில்லியம் ஜோன்ஸ் சொல்லுகிறபடி "ஏழுமணி உழைக்கவும், ஏழுமணி தூங்கவும், 10 மணி உலகத்திற்கும்; எல்லாம் பகவானுக்கும் அர்ப்பணம் செய்ய வேண்டியது". இது நியாயம். "சீக்கிரம் படுத்து சீக்கிரம் எழுந்திருந்தால் அதனால் சம்பத்து, ஆரோக்கியம், ஞானம் இவை உண்டாகும்" என்னும் வசனத்தைக் கைப்பற்றவேண்டும். ஆனால், நிர்ணயமான விதி ஒன்றும் கிடையாது. கிழவர்கள் வயதானவர்களில் பாதிநேரமும், மத்திய வயதுள்ளவர், குழந்தைகளில் பாதி நேரமும் தூங்க வேண்டியது.

## அதிகாரிகளும் கல்வி விருத்தியும்

நம் சென்னை நகரில் வெளியாகி நாடெங்கனும் பிரபலமடைந்துள்ள "ஹிந்து" "சுதேசமித்திரன்" பத்திரிகைகளின் பிரபல ஆசிரியராயிருந்து 4-2-34 ல் காலஞ் சென்ற உயர் திருவாளர் ஏ. ரெங்கசாமி ஐயங்கார் அவர்களிடம் வேலைசெய்வதும் சுலபம். அவரைத் திருப்தி செய்வதும் சுலபம். அவருடைய நேர்மையும் நியாயமும் மிகவும் தாராளமும் தயாளமும் பொருந்தியவை. வேலைக்காரர்கள் தவறிவிட்டதற்குச் சமாதானங்கள் தேடுவதில் காலத்தைக் கழிப்பார். சாதாரணமாக எந்த முதலாளியும் அவ்விதம் வேலையாட்களின் தவறுகளைப் பொறுத்திருக்க மாட்டார்கள். ஆகையால், அவர் எஜமானனாக இருக்கையில் வேலை செய்பவர்களுக்குச் சேவையின் ஊனம் தோன்றாமலிருந்தது என்பதில் ஆச்சரியமில்லை. இக்காரணம் பற்றி அவர்கீழ் வேலை செய்தவர்கள் தங்கள் வேலைகளில் விசேஷ ஊக்கத்துடன் முனைந்தார்கள். அதனால் பத்திரிகையின் வேலைகள் திருத்தியமைக்கப்பட்ட பிறகு அவருடைய பொறுப்பு வெகுவாகக் குறைந்தது."

இவ்விதத் தன்மையை நம் ஆரம்பக் கல்வி அதிகாரிகள் கைக்கொள்வார்களானால் அன்றே கல்வியதிகாரிகளின் பொறுப்பும் குறைந்து ஆரம்பாசிரியர்கள் தங்கள் கடமையை ஊக்கத்துடன் செய்வார்கள் என்பதிலும், ஆரம்பக் கல்வி இவ்வாரம்ப ஆசிரியர்களின் ஊக்கத்துக்குத் தக்கவாறு 'ஹிந்து' 'சுதேசமித்திரன்' பத்திரிகைகளைப் போல் நல்ல அபிவிருத்தியும் அடையுமென்பதிலும் சந்தேகமிரா தென்பது நிச்சயமெனலாம்.

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள், அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர்:— பி. வீரராகவன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—திருவள்ளுவர்.

மலர் 1. } ஸ்ரீமுக௵ பங்குனி 1934௵ மார்ச்சுமீ { இதழ், 10.

## கடவுள் வணக்கம்

தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையிலே நடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற்றிலே
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே யடியிலேமேற்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு
கெட்டிலே யலையாமல் அறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலைபெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
ஞேயத்தி லேயுனிருநாள்
மட்டிலே மனதுசெல நினதருளும் அருள்வையோ
வளமருவு தேவையரசே
வரராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெண்ணுமையே.

# நமது பத்திரிகை.

ஆரம்பக்கல்வியாகிய நமது குழந்தைக்கு ஸ்ரீமுக ஆண்டு பங்குனியோடு முதல் ஆண்டு பூர்த்தியாகின்றது. இதுவரையில் நமது குழந்தைக்கு பல சங்கங்களிலிருந்தும் ஆரம்பாசிரியர்களிடத்திலிருந்தும் வந்துள்ள ஆசீர்வாதங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதுடன், அன்னார்களுக்கு எம்முடைய மனமார்ந்த வந்தனங்களை இப்பத்திரிகையின் மூலம் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். முதல் முதலில் இப்பத்திரிகையை ஆரம்பித்தபொழுது எமது ஆப்த நண்பர்களான ஆரம்பாசிரியர்களில்சிலர் இப்பத்திரிகை இரண்டொரு மலர் தான் வெளிவரும், பிறகு நின்றுவிடக்கூடும் நாவல்கள், விகடம், லாட்டரி பிரைஸ்கள், நிரம்பிக்கிடக்கும் பத்திரிகைகளை ஆதரிப்பதை விட்டு, கல்விச் சம்மந்தமான விஷயங்களும், சங்கக் குறிப்புகளும் நிரம்பிக்கிடக்கும் இப்பத்திரிகையை ஆரம்பாசிரியர்கள் கண்ணெடுத்தும் பாரார்கள் என்றனர் சிலர் இவை ஓரளவு உண்மையேயாயினும் பல ஆண்டுகளாக அல்லும் பகலும் ஆரம்பக் கல்விக் கடலில் மூழ்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும் எமது மனமானது 50000 ஆரம்பாசிரியர்கள் அடங்கிய நமது தமிழ் நாட்டில் நம்மைப்போல் கல்வி சம்மந்தப்பட்ட மக்கள் பலர் பல விஷயங்கள் தெரியாமலும் ஒருவருக்கொருவர் சம்மந்தமில்லாமலும் நமது குறைகளை மேலதிகாரிகளுக்கு தெரிவித்துக் நிவர்த்தித்துக் கொள்ள முறை தெரியாமலும் தவித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் குறைந்தது 100-க்கு 2-பேராவது நம்முடன் கூடுவது நிச்சயம். அதற்கு மூலாதாரம் ஒரு பத்திரிகை ஒன்று இருந்தேதீரவேண்டுமென அடிக்கடி வற்புறுத்திவந்தது. அதற்கு ஒருவாறு இணங்கினவனாய் முதல் முதலில் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெளியிடுவதென 1933௵ ஏப்ரல் மாதம் ஆரம்பித்தோம். அநேக எழுத்துப் பிழைகளையும், அச்சுப்பிழைகளையும் கவனியாது "எப்பொருளைத் தன்மைத் தாயினுமப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றதிருவள்ளுவர் திருவாக்கின்படி பல கல்வியதிகாரிகளும், ஆரம்பாசிரியர்களும் ஆதரித்து மாதா மாதம் வெளியிட தூண்டுதலுடன்



முன்வந்ததைப்பற்றி எமக்கு அதிக ஆச்சரியத்தை விளைவித்தது. ஆதலின் முதலில் இரண்டு இதழ்களை 2 மாதங்களுக்கு ஒரு முறையாக வெளியிட்டோம். பிறகு மாதா மாதம் வெளியிட்டுக்கொண்டிருக்கின்றோம். சில சமயங்களில் அச்சுக்கூட தாமதத்தினாலும், சில காலங்களில் போதுமான சந்தாதாரர்கள் சேராமையாலும் எமது பத்திரிகை சற்று தாமதித்து வந்ததுண்டு.

இத்தகைய குறைபாடுகளை பொருட்படுத்தாது எம்மை அடிக்கடி உத்சாகத்துடன் தூண்டி எமது பத்திரிகையை ஆதரித்ததுமன்றி, பல சந்தாதாரர்களை சேர்த்தனுப்பியும், பலகட்டுரைகளை எழுதியும் நமது பத்திரிகை ஒருவருடம் நடத்த உதவியாயிருந்துவரும் எனது ஆரம்பாசிரிய சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் ஆரம்பாசிரிய சங்கக் காரியதரிசிகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தை யளிப்பதல்லாமல் ஆரம்பக் கல்வி உலகம் அன்னார்களை என்றும் போற்றக் கடமைப்பட்டிருக்கின்றதென்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இனி 2-வது வருடம் பவ௵ சித்திரை 1934௵ ஏப்ரல் முதல் நமது பத்திரிகைக்கு ஆரம்பமாகப் போகின்றது. இவ்வருடம் சிலபக்கங்கள் ஆங்கிலத்திலும், இன்னும் கல்வி சம்மந்தப்பட்ட பல படங்களைச் சேர்த்தும், பல பக்கங்களைப் பெருக்கியும், உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு காலா காலங்களில் வெளியிட ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றோம். பழைய சந்தாதாரர்கள் முன்போலவே மணியார்டர் மூலம் ரூபாய் 1—0—0 சந்தா நெம்பருடன் சித்திரை முடிவதற்குள் அனுப்பிவைத்து நமது பத்திரிகையை ஆதரித்து பல விஷயங்களை தெரிந்து பெரும் பயனடைவதுடன் ஒவ்வொரு ஆசிரியரும் கூடுமானவரை 2புது சந்தாதாரர்களையாவது அவசியம் சேர்த்து பத்திரிகை மேன்மேலும் ஓங்கி நடைபெற முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், நமது சந்தாதாரர்களுக்கும், ஏனைய ஆரம்பக் கல்வியில் ஈடுபட்டு உழைத்துவரும் மக்களனைவருக்கும் யாதொரு தீங்கும் நேரிடாமல் பவ புது வருஷத்தில் அருள்புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பொங்கும் மங்களம் எங்கும் ஓங்குக.

ஓம். தத். சத்.

# இந்தியாவின் ஜாதி முறை

ஜாதிமுறை என்பது இந்தியாவிலேதான் விநோதமாகக் காணப்படுகின்றது. இம்முறை இப்பொழுது தோன்றியதல்ல. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஜாதிமுறை இந்தியாவின் கண் தோன்றியதாகத் தோற்றுகிறது. ஜாதியின் உற்பத்தியைப் பலர் பல விதங்களாகக் கூறுவர். ஜாதியையும் வர்ணத்தையும் ஒன்றாகப்பாவித்து இவ்விரண்டும் ஒன்றெனக் கூறி வர்ணத்தாலேயே ஜாதி உண்டானதெனக் கூறுவர் சிலர். வெள்ளை நிறத்தவர் பிராமணர்களென்றும், சிவப்பு நிறத்தவர் க்ஷத்திரியரென்றும் மஞ்சள் நிறத்தவர் வைசியரென்றும், கருப்பு நிறத்தவர் சூத்திரர் என்றும் கூறுவர். பின்னும் ஒரு சாரார் கடவுளின் திருமேனியில் முறையே வாய், புஜம், தொடை, -பாதம், இவைகளிற்றோன்றிய நால்வர் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்றும், மற்றும் ஒரு சாரார் அக்கினியில் நால்வர் தோன்றினர் அவரே நான்கு ஜாதியாகப் பிரிந்தனரென்றும், பின்னும் சிலர் தேக ஆரோக்கியத்திற்காக சுத்தத்தின் நிமித்தம் பல ஜாதிகளாகப் பிரிக்கப் பட்டிரிக்கின்றனரென்றும், இன்னும் சிலர் சில குடும்பத்தார் தாம் கற்ற கைத்தொழில்களைப் பிறருக்குக் காட்டாவண்ணம் அத்தொழிலையே விருத்தி செய்யக் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து தனித்தனி ஜாதியாராகச் சேர்ந்தாரென்றும் பகராகிற்பர். இவை பல கேள்விகளுக்கும் தடங்கல்களுக்கும் இடமாக நிற்கின்றன.

மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்த முதல் ஆரியர் கூட்டத்தார் வடஇந்தியாவில் திராவிடர்களை முறி அடித்துச் சந்தோஷமாகக் காலங்கழித்து வந்தனர். இவர்கள் பெண்டுபிள்ளைகளுடன் வந்து சேர்ந்தமையால் தங்கள் பட்டிலேயே வேலைகளைப் பார்த்து வந்தனர். இரண்டாவது முறைவந்த ஆரியர்கள் ஆடவர்களாக வந்தனிமித்தம் மற்றப் பூர்வீக இந்தியர்களுடன் கலக்க நேரிட இதைக் கண்ட ஆரியர்கள் அவைகள் நான்கு ஜாதிகளாகப் பிரித்துக் கொண்டார்கள் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர வகுப்புகளாகும். பிராமணர்களின் தொழிலாவது மற்றைய ஜாதியாருக்கு நன்மை பயக்க கடவுளைப் பிரார்த்திப்பதும், வேதம் ஓதுதலும், பணக்காரராக விருந்தால் பிறருக்குப் பொருள் கொடுத்து உதவுவதும், எளியவர்களாயிருந்தால் ஐயமெடுத்துண்டு தம்மைக் காத்துக்கொள்வதுமே, க்ஷத்திரியகளின் தொழிலாவது தம்முடைய புஜபல பராக்கிறமத்தால் விரோதிகளை வென்று தமது பிரஜைகளைப் பாதுகாப்பது. வைசியர்கள் வியாபாரம் செய்து பொருளீட்டவும் உழவுத்தொழில் புரிந்து நாட்டை வளர்க்கவும் வேண்டும். சூத்திரர்கள் மேற்கூறிய ஜாதியார்களுக்கு தொண்டு புரிந்து அடிமை யாவதே. மனுதர்ம சாஸ்திரத்தில் அந்தணர்கள் கடவுளின் அவதாரமென்றும் அவர்களுக்குச் சர்வ சுதந்திரமும் அளிக்க வேண்டுமென்றும், கூறி யிருக்கிறது. ஆகவே பிராமணர்கள் உயர்ந்த ஜாதி ஆகின்றனர். அவர்கள் தங்களுடைய படிப்பின் திறமையாலும் மதியூகத்தாலும் ஏனைய ஜாதியாரை எளிதில் வென்று அவர்களை அடிமையாகப் பாவித்து நடத்தி வந்தனர். சாஸ்திரங்களைப் பெரிதும் தமது நன்மைக்காகவே எழுதி வைத்துக் கொண்டனர்.



ஜாதி முறையின் கட்டுப்பாட்டால் ஒரு ஜாதியார் மற்ற ஜாதியாரோடு உண்பதும் கிடையாது. கலியாணம் செய்து கொள்வதும் கிடையாது. சில ஜாதியார் முன்னேற்றமடைய அவர்களின் உணவே முக்கிய காரணமாகும். ஆனால் கலியாண விஷயத்தில் சில விரோதங்களுண்டு. ஒரு பிராமணன் தன் ஜாதிப் பெண் ஒருத்தியையும் மற்றைய மூன்று ஜாதிப்பெண்கள் மூவரையும் முறையே வதுவை செய்து கொள்ளச் சாஸ்திரம் உண்டு. அந்தணனுக்கு உள்ள சொத்தைப் பத்துப் பாகமாகப் பிரித்து அந்தண ஸ்திரீக்குப் பிறந்த மக்களுக்கு நான்கு பாகமும், க்ஷத்திரிய ஸ்திரீ மூலமாகப் பிறந்த குழந்தைக்கு மூன்று பாகமும், வைசிய ஸ்திரீ மூலமாகப்பிறந்த மைந்தர்களுக்கு இரண்டு பாகமும், சூத்திரப் பெண் மூலமாகப் பிறந்த புதல்வர்களுக்கு ஒரு பங்குமாகப் பங்கிடுவான். இவ்விதமாக உயர்ந்தஜாதி ஆண்கள் தாழ்ந்த ஜாதிப் பெண்களை மணக்க முறை கொண்டு தாயின் ஜாதியே பிள்ளைகளுமாவர். மேல் ஜாதி தகப்பனுக்குப் பிறந்தமையால் தங்களைச் சற்று மேலாகவே கருதுவார். இம்முறைக்கு மாறாக உயர்ந்த ஜாதி ஸ்திரீகள் தாழ்ந்தஜாதி ஆடவர்களை மணந்து அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் கேவலமாகக் கருதப்பட்டுத் தனிஜாதி யாக்கப் பட்டனர். இவ்விதம் சில ஜாதியார் புதிதாக ஏற்பட்டனர். பின்பு நம் இந்தியாவானது ஆதிகாலத்தில் அதிகமாக அன்னியர்களால் அடிக்கடி ஆரவாரம்கொண்டு தாக்கப்பட்டது. அன்னியர்கள் ஏராளமாகக்

குடியேறினர். அன்னிய ஜாதியார்கள் இந்தியர்களுடன் கலந்து இருந்ததின் பயனாக எண்ணிறந்த ஜாதிகள் ஏற்பட்டன. தற்காலத்தில் இப்பரத கண்டத்தில் சற்றேறக்குறைய 2378-முக்கிய ஜாதியார்களிருக்கின்றனர். இவர்களுள் பல உட்பிரிவும் உண்டு.

கி. மு. ஆறுவது நூற்றுண்டு தேசசரிதையில் ஜாதிமத பேதத்திற்காக முக்கியமாகக் கூறப்படும். அக்காலத்தில் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லப்படுபவர் தங்களுடைய கல்வியின் மேம்பாட்டால் மற்றைய ஜாதியாரை ஹிம்சித்தது கொஞ்சமல்ல. உலகத்தில் மனிதர் பல ஜென்மங்களெடுத்து இறுதியில் பெற முடியாத பிராமணப்பேற்றைப்பெற்று மோக்ஷம் அடைய முடியுமே ஒழிய மறறவர்களால் முடியாது என்று கூறினர். இக்கொடிய வசனத்தை மாற்றச் சில மதாச்சாரியர்கள் தோன்றினர். அவர்களுள் புத்தரும் மகாவீரரும் முக்கியமானவர். ஆகவே சுருங்கச் சொல்லின் இந்து மதத்தின் கொள்கை என்னவெனின் ஜாதிபேதமே யொழிய வேறில்லை.

ஆதிகாலத்தில் இச்சாதி பேதத்தால் சில நன்மைகளும் இருந்தன. அவை ஒவ்வொரு ஜாதியாரும் தத்தம் தொழிலைச் செவ்வனே ஆற்றிவந்தமையும், பெரியோர்களுக்கு அடங்கி நடக்கும் தன்மையும், மரியாதையும், செட்டுத்தன்மையும், சுயநலம் கருதாமையுமாகும்.

ஆனால் இச்சாதிபேதத்தால் தாழ்த்தப்பட்ட ஜாதியாரை உயர்ந்த ஜாதியார் என்போர் கேவலமாக நடத்தினர். ஒரு ஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும் இயற்கையிலேயே ஒருவகையான கிளர்ச்சி உண்டாகி வேற்றுமை உண்டாகிறது. அதாவது எவ்வளவு அத்தியந்த நண்பர்களாக இருந்த காலத்தும் ஜாதி என்கிற இக் கொடிய கோடரி நட்பாகிய ஸ்தம்பத்தை இருபிளவாகப் பிளந்துவிடுகிறது. ஒரு ஜாதியாரில் ஒருவன் உயர்ந்த உத்தியோகத்திலிருந்தால் அவன் தன்னுடைய ஜாதியாரையே பெரிதாகப்பாராட்டி அவர்களுக்கே உத்தியோகமும் கொடுப்பான். என் செய்வது? மற்ற ஜாதியார் கற்றதனாலாகிய பயன் ஏனைய ஜாதியாருக்கு அறவே நீங்கிவிடுகின்றது. ஒரு ஜாதியார் முன்னுக்கு வருவாராயின் அவர்களை மற்றையோரைத் தலையெடுக்கா வண்ணம் செய்கின்றனர். சில ஜாதியாருக்குள்ள வேலைகளை அன்னிய ஜாதியார் கற்று மேம்படப் பிந்துகின்றனர். எனவே ஜாதிபேதத்தால் உண்டாகிய தீமைகளுக்கு அளவே இல்லை.

தற்காலத்தில் இந்தியாவானது ஜாதிபேதத்தால் மிகவும் கெட்டுப்போயிருக்கிறது. ஜாதி துவேஷத்தால் இந்தியா முன்வருவதற்கு வழியில்லை. சில ஜாதியார் வசிக்கும் தெருக்களில் கூட சிலர் செல்லலாகாது. கேவலம் பன்றிகளும்கூட உருண்டு செல்லும் அத் தெருக்களுக்குள் சமத்துவமுள்ள மானிட ஜென்மம் எடுத்தவர்கள் செல்லலாகாதென்றால் இம்மனிதர் பன்றிகளைக் காட்டிலும் கேவலமாகக் கருதப்படுகின்றார் என்பது அங்கை நெல்லிக்கனி. மனிதன் ஒவ்வொருவனும் கடவுளால் சமமாகச் சிருஷ்டிக்கப்பட்டானென்பது திண்ணம்.



தாழ்த்தப்பட்ட ஜாதியரைக் கடவுளின் சம சிருஷ்டி யென்று கருதாது துன்புறுத்துகின்ற மநியிலிகளைக் கடவுளும் வெறுப்பார் என்பதை மறந்தனர் போலும். என்னே! அவர்களது கொடுமை! தாழ்த்தப்பட்ட ஜாதியாரைக் கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாதாம்.

சிலர் 'ஜாதிவித்தியாசம் இருக்கக்கூடாது' என்று அதிகமாகப் பிரசங்கம் செய்து தம்மையே முன்னுக்குக் கொண்டுவரக் கருதுகின்றனர். இன்னும் சிலர் சமத்துவம் பாராட்டவேண்டுமென்று பிறருக்கு எடுத்துக் கூறி அதைத் தாம் கவனியாது வருகின்றனர். இவர்களது செய்கை "கையிலிருப்பது ஜெபமாலை கன்னம் வைப்பது பெருமாள் கோவில்" என்பதைப்போலிருக்கிறது.

நம் இந்தியா முன்னுக்குவர வேண்டுமென்றால் ஜாதித்துவேஷம் அறவே நீக்கப்பட வேண்டும். சகல ஜாதியாரும் சகோதரர்கள் என்ற நிலைமை ஏற்படவேண்டும்.

ஆகவே ஜாதி வித்தியாச மிருக்கக்கூடாது என்பது நன்கு தோற்றுகிறது.

கிறிஸ்தவர்களை எடுத்துக் கொள்வோமானால் அவர்களுக்கு மதத்தைத் தவிர ஜாதி பேதம் கிடையாது. இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களோ இச் சாதிப் பாராட்டில் சற்று ஈடுபட்டுள்ளார். இவர்களும் ஜாதிபேதம் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் கொஞ்சம் வித்தியாசம் பாராட்டுகின்றார்கள். இறைவனைத் தொழுகின்ற காலத்தில் அவர்களுக்கு வித்தியாசம் கிடையாது.

முஸ்லிம்களைச் சற்று நோக்குவோமாயின் அவர்களின் ஒற்றுமை மெச்சத்தக்கதே. அவர்களுள்ளும் சற்றுப் பேதமிருந்தாலும் "முஸ்லிம்" என்ற மாத்திரத்தில் ஒன்று சேர்ந்து விடுகின்றனர். இம்மதங்கள் பரவிவருவதற்கு இவர்களுள் அதிக வித்தியாசம் இன்மையும் இவர்களின் ஒற்றுமையும் காரணமாகும். புத்தமதம் பரவுவதற்கு ஜாதிபேதமின்மையே முதற்காரணமாகும்.

ஆனால் இந்துக்களை நோக்குமிடத்து இவர்களுள் ஜாதி பேதம் அதிகமாகிக் கடவுளையும் கண்டு தொழுவதற்குச் சிலர்க்கு முடியாது போகின்றது. சிலர் தெருக்களுள்ளும் செல்லமுடியாது தீண்டப் படாதவராகின்றனர். அதே மனிதன் முகம்மதியனானாகில் அவனை விட்டிற்குள் அழைத்துவைத்துக் கைகுலுக்கிப் பேசி அனுப்புகின்ற னர் உயர்ந்த ஜாதி எனப்படுவார். என்னே இந்து மதத்தின் ஜாதி பேதம்! இந்துமதம் ஓங்கி வளராமலிருப்பதற்கு இந்துக்களின் ஜாதி பேதமே காரணமாகும்.

ஆகவே இந்தியராகிய நாம் ஜாதிபேதம் என்கிற கொடிய விஷத் தைக் கடிந்து நீக்கி ஜாதிபேதமில்லாமல் சகோதரத்துவமாக இருந்து எச்சாதியாரும் எம்மதத்தினரும் கடவுளின் மக்களெனக் கருதி வித்தி யாசமில்லாமல் சந்தோஷமாக வாழ்ந்து இந்தியாவின் கேவல நிலைமை யை மாற்றிப் பிறநாடுகளினும் சிறந்த நாடாகச் செய்வோமாக. ஜாதி பேதம் இருக்கும்வரை இந்தியா முன்னுக்கு வராதென்பது திண் ணம்! திண்ணம்!! ஆகவே ஜாதிபேதத்தை நீக்கி யாவரும் சகோ தரர்கள் போன்று ஒற்றுமையாக வாழ்வோமாக.

---

## ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு

### (செங்கல்பட்டு ஜில்லா)

இம்மகாநாடு 1934௵ மேமீ 5-ம் தேதி சனிக்கிழமை தாசர் உயர்தர கல்விச்சாலை, தாசர்புரம், தின்னனூரில், திருவாளர் அப்பா துரை பிள்ளையவர்களின் தலைமையின் கீழ் நடத்தப்படும். அன்று காலை 11-மணிக்கு உயர்தரக் கல்விச்சாலை மானேஜர்கள் ஜில்லாக் கூட்டமொன்று நடைபெறும்.

(எச். தேவதாஸ் கன்வீனர் பி. ஏ., எல். டி.)

## லோயர் கிரேட் உபாத்தியாயர்கள் மகாநாடு

மேமீ 18ம் தேதி அரியலூரில், "லோயர் கிரேட்" சர்ட்டிபி கேட்டை ஹையர் கிரேட் சர்ட்டிபிகேட்டாக போதனாமுறை பரீட் சையில் தேராமலே, 8-வது வகுப்பு சர்ட்டிபிகேட்டை அடைந்த மாத்திரத்தில், முன்போல் ஹையர்கிரேட் சர்ட்டிபிகேட்டுகளாக அர சாங்கத்தார் மாற்றிக்கொடுக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் இம்மகாநாடு நடைபெருமாம்.

# சைவ சமயம்

திரு, எம். பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல், சென்னை.

சமயம் என்றால் என்ன? :—ஒவ்வொரு உயிரும் தனது வாழ்க் கையின் லக்ஷியமாகக் கொண்டுள்ளது இன்பம் என்ற பொருளையே. ஏனைய பொருள்களும் செயல்களும் இந்த முடிவான லக்ஷியத்துக்கே சாதனங்களாக உள்ளன. இந்த இன்பம் சிற்றின்பம் பேரின்பம் என இருவகைப்படும். சிற்றின்பமாவது உலகத்திலுள்ள பொருள்களி னால் உயிரினிடத்து உண்டாகும் பற்றையே துணையாகக் கொண்டு ஏற்படுவது இவ்வுலகத்துப் பொருள்களும் உயிரின் பற்றும் மாறு கின்ற தன்மையுடையன. ஆகையால் சிற்றின்பம் எப்போதும் மாறும் சுபாவமுடையது. ஆகையால் பெருகவும் சிறுகவும், நிலைக்க வும் நிலை தவிரவும் செய்யுந்தன்மை சிற்றின்பத்துக்கு இயல்பாக உண்டு. ஆனால் பேரின்பமோ கடவுள் என்ற பொருளை உயிர் பற்றிக் கொள்வதால் உண்டாவது. கடவுள் என்றும் மாறாததும் நிலையுள்ள தும் எல்லாவற்றிற்கும் பெரியதுமான இன்பத்தை எப்போதும் அநு பவிப்பவர். ஆகையால் அவரைப் பற்றுவதால் உண்டாகும் பேரின்ப மும் அவ்வாறே இருக்கும். சிற்றின்பத்துக்குச் சாதனமாகவுள்ள அறிவைத் தருவன உலக அறிவியல் நூல்கள் பேரின்பத்துக்குச் சாதனமாகவுள்ள அறிவைத் தருவன சமய நூல்கள். எனவே சம யத்தைப் பேரின்ப அறிவியல் என்னலாம்.

சைவ சமயம்:—மக்கள் தன்மை, பழக்க ஒழுக்கங்கள், அறிவு, அநுபவமுதிர்ச்சி முதலியவைகட்குத் தக்கவாறு சமயங்களும் பல வுள்ளன. இவற்றுள் எல்லாவற்றிலும் சிறந்ததும் மற்றெல்லா சம யங்களையும் தன்னுள் ஏணிப்படிகள் போல அடக்கியுள்ளதும் மிகுந்த பரிசுத்தம், அறிவு, அருள் முதலியவற்றை அங்கங்களாகக் கொண்ட பேரின்பத்தைத் தருவதுமாகிய சமயம் சைவ சமயமெனப் படும். இதிலும் பல பிரிவுகளுள்ளன. இவற்றுட் சிறந்தது சைவ சித்தாந்தம் எனப்படும். இதையே இங்கு நான் எடுத்து விவரிப் பேன். சைவம் என்று நான் கூறுமிடத்திலெல்லாம் சைவ சித்தாந் தம் என்றே நீங்கள் எண்ணிக் கொள்ளவேண்டும்.

சைவத்தின் அடிப்படை:—சைவ சித்தாந்தத்தின் அடிப்படை யான கொள்கை ஒன்றே. அதை ஒரே வாக்கியத்தில் சொல்லிவிட

லாம். ஆதியும் அந்தமும் இல்லாத பொருள்களான கடவுள் (பதி), உயிர் (பசு), உலகம் (பாசம்) என்ற மூன்றினுள் உயிர் தன்னை இயல்பாகக் கட்டிப்பிணைத்துள்ள பாசத்திலிருந்து கடவுளின் திருவருளைத் துணையாகக் கொண்டு விடுபட்டு கடவுளின் திருவடியில் பேரின்பத்தையடைதல் என்பது தான் சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான உண்மை. இவ்வரிய வுண்மையை விளக்குவதற்காகவே ஆயிரக் கணக்கான விவர உண்மைகள் சிலவற்றைக் காண்போமாக.

முப்பொருளுண்மை:—அண்ட சராசரங்களிலுள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவுகளுள் அடக்கி விடலாம். அப்பிரிவுகள் பதி (கடவுள்), பசு [உயிர்கள்), பாசம் [உலகம், மலங்கள் முதலியன] என்பன இவ்வாறு பிரிப்பதற்கு முப்பொருளுண்மை என்று பெயர். இம்மூன்றும் ஆதியும் அந்தமுமில்லாமல் என்றும் உள்ளனவென்பது சைவ சித்தாந்தத்தில் முக்கியமான ஒரு உண்மை.

கடவுள்:—கடவுள் சைவத்தில் சகுணக் கடவுளாகவும் நிர்குணக் கடவுளாகவும் விளங்குகிறார். சகுணக் கடவுள் எட்டு குணங்களையுடையவராய் உலகத்தில் விறகில் தீயைப் போலவும் எள்ளுக்குள் எண்ணெய் போலவும் இருக்கிறார் நிர்குணக் கடவுள் உருவம் தொழில் குணம் முதலியவற்றில் எவையுமின்றி எல்லாவற்றிற்கும் புறம்பாக நிற்கிறார் உயிர்கள் முதன்முதலாக சகுணக் கடவுளின் இலக்கணத்தை யறிந்து வழிபட்டபிறகே நிர்குணக் கடவுளை யறிய வேண்டும்.

கடவுளின் எண் குணங்களும் ஐந்தொழில்களும்:—சகுணக் கடவுளின் எட்டுக் குணங்களாவன— 1. தன்வயத்தன் ஆதல், 2. தூயவுடம்பினனாதல், 3. இயற்கை யுணர்வினனாதல், 4. முற்று முணர்தல், 5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், 6 பேரருள் உடைமை, 7. முடிவில் ஆற்றலுடைமை, 8 வரம்பில் இன்பமுடைமை என்பனவாம். இக்குணங்களையுடைய கடவுள்தான் உலகத்துக்கு நாயகனாக இருக்கும் தகுதி யுடையவர்; நாயகனாகவே இருக்கிறார்; உயிர்களுக்கும் தலைவனாக விளங்குகிறார். எல்லாத் தொழில்களையும் நடத்துபவரும் இவரே. இவரது தொழில்கள் ஐந்து வகைப்படும். இவை சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் திரோபவம் அநுக்ரஹம் என்பன. இத்தொழில்களை நடத்த இவருக்கு இச்சை கிரியை ஞானம் என்ற மூன்று வகையான சக்தி துணைசெய்கிறது உலகத்தில் கடவுள் சக்தியோடு பிரிக்க முடியாத தன்மையாகக் கலந்து தொழில் செய்



கிறார். சக்தியோடு கலந்த சிவம் என்ற இக்கடவுளே கோயில்களில் சிவலிங்க உருவமாக வணங்கப்படுகிறார். இவ்வாறு சக்தியோடு கூடிய கடவுள் ஒன்பது தொழிற்படு கடவுளர் மூலமாக உலக காரியங்களை நடத்துகிறார். இவ்வொன்பது கடவுளருள் ஒருவரையே தலைவராகச் சில சமயங்கள் கொள்ளும். என்றாலும் அச்சமயத்தவர்கட்கும் அவரவர் தகுதிக்கேற்ப அருள் செய்பவர் முழுமுதற் கடவுளே யாவார்.

கடவுள் நிமித்த காரணர், சத்காரியவாதம்:-ஒவ்வொரு காரியத்துக்கும் மூன்று வகையான காரணங்கள் உண்டு. அவை முதற் காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் எனப்படும் ஒரு மண் பானையைச் செய்வதற்கு மண் தேவை; கோல் சக்கரம் முதலிய ஆயுதங்கள் தேவை; குயவனும் தேவை. ஆயுதங்களை அறிவோடு உபயோகித்தால் குயவன் மண்ணைப் பானையாக்குவான். இங்கே மண் முதற்காரணம்; கோல் சக்கரம் துணைக் காரணம்; குயவன் நிமித்த காரணம் இஃதேபோல் மாயையை முதற்காரணமாகவும் சக்தியைத் துணைக் காரணமாகவும் கொண்டு கடவுள் நிமித்த காரணராக இருந்து உலக காரியங்களை நடத்துகிறார். இந்த முறையில் உலக காரியத்துக்குக் காரணங் கூறுகிறதற்குச் சத்காரிய வாதம் என்று பெயர். சைவ சித்தாந்தத்தின் முக்கியமான கொள்கைகளுள் இதுவும் ஒன்று. வேறு பல சமயங்களில் கடவுள் முதற் காரணராகவும் துணைக்காரணராகவும் கருதப்படுகிறார். ஆனால் சைவத்தில் அவ்வாறு அவரை எண்ணுவதில்லை. அவ்வாறு எண்ணினால் முப்பொருளுண்மைக்கு பங்கம் உண்டாகும்; அறிவியலுக்கும் பொருந்தாது. பௌதிக சாஸ்திரத்தில் உள்ளது போகாது என்ற உண்மை ஒன்றுண்டு. உள்ளது போகாது இல்லாதது வாராது என்பதே சத்காரியவாதம். கடவுள் ஒன்றுமில்லாத வெறும்பாழிலிருந்து உலகங்களை உண்டாக்கினார் என்பது சத்காரியவாதத்துக்கும், பௌதிக சாத்திர உண்மைக்கும், சாதாரண நம்பிக்கைக்கும் முரணாக இருக்கும். சைவம் அவ்வாறு கூறவில்லை. சூக்ஷ்மமாக உள்ள பொருளிலிருந்து ஸ்தூலமான உலகத்தை வருவிப்பதுதான் சிருஷ்டி யென்றும் அவ்வாறே ஸ்தூலத்தைப் பிரித்து சூக்ஷ்மத்துள் அடக்குவது தான் சம்ஹாரம் என்றும் சைவ சமயம் கூறுகின்றது.

சிவத்தின் இயல்பு:—நாம் உலகத்தோடு தொடர்பு வைத்துள்ள வரையில் இந்த உலகத்தோடு தொடர்புடைய சகுணக் கடவுளை தொடர்பில்லாத நிர்குணக் கடவுளை வழிபடலாம். இவ்வாறு சகுண

மாகவும் நிர்குணமாகவும் கூறப்படும் கடவுளுக்குத்தான் சைவ சமயம் "சிவம்" என்று பெயர் கொடுத்திருக்கிறது சகுணமும் நிர்குணமும் ஒன்றற்கொன்று மாறுபட்டதுபோலத் தோன்றுவதால் இவ்விரண்டு தன்மையிலும் நிற்கும் கடவுளை வருணிக்கும்போதும் ஒன்றோடொன்று மாறுபட்ட சொற்கள் அடுக்கடுக்காக வரும். உதாரணமாக கடவுளிலக்கணங் கூறும் சிவஞான சித்தியார் முதற் சூத்திரத்தின் கடைசி செய்யுள்,

"சிவன் உருஅருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும்அல்லன்
தவமுதல் யோகபோகம் தரிப்பவன் அல்லன் தானே
இவை பெறஇயைந்தும் ஒன்றும் இயல்பினனே"

என்று சிவபெருமானை வர்ணிக்கிறது. இம்மட்டில் கடவுளின் இலக்ஷணத்தைப்பற்றிய பேச்சை நிறுத்திக்கொண்டு இனி உயிர்களின் லக்ஷணத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

(தொடரும்)

---

## கவர்களுக்கும் புத்தக பாக்கெட்டுகளுக்கும் புதிய முறையான தபால் கட்டணம்

½ தோலாவுக்கு அதிகமில்லாத கவர்களுக்கு ஒரு அணா (0-1-0)
½ தோலாவிலிருந்து 2½ தோலா வரையில் 0-1-3 [1¼ அணா]

புத்தக பாக்கெட் போஸ்டு [புக் பாக்கெட்] 5 துலாக்கள் வரையில் அல்லது 5 துலாக்களிலிருந்து 10 துலாக்களுக்குள் இடையுள்ள புத்தக பாக்கெட்டுகளுக்கு 0-0-9 ஒன்பது பை. 5 துலாக்களுக்கு மேற்பட்டு பிறகு வரும் முழு 5 துலாக்கள் எடைக்கு ½ அணா பிறகு அதன் பாகத்திற்கும் ½ அணா.

* * * *

சென்னை கல்வியிலாகா டிப்டி டைரக்டராக விருந்த திரு. எம். ஏ. காண்டத் துரையவர்கள் (28-3-34) மதனபல்லி கடிய ஆஸ்பத்திரியில் இறந்து விட்டார்.

## சம்பளமில்லாத உபாத்தியாயர்கள்

சம்பளமில்லாமல் உபாத்தியாயர்களை முனிசிபல், போர்டு பாடசாலைகளில் அமர்த்திக் கொள்ளக்கூடாது அவ்விதம் வைத்துக்கொள்வதால் அவ்வுபாத்தியாயர்கள் பொருப்பற்ற தன்மையில் நடந்து கொள்வதல்லாமல், பிள்ளைகளுக்கு சரியான முறையில் கல்வி கற்பிப்பது கிடையாது ஆதலின் அததகைய பொருப்பற்ற உபாத்தியாயர்களை வைத்துக் கொள்ளக் கூடாதென அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

# சாக்கிரட்டீஸும் சங்கரலிங்கமும்

மதுரை மோட்டார் ஸ்டாண்டு சிவகங்கைக்குச் செல்லும் மோட்டார் பத்து பிரயாணிகள் உட்கார்ந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர் நமது சங்கரலிங்கம். சங்கரலிங்கத்தின் இடுப்பில் பட்டைப் பேட்டுக்கரை போட்ட கதர்வேஷ்டி கரையின் நடுநடுவே காணும் மஞ்சள் மாங்காய் ஜரிகை மாங்காய் போலிருக்கிறது. பாதங்களில் பம்பு பூட்ஸை உடலில் பாப்ளின் ஷர்ட்டு; ஒரு பொத்தான் கொண்ட கிளாட் நெக் ஷர்ட்டு; சலவை மடி இன்னுங் கலையாமல் உள்ளது. அதன்மேல் 'பத்தமடை' பேட்டுக்கரை சில்க்கு அங்கவஸ்திரம்; ஒன்றரை அங்குல அகலத்தில் அடுக்குமடிப்புடன் கூடி நுனிகளிரண்டும் முதுகின்மேல் படிந்து கிடக்க இரண்டு சுற்றுமாலையாக விளங்குகிறது. 'எம்பயர்' ரோல்டு கோல்டு ரிஸ்ட் வாட்சு கட்டிய இடது கையில் 'விஜய விகடன்! காரைக்கால் சில்க்குக் கைக்குட்டை பிடித்த வலதுகை காதில் 'டால்' அடித்துக்கொண்டிருக்கும் புஷ்பராகக் கடுக்கன்களிடத்தும் இட துகை விரலிலுள்ள பட்டைக்கல் மோதிரத்திடத்தும் மாறி மாறிச் சென்று கொண்டிருக்கிறது; ஒவ்வொரு சமயம் மூக்கில் வீற்றிருக்கும் குரூக்ஸ் லென்ஸிடத்தும் உறவாடுகிறது. விஜய விகடனைப் பிடித்தபடியே ரிஸ்டு வாட்சைப் பார்த்தார் சங்கரலிங்கம்

"என்னப்பா! கண்டக்டர்! மணி ஒன்றரை ஆயிற்றே. எப்பொழுது யெடுக்கப் போகிறாய்? பொழுது போய்விடும் போலிருக்கிறதே" என்றார். கண்டக்டர் "என்ன சார்! அவசரப்படுத்துகிறீர்கள்! மணி 1-29 தானே ஆயிற்று கோபித்துக்கொள்ளாதீர்கள். அதோ சாமியார் ஒருத்தர் வருகிறார். வந்ததும்—சாமி! சாமி! சீக்கிரம் நடந்து வாருங்கள்" என்று கூவினான். சங்கரலிங்கம் சாமியார் பக்கம் திரும்பிப்பார்த்தார். சிவந்த உடலும் வெள்ளைத் தாடியும், வெள்ளை வேஷ்டியும் கொண்ட சாமியார் வேகமாய் வந்து சேர்ந்தார். சங்கரலிங்கம் இருந்த இடத்தண்டை வந்து ஏறினார். ஏறிய வேகத்தில் சங்கரலிங்கத்தின் விஜய விகடனைத் தவறுதலாய்த் தட்டிவிட்டார். விகடன் சங்கரன் பாதத்தின்மேல் விழுந்தது. வந்தது கோபம் சங்கரனுக்கு; ஒரு விநாடி விரைத்துப் பார்த்தார் சாமியாரை பிறகு கீழே குனிந்தார்: குனிந்தவுடன் வலது தோளில் கிடந்த சில்க்கு நுனி கீழே விழுந்தது; உடனே நிமிர்ந்து நுனியை எடுத்துப் போட்டுக்கொண்டு மறுமுறை குனிந்தார்; அப்பொழுது இடது தோளில்

டைந்த துணி விழுந்தது; மறுபடியும் திமிர்ந்து அதையும் சரியாகப் போட்டுக் கொண்டார் இந்த அவஸ்தையைக் கண்ட சாமியார் விழுந்த விகடனை எடுத்துச் சங்கரனிடம் கொடுத்தார். சங்கரன் முகத்தில் கோபமும் அசட்டுப் புன்சிரிப்பும் கலந்து தவழ்ந்தன. சங்கரன் விகடன் பக்கங்களைத் திருப்பினார்; முன் பார்த்துக் கொண்டிருந்த பக்கத்தை எடுத்தார். இதற்குள் மோட்டார் கிளம்பி ஓடிக்கொண்டிருந்தது!

சிறிது நேரங்கழித்து சங்கரன் சாமியாரைப் பார்த்து 'தாத்தா. 'ண' எழுத்து வரும் மந்திரம் என்ன'' என்று கேட்டார்.

சாமியார்:—'ண' எழுத்துள்ளதா? எதற்கு?

சங்கரன்:—அதெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்!

சாமி:—கோபிக்காதே அப்பா! 'ண' எழுத்துள்ளதா? ஓம் நமோ நாராயணாய

சங்:—விகடன் பக்கத்தைப் பார்த்துக் கொண்டு) இன்னொரு தரம் நிறுத்திச் சொல்லுங்கள்

சாமி:—ஓம் நமோ நாராயணாய

சங்:—மந்திரம் சரியில்லை தாத்தா!

சாமி:—என்னப்பா! மந்திரம் சரியில்லையா?

சங்:—ஆம் எழுத்துக்கள் அதிகம் இங்கே பாருங்கள்! (என்று விகடன் பக்கத்தைக் காட்டி மந்திரத்திற்கு ஆறு எழுத்துத்தான்.

சாமி:—ஓகோ! ஆறு எழுத்து மந்திரமா?

சங்:—அப்படியும் உண்டோ?

சாமி:—முன்னமேயே சொல்லலாகாதா? ஆறு எழுத்து மந்திரமா? சரவணபவ—

சங்:—ச-ர-வ-ண-ப-வ. தாத்தா! அதுதான் சரி! அதுதான் சரி! இப்பொழுது சரி! அதுதான் மந்திரம்.

சாமி:—(புன்னகையுடன்) எதற்காக அப்பா இது?

சங்:—அதெல்லாம் உங்களுக்குத் தெரியாது தாத்தா! ச-ரி நீங்கள் எங்கே போகிறீர்கள்?

சாமி:—சிவகங்கைப் பக்கம்—

சங்:—நானும் அங்கேதான் போகிறேன்.

சாமி:—சொந்த ஊர்?—

சங்:—சொந்த ஊர் 'சோழவந்தான்' ஒருமனுஷியாளைப் பார்க்கச் சிவகங்கைக்குப் போகிறேன்.

சாமி:—என்ன விசேஷமோ?



சங்:—முனிஸிபாலிடியில்—

சாமி—என்ன வேலைக்கு அப்பா?

சங்:—தாத்தா! நீங்கள் காப்பி சாப்பிட்டீர்களா?

சாமி:—நான் சாப்பிடுவதில்லை யப்பா? நீ என்ன வேலைக்கு—

சங்:—இல்லை-தாத்தா—

சாமி:—சும்மா சொல்லப்பா!

சங்:—(தலைகுனிந்து) டீச்சர் வே - லை - க்கு—

சாமி:—உபாத்தியாயர் வேலைக்கா? நல்ல தொழிலாச்சே! அதில் என்ன வெட்கம்? பாவமற்ற தொழிலாச்சே!

சங்:—தாத்தா! நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

சாமி:—இப்பொழுது மதுரையிலிருந்துதான்—நீ என்ன படித்திருக்கிறாய்?

சங்:—ஹையர் கிரேடு—தாத்தா!

சாமி:—அப்படி யென்றால்—

சங்:—டிரெயினிங் ஸ்கூலில் ஹையர்—

சாமி:—சரி-சரி-பரீக்ஷை தேறிவிட்டாயா?

சங்:—தேறிவிடுவேன் - தாத்தா! இந்த வருஷந்தான் டிரெயினிங் முடித்துப் பரீக்ஷை எழுதினேன்.

சாமி:—நீ எந்த கிளாஸ் வரையில் படித்திருக்கிறாய்?

சங்:—ஸ்கூல் பைனல் பெயில்

சாமி:—உனக்குத் தாய் தகப்பனார்?

சங்.—அம்மா இறந்து ஆறுவருஷமாகிறது. அப்பா இறந்து இரண்டு மாதமாகிறது.

சாமி.—பின்—உனக்கு ஆதரவு?

சங்.—மாமனார் தான்.

சாமி.—உனக்கு சொத்து....?

சங்.—ஒரு வீடும் இரண்டு ஏக்கர் நிலமும் இருந்தன.

சாமி.—இப்பொழுது இல்லையோ?

சங்.—அப்பா அந்தியக் காலத்தில் அவைகளைக் கடனுக்காக விற்று விட்டார்.

சாமி.—போனால் போகிறது. வினைப்பயன் யாரை விட்டது? வருந்தாதே! எந்த முனிஸிபாலிடியில் வேலைக்குப் போகிறாய்?

சங்.—திண்டுக்கல்

சாமி.—உத்திரவு கிடைத்து விடுமல்லவா?

சங்.—அதற்காகத்தான் சிபாரிசுக்குப் போகிறேன்.

சாமி.—மறந்துவிட்டேன் பார்த்தாயா? சரி—திண்டுக்கல் முனிஸிபாலிடி வேலைக்குச் சிவகங்கைக்கு—

சங்.—என் மாமனுருக்குச் சிநேகிதர் ஒருவர் அங்கு இருக்கிறார். அவருக்குத் திண்டுக்கல் முனிசிபாலிட்டி மெம்பர் ஒருவர் தெரிந்தவர்—

சாமி.—சரிதான்....கடவுள் அருள் கைகூடவேண்டும். இச்சமயத்தில் சாமியார் இடுப்பிலிருந்து ஒரு ஓலை நறுக்கு விழுந்தது. அதைச் சங்கரன் எடுத்தார்; அதில் சில எழுத்துக்களைக் கண்டார்.)

சங்.—என்ன தாத்தா இது?

சாமி.—அதை ஒரு பெரியவர் எனக்குக் கொடுத்தார்.

சங்.—என்னமோ எழுதியிருக்கிறதே உ-ம் "உன்னை - உன்னையே நீ எண்ணி - உன்னையே நீ எண்ணிப்பாரு" இது என்ன தாத்தா? என்று சொல்லிக்கொண்டே சாமியாரிடம் கொடுத்தார்)

சாமி:—ஆம் "உன்னையே நீ எண்ணிப்பாரு" இதற்குள் மோட்டார் மேஜார் வந்து நின்றது.

சாமியார்:—எழுந்து "நான் இங்கே இறங்கவேண்டும் போய் வருகிறேன்" என்றார்.

சங்.—தாத்தா! தங்கள் பெயர்—?

சாமி.—என் பெயரா? 'சாக்ரொட்டீஸ்' என்று சொல்வார்கள்.

(தொடரும்)

* * *

மாம்பழத்தில் ஸி. ஜீவஸத்துப் பொருள் நிரம்ப இருக்கிறது.— சிகாகோவில் கொஞ்சநாளைக்கு முன் நடந்த பிசிகல் தீரபி கான்பிரஸ்ஸில், ஆரஞ்சு, எலுமிச்சம் பழம் இவைகளிலிருப்பதைவிட மாம்பழத்தில் இரட்டத்தனை ஸி. ஜீவஸத்துப் பொருள்கள் இருப்பதாக ஜெரயிஷன் சர்வ கலாசாலையைச் சேர்ந்த டாக்டர் விக்டர் விவின் என்பவர் சொன்னார். இது தென் ப்ளாரிடாவில் மாந்தோப்புக்காரர்களுக்கு அனுகூலம்.

ஐக்கிய நாடுகளில் இந்த இடத்தில் மாம்பழம் விசேஷம். க்யூபா முதலிய அமெரிக்காவைச் சேர்ந்த உஷ்ணப்பிரதேசங்களிலும் பயிராகிறது. அதன் மணமும் ருசியும் 'மங்கோஸ்டீன்' தவிர, வேறொரு பழத்திற்கும் கிடையாது:— குட் ஹெல்த்.

# சங்கக் குறிப்புகள்.

## திண்டிவனம் ரேஞ்சு ஆரம்ப ஆசிரிய மானேஜர் சங்கம் முதலாவது மீட்டிங்

இம்மீட்டிங்கானது திண்டிவனம் ஏ. ஏ. எம். கிரேன் பாடசாலைக் கட்டடத்தில் பகல் 1-மணிக்கு ஸ்ரீமான் டி. சர்வ கோபாலப் பிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடப்பட்டது.

ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்து திரு. இராமசாமி அய்யரால் பாடப்பட்டது. சென்ற வருஷத்திய ரிபோர்ட் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. சென்னையிலிருந்து வந்த ஆரம்பக் கல்வி மலர் 6, 7 வாசிக்கப்பட்டது. ஷை ஆரம்பக் கல்வியை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று அக்கிராசனர் அவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது.

தற்போது ஷை ரேஞ்சு ஆசிரியர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்டேஷம் லைபிரரியை விருத்தி செய்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று பேசப்பட்டது.

அடியில் கண்ட நிர்வாகஸ்தர்கள் ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| பிரசிடெண்டு | கனம் | சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் |
| வைஸ்பிரசிடெண்டு | ,, | டி. சர்வகோபால் பிள்ளை அவர்கள் |
| காரியதரிசி | ,, | வி. இராமசாமி அய்யர் அவர்கள் |
| பொக்கிஷதார் | ,, | எஸ். எதிராஜலு நாயுடு அவர்கள் |
| டைரக்டர்கள் | ,, | ஆர். இராஜரத்தினம் பிள்ளை அவர்கள் |
| | | டி. பெரிய சாமி நாயகர் அவர்கள் |
| | | வி. துரைசாமி ரெட்டியார் அவர்கள் |

அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டன.

1. சென்னை மாகாண ஆரம்ப ஆசிரிய மானேஜர் சங்கத்திற்கு எக்சிகியூட்டிவ் மெம்பராக ஸ்ரீமான் டி. சர்வகோபாலப் பிள்ளை அவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

2. தென்னார்க்காடு ஜில்லா ஆரம்ப ஆசிரிய மானேஜர் சங்கத்திற்கு டெலிகேட்டாக ஸ்ரீமான்கள் டி. சர்வகோபால் பிள்ளை 1. வி. இராமசாமி அய்யர் 2. எஸ். எதிராஜலு நாயுடு 3 டி. பெரியசாமி நாயகர் 4 இந்நால்வரையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

3. ஒவ்வொரு மெம்பரும் சந்தாதுகை 0-6-0 செலுத்த வேண்டுமென்றும் ஷை துகையிலிருந்து ஜில்லா சங்கத்திற்கு ரூபா 5-0-0 கட்டணம் கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

4. சென்னை மாகாண ஆரம்ப ஆசிரிய மானேஜர் நிர்வாகக் கூட்டம் 31-12-33ல் கூடி சாம்பியன் ஸ்கீம் விஷயமாய் தீர்மானித்த தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டது.

5. நமது ஜில்லா எடியூகேஷனல் கௌன்சலில் நமக்குச் சேர வேண்டிய கிராண்டு துகையை அந்தந்த வருஷம் ஏப்ரல் மாதத்திற்குள் கொடுத்துவிட வேண்டுமென்று ஷை கௌன்சல் பிரசிடெண்டைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

6. போதனா முறை பயிற்சி பெறாத உபாத்தியாயர்களுக்குத் தொடர்ச்சியாய் கிராண்டு கொடுத்துவர வேண்டுமென்றும் 5 வருஷம் சர்வீஸ் உள்ள உபாத்தியாயர்களுக்கு சர்வீஸ் சர்டிபிகேட் கொடுக்கவும், காருண்ய கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

7. நமது ஜில்லா கௌன்சலில் நம்மவர்களுக்கு 2 ஸ்தானங்கள் கவர்ன்மெண்டாரால் சாங்க்ஷன் ஆகியிருந்தும் இதுவரை ஷை பிரசிடெண்டு எலக்ஷன் ரூல் ஏற்படுத்தி ஜில்லா சங்கத்திற்கு அனுப்பாததைப்பற்றி இச் சங்கம் வருந்துவதுடன் உடனே ஷை ரூலை அனுப்ப ஷை பிரசிடெண்டைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

கடைசியில் நேஷனல் ஆந்தம் பாடப்பட்ட பின் கூட்டம் இனிது கலைந்தது.

ஷை கூட்டத்திற்கு, மரக்காணம், உப்புவேலூர், ஆலத்தூர், பிரமதேசம் ஒலக்கூர், மைலம், வெள்ளிமேடு பேட்டை, திண்டிவனம், கோட்டைக் குப்பம், ரெட்டணை, முதலிய செண்டர்களிலிருந்து மெம்பர்கள் வந்திருந்தார்கள்.

டி. சர்வகோபாலப் பிள்ளை, பிரசிடெண்டு

உத்தரிப்புலம் தெற்குக்குத்தகை,
எய்டெட் எலிமெண்டரி பாடசாலை.

வருஷாந்தரக் கொண்டாட்டம் பிப்ரவரி மீ 9ந்தேதி (9-2-34) வெள்ளிக்கிழமை யன்று தாலுக்கா போர்டு மெம்பரும், இவ்வூரின் பெரிய மிராசுதாருமான திரு, கெ. சி. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் இப்பள்ளிக் கூடத்தின் வருஷாந்தரக். கொண்டாட்டம் நடைபெற்றது. அதற்கு இவ்வூரின் சிலரும் மாணவர்களும் கூட்டமாகக் கூடியிருந்தார்கள்.



கடைசியாகத் தலைவருக்கு மாலை சூட்டி, யாவருக்கும் சந்தனம் தாம்பூலம், சிற்றுண்டி கொடுத்து மாலை 6-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

## ஆரம்பாசிரியர்கள் சங்கம் மதுராந்தகம்.

முன்பு சென்னைக் கார்ப்பரேஷனில் கல்வி ஆபீசராகயிருந்து சென்ற 3½ வருஷங்களாக மதுராந்தகம் ரேஞ்சு பாடசாலைகளின் டிப்டி இன்ஸ்பெக்டராயிருந்து, உபகாரச் சம்பளம் பெற்று வேலையினின்று விலகிக் கொள்ளும் ஸ்ரீமான் எம். டி. வெங்கடாசாரியார் அவர்களைப் பாராட்டுவதற்காக நாளது மார்ச்சு மாதம் 3ந்தேதி மாலை 3-மணிக்கு மதுராந்தகம் ஹிந்து ஹைஸ்கூல் கட்டிடத்தில், மதுராந்தகம் தாலுக்கா எலிமெண்டரி ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர்களின் விசேஷக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அது சமயம் தற்காலத்திய டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் எஸ். சேஷாத்திரி ஐயங்காரவர்கள் தலைமை வகித்தார் நகரமாந்தர்களும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களுமாக பலர் வந்திருந்து கூட்டத்தைச் சிறப்பிக்கச் செய்தனர். ஸ்ரீமான் ஆசாரியாரவர்கள் பாடசாலை உபாத்தியாயர்களை உய்விக்கச் செய்த விஷயங்களைப்பற்றி பலர் பாராட்டி அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கப் பிரார்த்தித்தபின் கூட்டம் இனிது முடிந்தது. முடிவில் ஸ்ரீமான் ஆசாரியாரை யாவரும் ஊர்வலமாக அழைத்துச் சென்று மரியாதை செய்தார்கள்.

## போர்டு எலிமெண்டரி ஆண் பாடசாலை காஞ்சி.

இச்சங்கம் 9-3-1934-ல் ப்ரம்மஸ்ரீ டி. எஸ். கிருஷ்ண மூர்த்திராவ் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் நடந்தது,

1. நல்லினம் சேர்தல்., பிரதி உபகாரத்தை கருதாது அன்னியருக்கு உதவிபுரிதல், பஞ்சமாபாதகங்களை நிவர்த்தித்தல், என்னும் அருமையான வியாசங்கள் முறையே, துரைசாமி ரெட்டி, என் கோவிந்தசாமி முதலி, கருமமுதலி, இவர்களால் உபன்னியாசிக்கப்பட்டன.

மாலை 5-மணிக்கு தலைவர் முடிவுரையோடு மாணவர்களின் சங்கம் கலைந்தது.

"பொறுமை" என்னும் வியாசத்தை நயம்பாடி பஞ்சாயத்து

பாடசாலை ஆசிரியர் எஸ். நடராஜ தேசிகரால் வாசிக்கப்பட்டு பலரால் இதை பின்பற்றி பேசப்பட்டன.

தீர்மானங்கள்:—1. கடலாடி சங்கமூலம் கிடைத்த "ஆரம்பக் கல்வி" என்னும் மாதிரி பத்திரிகை இச்சங்கமூலம் ஒன்று தருவிப்பதோடு பிரதி மெம்பர்களும் தனித்தனி சந்தாதாரராக சேருவதென்று தீர்மானிக்கப்பட்டது.

1907ஞு முதல் 1914-ம் வருஷம் வரையில் பயின்று லோயர் ஹையர் என்ற பிரிவினையில்லாமல் பரீக்ஷை தேறி சர்ட்டிபிகேட் பெற்றவர்களை ஆரம்ப முதல் ஹையர் கிரேட்டாகவே பாவிக்கும்படி ரூலை திருத்தி அமைக்க கனம் கவர்ன்மெண்டாரை இச் சங்கம் வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறது

மேற்கண்ட வருஷங்களில் பயின்ற ஆசிரியர்கள் தாலுக்கா வாரியாக தனித்தனி மெமோரியல் மூலம் கனம் டைரெக்டர் துரை அவர்களுக்கு அனுப்பும்படி அழுத்தமாக இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

தலைவர் முகவுரையுடன் சங்கம் இனிது முடிவு பெற்றது.

## ஆரம்பாசிரியர்கள் சங்கம் சாத்தூர்.

எங்கள் சங்கத்தில் 17-2-34-ல் நிறைவேறிய தீர்மானங்கள்

சங்கரலிங்கபுரம் ஆண் போர்டு பாடசாலை எச். எம். ஸ்கூல் எ. சங்கரய்யர் அவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் ஆரம்பம் ஆயிற்று.

காரியதரிசி அவர்களால் கொண்டுவரப்பட்ட அடியிற்கண்ட தீர்மானங்கள் மூன்றும் ஏகமனதுடன் நிறைவேறிற்று.

1. தற்சமயம் 12-1-34-க்கு முன்னுலிருந்து வேலை பார்த்து வரும் யாதொரு சர்ட்டிபிக்கேட் இல்லாதவர்களுக்கு அப்பொழுது வேலை பார்த்ததின் அடையாளமாக சர்வீஸ் சர்ட்டிப்பிக்கேட்டு கொடுக்கும்படிக்கும், கனம் கல்வி டைரக்டர் அவர்களையும் கனம், கல்வி மந்திரி அவர்களையும், இராமநாதபுரம் ஜில்லா கனம் கல்வி அதிகாரி அவர்கள் மூலமாயும் கனம் டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள் மூலமாயும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

2. சென்ற வருஷத்தில் எய்டெட் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்பட்ட கிராண்டுக்கு அதிகம் குறைபட்டு கிடைத்திருக்கிறது. இனிமேல் ஷை கிராண்டுகள் 100-க்கு 50 வீதம் உயர்த்திக்கொடுக்கும்



படிக்கும் கல்விச் சபையாரைக் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

3. பர்னிசர் கிராண்டு வாங்காத ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் ஷை கிராண்டு கொடுக்குமாறு கல்விச் சபையாரைக் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

# தென்காசி ரேஞ்சு,
# ஆரம்ப ஆசிரிய மானேஜர் சங்கம்.

நடவடிக்கைகள்.

இச்சங்கத்தின் விசேஷக் கூட்டம் ஒன்று 3-3-34 மாலை 2-½ மணிக்கு தென்காசி, ஸ்ரீபொன்னம்பலம் வித்தியாசாலையில், தென்காசி ரேஞ்சு, சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் பி. சுப்பிரய பிள்ளை பி. எ. எல். டி. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஜூனியர், டிப்டி இன்ஸ்பெக்டர், ஸ்ரீமான், டி. கெ. வி. இராஜகோபால அய்யர் பி. ஏ. எல். டி. அவர்களும், பல பிரமுகர்களும், ஆசிரிய மானேஜர்களில் 41-பேரும், இன்னும் ஏராளமான ஆசிரியர்களும், மானேஜர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

சங்கத்தின் சாதாரண விஷயங்கள் நடைபெற்றதும் திருநெல்வேலி ஜில்லா ஆசிரிய மானேஜர் சங்கத்திற்குப் பிரதிநிதியாக ஸ்ரீமான்கள் டி. சுப்பிரமணியன் 1. எஸ். தம்பா உபாத்தியாயர் 2. எஸ். பெரியசாமிப்பாண்டியன் 3. ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின்னர், புதிய வருஷத்திற்கு காரியநிர்வாக உத்தியோகஸ்தர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர் அவர்கள் முகவுரையாகப் பேசியபின், காரியதரிசியால் வந்தனோபசாரங்கூறி புஷ்பம், சந்தனம், தாம்பூலம் வழங்கியதும் கூட்டம் 5-½ மணிக்கு முடிவுற்றது

## நிறைவேறிய தீர்மானங்கள்.

1. திருநெல்வேலி ஜில்லா கல்விசபைக்கு பாளையங்கோட்டை வக்கீல், திருவாளர், டானியல் தாமஸ் பி. ஏ., எம். எல். சி. அவர்கள் தலைவராய்த் தேர்ந்தெடுத்ததுபற்றி இச்சங்கம் மகிழ்ச்சியுறுவதுடன், தங்கள் மனப்பூர்வமான வந்தனத்தையும், நன்றியறிதலையும் செலுத்துகிறது.

2. சென்னை மாகாணக் கவர்னராக நியமுகம் செய்யப்பட்டி

ருக்கும் கனம் ஸர். முகம்மது உஸ்மான் சாயபு அவர்களை வாழ்த்துவதோடு இந்தியசர்க்காரின் உதாரகுணத்தை மிகவும் மெச்சுகிறது.

3. வடபீகாரில் பூகம்பத்தால் சேதமடைந்த மக்கள்பால், தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், வைசிராய் அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் பூகம்பநிவாரண நிதிக்கு சங்கத்திலிருந்து ரூபாய் 5. அனுப்பவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

4. ஆரம்பப் பாடசாலைகள் விஷயத்தில், தற்சமயம் சர்க்கார் கையாண்டுவரும் முறைகளும், புதிய புதிய சட்டங்களும், ஆசிரிய மானேஜர்களைத் திகைப்படையச் செய்வதால், சாம்பியன் திட்டம் போன்றவைகளைச் சர்க்காரும், கல்வி இலாகா அதிகாரிகளும் நிதானமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறது.

5. பொருளாதார நிலை சீர்குலைந்து வாழ்க்கைத் தேவைகள் பெருகியுள்ள இக்காலத்தில் ஆசிரிய மானேஜர்கள் தன்மதிப்பையும் பாடசாலைகளின் அபிவிருத்தியையும் சிறப்புறச் செய்யவேண்டுமாயின் கீழ்கண்ட விகிதமாவது கிராண்டை உயர்த்திக்கொடுத்து உதவும்படி சர்க்காரையும், கல்வி இலாகா அதிகாரிகளையும் வேண்டிக்கொள்கிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செகண்டரி கிரேடு | ரூ. | 20-0-0. | அண்டிரைண்டு | ரூ. | 15-0-0. |
| ஹையர் கிரேடு | ரூ. | 15-0-0. | ,, | ரூ. | 12-0-0. |
| லோயர் கிரேடு | ரூ. | 12-0-0. | ,, | ரூ. | 8-0-0. |

6. தேசமெங்கும் ஆரம்பக்கல்வியை ஓங்கச்செய்து சட்டாய இலவசக்கல்வியைப் பரவச்செய்யவேண்டுமென்று கிளர்ச்சி நடந்து கொண்டு வரும் இக்காலத்தில், புதிய பாடசாலைகளில் எத்தனை போதனுமுறை பயின்ற உபாத்தியாயர்கள் இருந்தும் டிரையினிங் இல்லாத இரண்டொரு உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டால் அப்பாடசாலைகள் சப்ளிமெண்டு கிராண்டுக்கு லாயக்கில்லையென்கிற சர்க்கார் சட்டத்தை மாற்றி இதுகாரும் அனுசரித்து வந்த சட்டங்களையே அமுலில் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

7. திருநெல்வேலி ஜில்லா கல்வி சபைக்கு ஆசிரிய மானேஜர்களுக்கு தற்சமயம் இரண்டு பிரதிநிதி ஸ்தானங்கள் அளித்திருப்பது போதாததால் இன்னும் அதிகப்படியாக இரண்டு பிரதிநிதி ஸ்தானங்கள் கொடுக்கவேண்டு மென்று சர்க்காரை வேண்டிக் கொள்கிறது.



8. திருநெல்வேலி ஜில்லா ஆசிரிய மானேஜர் சத்கத்தின் வருஷாந்திர மகாநாட்டைச் சென்ற 3-வருஷக்காலமாக நடத்தாமல் போனதற்கு இக்கூட்டம் வருந்துவதுடன் கூடியசீக்கிரம் ஷை மகாநாட்டை காலதாமதம் செய்யாமல் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஜில்லா சங்கக் காரியதரிசியைக் கேட்டுக் கொள்கிறது.

9. திருநெல்வேலி ஜில்லா கல்வி சபைத்தலைவர், திருவாளர், டானியல் தாமஸ் பி. ஏ., எம். எல். சி. அவர்களுக்கு வருகிற ஜூன் மாதத்தில் சங்கத்தின் சார்பாக வரவேற்பு உபசாரப்பத்திரம் அளிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

## அம்பா சமுத்திரம் எலிமெண்டரி டீச்சர் அசோஸியேஷன் பொட்டல் புதூர்.

அய்யா, தாங்கள் மாதிரிகாப்பியாக அனுப்பிய ஷை பத்திரிகை மலர் 2. 3. 4. 6. 8. ஆகிய காப்பி 5 புஸ்தகங்கள் வந்துசேர்ந்தது. சங்க சார்பாக பெற்றுக்கொண்டேன். ஷை காப்பிகள் அனுப்பியதற்கு சங்கசார்பாக எனது அன்பார்ந்த வந்தனத்தை செலுத்துகின்றேன்.

6-3-34 அனுப்பிய பத்திரிகையும் இதில் உள்ள லெட்டரையும் பெற்றுக்கொண்டேன் இதில் ஷை சங்கம் 10-3-34 ல் ஷை பொட்டல் புதூர் போர்ட்டு முகம்மதிய பாடசாலையில் வைத்து நடந்த தீர்மானம் நெ 4. நீர்போட்ட ஷை பத்திரிகையில் 309 கல்வி அபிவிருத்தி 302 ஆரம்பக் கல்வி 322 சென்னை ராஜதானியில் கல்வி என்னும் சில முக்கிய விவரங்களை வாசிக்கப்பட்டது.

ஷை பத்திரிகையின் விஷயங்களை காரியதரிசி எஸ். வி. ஷண்முகம் பிள்ளையவர்கள் உபந்நியாசம் செய்தார்கள். நம்முடைய சங்கங்களுக்கு ஆரம்பக் கல்வி 5 புஸ்தகங்கள் வரையும் வந்து இருக்கின்றது. இந்த பத்திரிகையில் நாம் அறிய வேண்டிய விஷயங்களை எல்லாம் நன்றாய் உணர்ந்து எழுதியுள்ளார்கள். அப்போதைகப்போது நடைபெறும் எலிமெண்டரி எடுகேஷன் சட்ட சீர்திருத்தங்களையும், கெஜட்டுகளையும், ஆராய்ந்தும் வெளியிட்டுக்கொண்டு வருகிறார்கள். இன்னும் நம் நன் நடக்கைக்கு வேண்டும் கட்டுரைகளையும் கண்டு தெளியக் கூடிய விஷயங்களையும் ஒவ்வொரு ஜில்லாவிலும் மாகாணத்திலும் தாலூக்காவிலும் கிராமங்களிலும் நமது ஆரம்ப ஆசிரியர்களின் கூட்டங்களையும் அதில் உள்ள சட்ட திட்டங்களையும் நன்கு உணர்ந்து வரைந்து இருக்கிறார்கள் ஆகையால் இந்தப் பத்திரிகை நமக்கு பொற்குவியல் போலவும், வழிகாட்டிபோலவும், காணப்படுகிறது. மேலும் நம்முடைய சகோதர ஆசிரியர்கள் எந்தப் பேப்பரையாகிலும் எந்த கூட்டங்களிலாவதும்

எந்த பத்திரிகைகளிலாவது முதலில் கையில் யெடுத்ததும் நம் உபாத்தியாயர் விஷயம் காணப்படுகிறதா? அல்லது எஜூகேஷனல் விஷயமாய் காணப்படுகிறதா? என்று நாம் தாள்களை புரட்டுகிறோம். ஷை விஷயங்கள் இருந்தால் பார்க்கிறோம் அல்லது அசைவற்று போட்டுவிடுகிறோம். பொதுவாக நம்போன்ற சகோதரர்களுக்கு (தூண்டில் போடும் ஒருவன் தூண்டிலின் மிதப்பத்திலேயே கண்) என்ற மாதிரி நமக்கு ஆரம்பக் கல்வியாலேயே நமக்கு நினைப்புவரப்படுகிறது. அதற்கு இந்த ஆரம்பக் கல்வி யென்னும் (ஆனந்த கடலாகிய) பத்திரிகையை ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு ஆசிரியரும் அவசியம் வாங்கி வாசிக்கவேண்டும். அல்லது பாடசாலைக்கு ஒன்றுவது கட்டாயம் வாங்கி வாசிக்கவேண்டும். அல்லது பாடசாலைக்கு ஒன்றுவது கட்டாயம் வாங்கி படித்து மேன்மை அடையும்படியாய் நமது சங்க மெம்பர்களை வற்புறுத்திக் கூறுகிறேன். அதன்படியே சகோதரர்கள் பத்திரிகையை வாங்கி ஷை பத்திராதிபர் அவர்களுக்கு ஊக்கத்தை ஊட்டுவீர்கள் என்பது எனது முழுநம்பிக்கை.

## ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர் சங்கம். திருநெல்வேலி

இச் சங்க ஆசிரியர்கள் 21-'-34 கூட்ட தீர்மானப்படி 3-3-34ல் மேன்மை தங்கிய வைஸிராய் பீகார் பூகம்ப கஷ்ட நிவாரண நிதிக்காக "ஸ்ரீ ராம தாஸர்" நாடகம் ஒன்றை ஜில்லாக் கலக்டர் ம-ா-ா-ஸ்ரீ பி. ராமா ராவ் சி. ஐ. யி, ஐ. சி. எஸ் அவர்களின் ஆதரவிலும் முன்னிலையிலும் இரவு 9-மணி முதல் 2-மணி வரையில் இவ்வூர் கணபதி விலாஸம் கொட்டகையில் வெகு விமரிசையாக நடத்தினார்கள்.

அதில் மதுரை மெஸர்ஸ் நாகய்யா அண்டு ஸன்ஸிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த டிரஸ், ஸீன்களும், இச் ஜில்லா லோகல் பண்டு ஆடிட்டர் ஸ்ரீமான் கெ. எஸ். சங்கரய்யர் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரிய ஆக்டர்கள் பாடிய பாடல்கள், சம்பாஷணை அபிநயங்களும் பார்ப்போர் கேட்போர் நேத்ர சுரோத்ரங்களை கவரத்தக்க இனிமையாக இருந்தன.

அதிலும் அதில் வழை பீகார் பிரஜைகளின் பால் முன்னவனை முன்னின்று தழுவியதுபோல் இச் ஜில்லா ஆசிரியர்கள், பிரஜைகள், சர்க்கார் ஆபீஸர் முதலியவர்களின் நன் முயற்சியால் (பண வசூலும்) நிதியும் சுமார் ரூ. 1000 வரை வசூலாகி, செலவுபோக ரூ. 700 வரை கனம் ஜில்லா கலக்டர் அவர்கள் மூலம் ஷை நிதிக்கு செலுத்தப்பட்டது.

இன்னும் பணப்பாக்கிகள் வசூலானால் சுமார் ரூ. 100 வரையிலும் கூட செலுத்தப்படலாம் என எதிர்பார்ப்பதாகவும் தெரிகிறது. ஆகவே எல்லாம் வல்ல இறைவன் வழை பீகார் பிரஜைகளுக்கும், அவர்களை ஆதரிக்கும் அன்பர்கள் அனைவருக்கும் போதிய ஆதரவளித்து அருள்புரிவாராக.



## பொள்ளாச்சி ரேஞ்சு ஆசிரிய மானேஜர்கள் சங்கம்.

1934-ம் வருஷம் மார்ச்சு மீ 15தேதி பகல் 2-மணிக்கு பொள்ளாச்சி ஆர். ஸி. ஸ்கூலில் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் மலைய முதலியார் தலைமை வகித்தார்.

தற்போதுள்ள வறுமையின் காரணமாக கிராமாந்திரங்களில் முதல், இரண்டு வகுப்புகளுக்கு சம்பளம் தருவதில்லை. மற்ற 3, 4, வகுப்புகளுக்கு மட்டுமே சொற்பமான சம்பளம் சிலர் மட்டும் கொடுக்கிறார்கள். மேலும், நாளதுவரை, ஒன்று முதல், 4, 5, வகுப்புவரை பாடம் போதித்து வந்த ஓர் உபாத்தியாயர் தற்போது 1, 2. வகுப்பை வைத்துப் பாடம்போதித்துக் கொண்டு மற்ற வகுப்புப் பையன்களை சென்றல் ஸ்கூலுக்கு அனுப்பிவிட்டால், அந்த ஊரார்கள் இந்த உபாத்தியாயரை மதியாமல் போவதோடு கூட, அவருடைய ஜீவனும்சத்துக்கும் மார்க்கமில்லாது குடும்பத்தோடு பட்டினியிருக்கவும் நேருகிறது. மேலும் கிராமாந்தரங்களில் ஒரே வகுப்பில் 30 பிள்ளைகள் சேர்வதும் கடினம். 5 வகுப்புகளுக்கும் தகுதியான கட்டடம் கிடைப்பதும் பிரயாசையாயிருக்கும். ஒரு கால்கிடைத்தால் அதிக வாடகை கொடுக்க நேரிடும். (உபாத்தியாயர்கள் வசம் பணமிருப்பின் சொந்தத்தில் கட்டடம் கட்டிக்கொண்டால் மிகவும் நலம். தற்போது வயிற்றுப் பிழைப்புக்கே திண்டாடும் தன்மை வாய்ந்த அன்னவர் கட்டடம் கட்டுவது எங்ஙனம். ஆதலால் இது விஷயத்தைப்பற்றி ம-ா-ா-ஸ்ரீ டிப்டி இன்ஸ்பெக்டரவர்களுக்கு ஓர் விண்ணப்பம் சங்கத்தின் மெம்பர்களால் செய்யப்பட்டது.

## ஆத்தூர் தாலூக்கா போர்டு ஆசிரியர்களின் ஏழாவது மகாநாடு

கனம் நமது கல்வி இலாகா அதிகாரிகளிடத்தும், நமது தாலூக்கா போர்டாரிடத்தும் இம்மஹாநாடு தனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் சென்ற 6-வருஷ காலமாய் மதராஸ் எடுகேஷனல் ரூல்ஸ் 72-வது விதிப் பிரகாரம் சம்பளம் இன்கிரிமெண்ட், டியூடி அலவன்ஸ், முதலியவைகள் கிடைக்க வேண்டுமென்று கோரியிருக்கும் சமயத்தில் சேலம் தாலூக்கா போர்டாரால் 1932-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் ஒரு ரூபாய்க்கு 0-1-6 அணா வீதம் பிடித்திருந்தும், மறுபடி 1933-ம் வருடம் மே மாதம் முதல் அதாவது ஒருவருஷத்திற்குள்ளாகவே ரூ. 1-க்கு 0-2-2யை முதல் 0-3-11 வரையில் பலவிதமான பிடித்தம், சிக்க

னத்தை உத்தேசித்து சம்பளத்தைக் குறைக்கப்பட்டிருப்பதற்கு இம்மஹாநாடு மிக வருந்துவதுடன், ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமையை உத்தேசித்து காருண்யத்துடன் நிருத்திய தேதிமுதல் திருப்பிக் கொடுத்து மேற்படி உத்தரவை ரத்துசெய்யவேணுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மதராஸ் எடுகேஷனல் ரூல்ஸ் 72-வது விதியின்படிக்கின்றி குறைந்த வூதியம் பெற்றுவரும் ஏழை ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்தின் பொருட்டு ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுத்துவரும் கிராண்டை மேற்படி 72-வது விதியை அனுசரித்து சிக்கனத்தை உத்தேசித்துக் குறைக்காமல் கொடுக்க வேணுமாய் அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த போர்டில் இரண்டாம் தடவையாக சம்பளம் குறைத்த பொழுது எங்கள் ஸ்கேலின் உரிமைகள் பாதிக்கப்பட்டால் செல்வ நிலை உயருங் காலங்களில் இழந்த சம்பளத்தைத் திரும்பப்பெற முடியாமல் போவதோடு இப்போதே எங்கள் பிராவிடண்டு போனஸிலும் கஷ்டப்படும்படி நேரிடுவதால் எங்களுக்கு ஏற்பட்ட ஸ்கேலை மாற்றுமல் டெம்பரவரி பிடித்தம் என்று உத்திரவு செய்ய வேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எங்கள் சம்பளங்களை ஈடுசெய்யவும், பின்னிட்டு போர்டில் கடன் வராமலிருப்பதற்கும் எங்கள் சிற்றறிவுக்கெட்டிய அடியிற் கண்ட சில விஷயங்களை சேலம் ஆத்தூர் தாலுக்கா போர்டார் அவர்கள் கவனத்திற்கு மிகவும் தாழ்மையுடன் கொண்டுவர இம்மஹாநாடு தீர்மானிக்கிறது.

ஆரம்ப ஆசிரியர்களின் மக்கள் போதனு முறைப் பாட சாலையில் சேர மனுச்செய்துக்கொள்ளும் போதும் அவர்கள் விண்ணப்பத்திற்கு முதலிடம் கொடுக்க வேணுமாயும், ஏற்கனவே வழக்கத்திலிருந்த மாதிரி ஆசிரியர்களின் அறிவு விருத்தியாக வாராந்திர, மாதாந்திர, பத்திரிகைகளை வரவழைத்துக் கொடுக்க வேணுமாயும், ஒவ்வொரு உபாத்திமைச் சங்கத்திற்கும் ஒவ்வொரு ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேணுமாயும், டியூடி அலவன்ஸிலும் சாதர்வார் தொகையிலும் சுவல்ப அனுக்களைத் திருப்பிக் கொடுக்க மேணுமாயும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதர போர்டுகளில் கொடுத்துவரும் உருது முன்ஷி அலவன்ஸ்



நமது போர்டிலுள்ள உருது முன்ஷிகளுக்கும் கொடுக்கவேணுமாய் இம்மஹாநாடு வணக்கத்துடன் கேட்கிறது.

## பொள்ளாச்சி ரேஞ்சு ஆசிரிய மானேஜர்கள் சங்கம்

பொள்ளாச்சி ரேஞ்சு ஆசிரிய மானேஜர்களின் சங்கம் 1934ளு ஜனவரிமீ 18உ பகல் 2-மணிக்கு பொள்ளாச்சி ஆர். ஸி. ஸ்கூலில் சங்கம் வழக்கம்போல கூடிற்று.

"இச் சங்கத்திற்கு உங்களால் கொடுக்கப்படும் சந்தா வசூலைக் கொண்டு என்னும் சங்கம் சோர்வின்றி நடத்த இயலாது. அதற்காக சிறிது மூலதனம் வேண்டும் அவ்வித மூலதனம் குறைந்த வருவாயுள்ள உங்களால் ஏற்படுத்த இயலாது ஆதலால் 21-12-33 தேதி தீர்மானம் 6—33ல் எடுத்துக் கூறியபடி நீங்கள் யாவரும் ஒற்றுமையுடன் உங்கள் பாடசாலைகளில் கவர்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே கம்பெனியார் புஸ்த்தகத்தை வாங்கி உபயோகித்தால், அவர்களால் கொடுக்கப்படும் கமிஷனை அதற்காக ஏற்படும் சிலவு வகையறுக்கள் போக மீதியுள்ள தொகையையே மூலதனமாக ஏற்படுத்தலாம். அவ்விதம் சில பக்கங்களில் நடைபெற்றும் வருகிறது. மூலதனமாகிய தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுவர முயற்சிக்கிறார்கள்.

15-2-34-ம் தேதி நடைபெற்ற சங்கத்தின் நடவடிக்கைகளின் ரிப்போர்டு.

(12-1-32) தேதியில் அங்கீகாரமான பாடசாலைகளில் தலைமை அல்லது உதவியாக இருந்து வேலைபார்த்து வந்த உபாத்தியாயர்களுக்கு எப்போதும் எல்லா இடங்களிலும் முன்போலவே வேலைபார்த்து வரவும், சௌகர்யக் குறைவால் வேறு இடத்தில் பாடசாலை நியமனம் செய்யின் அவர்கள் படிப்பு முதலிய யோக்கியாம்சத்தைக் கவனியாது, அப்பாடசாலையை அங்கீகரித்துக் கொள்ளவும், மானேஜ்மெண்டு மாறுதல் விண்ணப்பங்களையும் அங்கீகரித்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

எல்லாத் திரவிய பாடசாலைக் சட்டிடங்களுக்கும் வாடகைவிதித்து அவ்வாடகையை டீச்சிங் கிராண்டுடனாகவோ அல்லது வேறாகவோ கொடுத்துதவ வேண்டுமென்பது.

ஜில்லாக் கல்வி கௌன்சலில் ஒவ்வொரு ரேஞ்சுக்கும் குறைந்தது ஒரு மெம்பராவது இருக்கும்படி சிபார்ஸ் ஆக வேண்டுமென்பது

பாடசாலை விதாசாரம் இன்ஸ்பெக்டிங் ஆபீஸர் சிபார்ஸ் செய்யப்படும் கிராண்டையாவது பிடித்தமில்லாது கொடுத்துதவ வேண்டுமாகவும் கனம் டிப்டி டைரக்டர் துரையவர்களை இச் சங்கம் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கின்றது

எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டன.

ஷை சங்கத்தின் பொதுக்கூட்டமொன்றில் திரு. எஸ். வி. கோபால் ஐயங்கார் அவர்களை தலைவராகவும், திரு எம். சுந்தரராஜலு நாயுடு அவர்களை காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இன்னும் ஒவ்வொரு அங்கத்தினரும் "ஆரம்பக் கல்வி" பத்திரிகைக்கு சந்தாதாரராக சேர்ந்து வாசித்து ஆரம்பக் கல்வி யுலகில் நடைபெறும் ஒவ்வொரு விஷயத்தையும் அறிந்துகொள்ளும்படி தீர்மானிக்கப்பட்டது.

## தம்பிரான் தோழன் தமிழ்ச் சங்கம் திருவாரூர்.

இச் சங்கத்தின் 8-வது கூட்டம் அறுபத்து மூவர் குரு பூசை மடத்தில் 4-3-34 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30க்கு இவ்வூர் முன்சிபல் எலிமெண்டரி ஸ்கூல் தலைமையாசிரியர் திரு. எ. தியாகராஜ தேசிகரவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தியாகராஜ டிஸ்பென்சரி கம்பவுண்டர் திரு, டி. எஸ். முத்துவேலுச் செட்டியாரவர்கள் எயர்கோன் கலிக்காம நாயனார் என்னும் பொருள் பற்றியும் நன்னிலம் போர்டு ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிட் திரு, அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள், காழிப் பிள்ளையார், காருண்யம் என்னும் பொருள் பற்றியும் ஓர் அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

## பொட்டல் புதூர் ஆரம்ப ஆசிரிய சங்கம்

ஆழ்வார் குரிச்சி ஹயர் எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர் மேனேஜர் சோஜே அய்யர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

முந்தின 10-2-34-ல் நடந்த கூட்டத்தின் நடவடிக்கை வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

வெள்ளிகுளம் ஆதித்திராவிடா ஸ்கூல் டீச்சர் தேவேந்திர உபாத்தியாயரால் 2-ம் வகுப்புக்கு செய்யுள் பாடம் கற்பிக்கப்பட்டது.

வாகைக்குளம் ஆதித்திராவிடா ஸ்கூல் எம். சுப்பையா உபாத்தியாயர் அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ் என்ற உபந்யாசம் எடுத்துக்கொண்டவர் லீவ் லெட்டர் அனுப்பி விட்டபடியால் திரு



மலையப்புரம் டீச்சர் கெ. சுப்பிரமணிய உபாத்தியாயரால் ஷை வியாஸம் நடைபெற்றது.

ஆரம்பக் கல்விக்கு சந்தா ரூ. 1—0—0 எம். ஓவில் அனுப்பிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.


# உத்தம ஆசிரியன்

## உபாத்தியாயர்களுக்கு உகந்த உயிர்த்தோழன்

எலிமெண்டரி பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் உணரவேண்டிய எல்லா விஷயங்களும் இந்நூலின் கண் பொலிந்து கிடக்கின்றன. இந்நூலின் சிற்சில பாகங்கள் 'ஆரம்பக் கல்வி' பத்திரிகையில் அவ்வப்போது வெளிவந்திருக்கின்றன. இன்னும் பற்பல விஷயங்களுடன் சுமார் 200 பக்கம் அளவில் வெளிவந்திருக்கின்றது. இத்துறையில் இதுவே முதன்மையானது. பல பத்திரிகைகளும் ஆசிரியர்களும் புகழ்ந்துரைக்கப்பட்டது. விலை அணா 12.

## வாசுதேவ சாஸ்திரி அல்லது உண்மை உயர்வு

சுமார் 40 வருஷகாலமாக எதிர்பார்த்த நாவல் வெளிவந்திருக்கின்றது. கமலாம்பாள் சரித்திரத்திற்கு இணையானது. அதன் மகிமையை உணர்ந்தவர்கள் இதைப்படிக்க முன்வருவார்கள், அழகமைந்த நான்கு வர்ண சித்திரப்படம் முகப்பு கொண்டது. விலை ரூ. $1\frac{1}{2}$.

மங்கையின் முத்தம்:—மங்கையரை அழகுபெற மித்தமிடும் ஆயிரம் முறைகள். பலவித அழகிய போட்டோ படங்களுடன் சொல்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. விலை ரூ. 2.

3 ரூபாய் மணியார்டர் செய்பவர்களுக்கு 3 புஸ்தகங்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.


வசந்தமணி புக் டிபோ
நெ. 5, ராமசாமி தெரு,
சென்னை.

# 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற தேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

40 மாத்திரைகள் அடங்கிய

## மதனமஞ்சரி




இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி தேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்.

இனம்! வைத்திய வித்தியா இனம்!!

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் செலவு இல்லாமல் அனுப்பப்படும்.

மதன மஞ்சரி பார்மஸி, 1-94 சைனு பஜார் ரோட், மதராஸ்.

---

# சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும். 32 மாத்ரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா. 1.

இனம்! இனம்!! இனம்!!!

## 'இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி'

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்

26, பிராட்வே, மதருஸ்.

---

காலஞ் சென்ற ரூவ் சாஹிப்

தி. ம. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்

இயற்றிய

## இனிய தமிழ் நாவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கமலாட்க்ஷி | .... | .... | 1 | 12 | 0 |
| விஜய சுந்தரம் | .... | .... | 2 | 0 | 0 |
| ஞான சம்பந்தம் | .... | .... | 1 | 4 | 0 |
| சிவ ஞானம் | .... | .... | 1 | 4 | 0 |
| ஞானப் பிரகாசம் | .... | .... | 1 | 12 | 0 |
| ஹரிச் சந்திரா (நாடகம்) | | .... | 1 | 0 | 0 |

ஆரம்பக் கல்வி புத்தகசாலை,

94-95, புதுத் தெரு, மண்ணடி மதராஸ்.